

## ரஞ்சனின் வஞ்சனை 03

## ஞானசாரரின் 10 நளீமிக்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள்

## பேர்லின் உச்சிமாநாடும் லிபியாவின் அரசியல் எதிர்காலமும் 07










# மீள்பார்வை


මීල්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/135/NEWS/2020 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 431 • 24 ஜனவரி 2020 வெள்ளிக்கிழமை • ஜமாதுல் அவ்வல் 1441 • விலை 40.00







# ஜம்இய்யதுல் உலமா அரசியலில் ஈடுபடுகிறதா?

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் பின்னணியில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பிரதிநிதிகள் அல்லது அங்கத்தவர்கள் நேரடியாகவும் மறைமுகமாவும் செயற்பட்டு வருவதாக களத்தில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை முஸ்லிம்களின் தலைமைத்துவ சபையாகச் செயற்படுகின்ற ஜம்இய்யதுல் உலமா, எதிர்வரும் தேர்தலில் முஸ்லிம்கள் எந்த நிலைப்பாட்டை எடுப்பது என்பது தொடர்பில் சரியான தீர்மானமெடுக்க முடியாமல் இருக்கும் நிலையில் ஜம்இய்யதுல் உலமா என்ன நிலைப்பாட்டை எடுக்கப் போகிறது என்பதில் முஸ்லிம் சமூகம் ஆர்வமாக இருக்கிறது. (பக். 11)

## தாய்ப்பால் ஊட்டுவதில் இலங்கைக்கு முதலாவது இடம்

உலக சுகாதார அமைப்பின் தரப்படுத்தல்படி குழந்தைகளுக்கு தாய்ப்பால் ஊட்டும் 120 நாடுகளில் இலங்கை முதலாவது இடத்தில் உள்ளது என பால் மா பாவனையினால் ஏற்படும் சுகாதார விளைவுகள் தொடர்பாக தேசிய வைத்திய சாலையில் நடைபெற்ற தெளிவு படுத்தும் நிகழ்வில் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் டொக்டர் அனில் யாசிங்க தெரிவித்தார். (பக். 11)

## அரசின் SDG வேலைத்திட்டத்துக்கு பாராட்டு



பேண்தகு அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் (SDG) இலங்கை காட்டும் வளர்ச்சி நிலைக்கு ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹெனா சிங்கர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

வறுமை ஒழிப்பு, காலநிலை மாற்றம், அரச நிறுவனங்களின் டிஜிட்டல் மயமாக்கம், காணாமற் போனோர் தொடர்பான பிரச்சினையை முகாமைத்துவம் செய்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கும் ஐநா தூதுவருக்கும் இடையில் கலந்துரையாடல் நடைபெற்றது. (பக். 11)

## பாதுகாப்புக்காக இந்தியா 50 மில்லியன் டொலர் உதவி



இலங்கைப் பாதுகாப்புப் படைக்குத் தேவையான உபகரணங்களை வாங்குவதற்காக இந்திய இலங்கைக்கு 50 மில்லியன் டொலர்களை வழங்கவிருப்பதாக இலங்கை வந்து ஜனாதிபதியைச் சந்தித்த இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் துவால் தெரிவித்தார். இரு தரப்பு உறிவினைப் பலப்படுத்துவதற்கான விடயங்கள் பற்றிப் பேசப்பட்டபோது பாதுகாப்புக்கான ஒத்துழைப்பைப் பலப்படுத்துவது முக்கியத்துவம் கொடுத்துப் பேசப்பட்டது.

இரு நாடுகளுக்குமான பாதுகாப்பு விடயம் தொடர்பில் கடல்வழிப் பாதுகாப்பினை வளப்படுத்தல், கடல்பாதை பாதுகாப்புத் தொடர்பில் ஒத்துழைப்பை வழங்குதல் என்பவை தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன. இந்திய, இலங்கை, மாலைதீவு நாடுகளுக்கிடையில் கடல்வழி வலயங்கள் (பக். 11)

## ஐ.நா. நிரந்தப் பிரதிநிதியாக ஊடகவியலாளர் சந்திரப்பெரும



ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதியாக சிரேஷ்ட ஊடகவியலாளர் சீ.ஏ. சந்திரப்பெருமவை நியமிப்பதற்கு ஜனாதிபதி அலுவலகம் சிபாரிசு செய்திருக்கிறது. இது தொடர்பிலான இறுதி முடிவை வெளிநாட்டமைச்சு எடுக்கவுள்ளது.


தி ஐலன்ட் பத்திரிகையின் பத்தி எழுத்தாளரான இவர், கோட்டாஸ் வோர் என்ற புத்தகத்தை எழுதியவராவார். எல்ரிரிஈயினரை இராணுவ ரீதியில் தோற்கடித்ததில் ஜனாதிபதி கோத்தாபயவின் பங்கு பற்றி இந்த நூல் விளக்குகிறது. ஐநா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் மார்ச் மாதத்தில் பேசப்படவுள்ள நிலையிலேயே இவரது நியமனம் நிகழவிருக்கிறது.

## பிரதமரின் கீழுள்ள 8 அமைச்சுக்களுக்கு பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன



இது வரை வர்த்தமானியூடாக அமைச்சுக்களின் பொறுப் புக்கள் வெளியிடப்பட்ட 19 இராஜாங்க அமைச்சுக்களில் 08 அமைச்சுக்கள் பிரதமரின் கீழ் உள்ள அமைச்சுக்களின் இராஜாங்க அமைச்சுக்களாக அமைந்துள்ளன. இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர்கள் தமது அதிருப்தியை வெளியிட்டு வருகின்றனர். (பக். 11)

## வேட்பாளர்களாக வியத்மக உறுப்பினர்கள்



எதிர்வரும் பொதுத் தேர்தலில் வியத்மக உறுப்பினர்கள் வேட்பாளர்களாக நிறுத்தப்படுவதில் எந்தச் சிக்கல்களும் இல்லை என பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

வியத்மக என்பது ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவை தேர்தலில் வெல்ல வைப்பதற்கும், அவரது கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காகவும் ஒரு நோக்கமாக... நடைறியச் செய்து முன்கொண்டு செல்வதற்குமாக புத்திஜீவிகளால் உருவாக்கப்பட்ட அமைப்பாகும். இந்த அமைப்பை உருவாக்கியவர்கள் இப்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலும், விமல் வீரவன்சவுடைய தேசிய சுதந்திர முன்னணியிலும், உதய கம்மன்பிலவுடைய பிவிதுரு ஹெல உருமயவிலும் இருக்கின்றனர். வியத்மகவை உருவாக்கிய அணியிலிருந்து பலருக்கு பல மாவட்டங்களில் இருந்தும் வேட்பாளராவதற்கான வாய்ப்பு வழங்கப்படும் என தான் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சிரேஷ்ட உறுப்பினர்கள் வியத்மக வேட்பாளர்களை ஏற்றுக் கொள்வார்களா எனக் கேட்டதற்கு, புத்திஜீவிகள் தம்மை மீறி விடுவார்களோ என்ற பயம் சில மாவட்டங்களில் சில தொகுதிகளில் இருக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

## நிலைமைகளை ஆராய்ந்த பின் ஜீஎஸ்பி ப்ளஸ் இனைத் தொடரத் தீர்மானம்



இலங்கைக்கான ஐரோப்பிய யூனியனின் ஜீஎஸ்பி ப்ளஸ் வரிச்சலுகை 2023 வரை நீடிக்கப்பட்டுள்ளது. இது தானாக கிடைக்கின்ற ஒரு ஓட்டோமடிக் சலுகையல்ல. நல்லாட்சி, சூழல், தொழிலாளர் உரிமைகள், மனித உரிமைகள் உள்ளிட்ட 27 சாசனங்களின் நடைமுறையை வைத்தே இந்த வரிச் சலுகை வழங்கப்படுகிறது என ஐரோப்பிய யூனியன் தூதுக்குழு தெரிவித்திருக்கிறது.

இந்தத் தூதுக் குழுவுடனான சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிட்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, 60 வீதமான இலங்கையின் ஆடை உற்பத்திகள் ஐரோப்பிய யூனியனின் அங்கத்துவ நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுவதாகவும், இதன் மூலம் வருடமொன்றுக்கு 5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமாகக் கிடைப்பதாகவும் தெரிவித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமூக வலைத்தளங்களில் அலசப்படுபவை

# கடந்த வாரக் கட்டுரைகள் பற்றிய வாசகர் கருத்து

## இனியும் விடக் கூடாத தவறு

### இஹ்ஸான் பாஸி

நடுநிலை அற்ற பக்கச் சார்பான கட்டுரை இது. உம்மதுல் வுஸ்தா என்பது நடுநிலை சமூகம் அதாவது நீதியை நிலை நாட்டும் சமூகம். நீதியை நிலை நாட்டல் என்பது விழுமியங்களுக்கு சார்பாக நடத்தல்.

இருபக்க பிரச்சினையின்போது விழுமியங்களுக்குச் சார்பாக நடப்பதே நடுநிலை: நீதி.

ஜனநாயக விழுமியங்கள் புறக்கணிக்கப்படும்போது விழுமியங்களுக்குச் சார்பாக இருப்பதே நடுநிலை நீதி. மைத்திரியால் ரணில் பதவி அகற்றப்பட்ட போது அது ஜனநாயக விழுமியத்துக்கு எதிரான செயல் என்பதாலே மக்கள் பாதைக்கு வந்தனர். குறித்த விழுமியம் வாழ்வதற்காக ரஊப் ஹகீம் போராடியது நீதிக்கான போராட்டம். அது ரணிலுக்கு சார்பாகவோ ரஊப்ஹகீமுக்குச் சார்பாகவோ அமைந்தாலும் ஜனநாயக விழுமியத்தைப் பாதுகாக்கவே போராடினார். இதைக் கொச்சைப்படுத்தி இக்கட்டுரை எழுதி இருப்பதால் இக்கட்டுரையை நீதியானது நடுநிலையானது என்று எப்படிச் சொல்ல முடியும். விழுமியத்தை மையப்படுத்தாத ஓட்டுமொத்த பக்கச் சார்பான கட்டுரை இது.

### முஹம்மத் நௌஷாத்

இதில் உண்மையும் உள்ளது. சில தவறுகளும் உள்ளன. நல்லதை எடுப்போம். தவறுகளை விடுவோம்.

### சுல்பிகார் அலி

கட்டுரை நடுநிலை தவறி எழுதப்பட்டிருப்பது போல் தெரிகின்றது.

### ஸபூர் ஆதம்

குறித்த கட்டுரை ஒரு வரலாற்றைப் பற்றி பேசுகிறது. கசப்பானதாக இருந்தாலும் வரலாறு அதே!

### முஹம்மத் ஸைப்

இவர்களுக்கு அரசியல் பற்றிய எந்தப் பார்வையும் கிடையாது. எப்போதுமே சிறுபான்மையினர் பெரும்பான்மையினரின் காலில் விழுந்து கிடக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள் போல. NGO வேலை செய்தால் மூளை இப்படித்தான் வேலை செய்யும். உலகெங்கிலும் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களை சிதைப்பது NGO க்களே. இன்று முஸ்லிம் சமூகத்தில் இருக்கின்ற அதிகமான இயக்கங்கள் NGOவாகவே தொழிற்படுகின்றன.



### ஷிஹாம் ஸுஹைல்

சிறந்த ஒரு ஆய்வுக் கட்டுரை, இது போன்ற ஆய்வுகளால் தான் சமூகத்தை வழி நடாத்த வேண்டும், நடுநிலை சிந்தனை தான் சமூக இருப்பை உத்தரவாதப்படுத்தும்.

### நியாஸ் ஸாலி

மீள்பார்வை எம்மை மீட்டிப் பார்க்க வைத்த காலம் ஒன்றிருந்தது. தெளிவாக அநீதி இழைப்போருக்குத் துணை போகும் கட்டுரை. மக்கள் விழிப்புடன் இருக்கின்றனர்.

இந்த கட்டுரையாளர் சொல்ல வருவது என்ன? சிந்தனையை தூண்டும் ஒரு பத்திரிகை தனது வாசகர்களை அடிமைத் தளையிலிருந்து மீட்டெடுக்க வேண்டிய பொறுப்புள்ளதாக எண்ணுகிறேன். சில விடயங்கள் உடன்பாடானது, எனினும் நடுநிலை மறந்த கட்டுரையாகவே பார்க்க முடிகிறது.

### இஹ்ஸான் பாஸி

அல்ஹஸனாத்தில் அலி ஸப்ரீயின் கருத்து பிரசுரிக்கப்பட்டுள்ளது. அல்ஹஸனாத்தின் ஆசிரியர் கருத்து பெரும்பான்மை வாதத்துக்குச் சார்பாக நெய்யப்பட்டுள்ளது. மீள்பார்வை மீடியா ஸென்டர் தளத்தில் கோட்டா சார்பு கட்டுரை வெளிவந்துள்ளது.

இவ்வூடகங்களை, இயக்கங்களைத் தடை செய்யாமல், பெரும்பான்மைவாத விருப்புகளுக்கு இணங்க முஸ்லிம் புத்திஜீவிகள் எழுதவும், முஸ்லிம் சமூகத்துக்கு உள்ளால் அவைகளைக் கொண்டு செல்லவும் ஊடகங்களையும் இயக்கங்களையும் மாற்றுவதில் அவர்கள் வெற்றி பெறுவார்கள்.

நாம் குற்றவாளிகளாகப் பயங் காட்டப்பட்டுள்ளதால் இந்த மூளைச் சலவையில் இருந்து எம்மால் வெளிவர சிந்திக்க முடியாமல் இருக்கும். நளீமியா கூட இந்த மூளைச் சலவைக்கு விதிவிலக்காக இனி அமையாது. ஏனெனில், நாம் பயங் காட்டப்பட்டிருக்கிறோம். அடிக்கடி பொதுபல சேனா நளீமிக்களை விமர்சிப்பதின் அரசியல் இதுதான். நாம் எம்மை அறியாமலே அவர்களது அஜன்டாவுக்குள் விழுகிறோம்.

இந்த அஜன்டாவில் முழுமையாக முஸ்லிம் சமூகம் விழுந்து விடாமல் இருக்க சிந்திப்பதுதான் பகிர்வின் தஜ்தீத் பணி.

### முஹம்மத் அஜாஸ்

ராஜாக்களுக்கு ஆலவட்டம் பிடிப்பதே சமூகத்தின் இருப்புக்கும் பாதுகாப்புக்கும் பொருத்தமானதெனப் பகிரங்கமாகவே எழுதவும் பேசவும் தொடங்கியுள்ளனர் சில முஸ்லிம் மேதாவிகள்...

அல்ஹஸனாத்தும் மீள்பார்வையும் கூட மறைமுகமாக இந்தக் கொந்தராத்தைக் கையில் எடுத்துள்ளனவா எனும் பலமான சந்தேகம் எழுந்துள்ளது!

### அய்யூப் அஸ்மின்

அல்ஹஸனாத் மற்றும் மீள்பார்வை ஆகிய வெளியீடுகள் முஸ்லிம் மக்கள் மத்தியில் இஸ்லாமிய சிந்தனையைச் சுமந்து செல்லும் இரண்டு முக்கிய ஊடகங்கள் என்று குறிப்பிட முடியும். அவற்றின் இறுதி வெளியீடுகளின் ஆசிரியர் தலைப்புக்கள் பெரும்பான்மை வாதத்தோடு ஒத்துப் போதல் என்னும் கருத்தை மெல்ல மக்கள் மயப்படுத்தும் போக்கில் அமைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இங்கு நீதியை, உண்மையை, நன்மையைப் பேசும் நிலையில் இருந்து பிளைப்புவாதத்தை நோக்கி இவை மெல்ல நகர்கின்றன என்பதை அவதானிக்க முடிகின்றது.

இலங்கை முஸ்லிம் மக்களுக்கு இஸ்லாமிய இயக்கங்கள் ஒரு பாரிய சாபக்கேடு என்னும் எனது ஆணித்தரமான நம்பிக்கைக்கு இன்னுமொரு சான்று கிடைத்திருக்கின்றது. குறித்து வைத்துக் கொள்ளுங்கள்; ஒரு பாரிய மனிதப் பேரவலம் இலங்கை முஸ்லிம் மக்களின் மீது நிகழ்த்தப்பட்டு அவர்கள் அழிக்கப்படுவார்கள் அதற்கான முழுக் காரண கர்த்தாக்களாக இஸ்லாமிய இயக்கவாதிகளும், முல்லாக்களுமே வியாபார அரசியல்வாதிகளுமே, வாசி இருக்கும் பக்கத்திற்கு சாயும் முதலாளிகளுமே இருப்பார்கள்.

## முஸ்லிம் பிரதிநிதித்துவம் – கண்டி

### ஹாஸிக்

கணிப்பின்படி இன ரீதியான கணிப்பீடு என்றால் கணிசமான சரிவு முஸ்லிம்களுக்கு ஏற்படுவது நிச்சயம்.பொதுஜன பெரமுனவில் போட்டியிடுபவர்களால் முஸ்லிம் வாக்குகள் திண்மக் கழிவாக வீணாக இருக்கிறது. அதுதான் அவர்களின் இலக்கும் கூட. பொதுஜன பெரமுனவால் வர இருப்பவர்களால் செய்ய முடியுமானதுவும் அவ்வளவு தான். ஆனால் குறிப்பிட்ட நபர்களுக்கு சாக்குகள் நிரம்ப கட்சி வழி சமைத்துக் கொடுத்து விடும்.

ஐ.தே.க.இல் கேட்பவர்களும் வெற்றி பெற்ற பின்பு கட்சி தாவ இருக்கிறார்கள்.

இம்முறை இரண்டு கட்சிகளினதும் நம்பிக்கை இழந்தவர்கள் பலரும் விஷேடமாக பச்சை இரத்தங்கள் ஜே.வி.பி இற்கு திரும்ப இருக்கிறது. ஜே.வி.பி இன் சார்பில் சகோதரர் லால் கான்த, சகோதர் கயான், நஜா முஹம்மட் இஸ்லாஹி ஆகியோர் பெயர் தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது. கட்சி தாரிக் ஷேக் அவர்களை நிறுத்த முயற்சி செய்தாலும் இன்று வரை அவர் அதற்கான விருப்பத்தினை தெரிவிக்கவில்லை.

# பேராசிரியர் முராத் வில்ப்ரட் ஹொப்ஸ்மன்

• இயான் மிஷ்அல்

இஸ்லாத்தின் உட்பகுதிகளை ஆராயவும் விளக்கவும் உள்வீட்டிலிருந்து உலமாக்கள் செய்யும் மகத்தான பணிக்கு அப்பால் இஸ்லாத்தை வெளியிலிருந்து அவதானித்து, இஸ்லாத்தை வெளி உலகுக்கு ஏற்ற வகையில் வடிவமைத்து முன்வைப்பதில் பிறவி முஸ்லிம்கள் அல்லாதவர்கள் பெரும்பங்கு வகிக்கிறார்கள். தனது 51 ஆவது வயதில் இஸ்லாத்தைத் தழுவிய ஜேர்மனியப் பேராசிரியர் முராத் வில்ப்ரட் ஹொப்ஸ்மன், இஸ்லாம், தி ஓல்டர்னேடிவ் என்ற நூலின் மூலமாக நவீன உலகின் வீழ்ச்சிக்கான தீர்வாக இஸ்லாத்தை முன்வைக்கிறார்.

1992 இல் இந்த நூல் ஜெர்மனியில் வெளியிடப்பட்ட போது, ஜெர்மனிய இடதுசாரிகளும் பெண்ணியலாளர்களும் ஊடகங்களிலும் பாராளுமன்றிலும் அவருக்கு அடிப்படைவாதி என முத்திரை குத்தினர். மேற்குலகம் முன்வைத்து நடைமுறைப்படுத்துபவற்றுக்கு மாற்றீடொன்று இருக்க வேண்டும் எனவும், அதுதான் இஸ்லாம் எனவும் இந்த நூலில் குறிப்பிடும் அவர், 21 ஆம் நூற்றாண்டுக்குள் நுழையும் போது உலகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வு இஸ்லாம் தான் என இந்த நூலில் விளக்குகிறார்.

இஸ்லாம் பிற்போக்கானது எனவும், பயங்கரவாதம் எனவும் எடுத்துக் காட்ட முனையும் மேற்கத்தேய சக்திகளுக்குப் பதிலளிக்கும் விதத்தில் தவறாகப் புரியப்பட்டுள்ள 20 விடயங்களை இவர் இந்த நூலில் தெளிவுபடுத்துகிறார். இந்த நூல் அரபு மொழியிலும் அல் இஸ்லாம் க பதீல் எனும் பெயரில் வெளிவந்திருக்கிறது. இந்த நூலின் தொடராக இஸ்லாம் 2000 எனும் நூலும் இவரால் வெளியிடப்பட்டுள்ளது.

நீண்ட காலம் நோய்வாய்ப்பட்டிருந்த இவர் ஜனவரி 13 ஆம் திகதியன்று தனது 88 ஆவது வயதில் காலமானார். 1931 இல் ஒரு கத்தோலிக்கராகப் பிறந்த இவர் 1980 இல் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் தனது முதுமாணிப் பட்டத்தை முடித்த பின்னர் மியூனிச் பல்கலைக்கழகத்தில் சட்டத் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்று இரண்டாம் உலகப் போரின் பின்னர் சீர்குலைக்கப்பட்டிருந்த தனது நாட்டின் மதிப்பை உயர்த்துவதற்காக ஜேர்மன் வெளிவிவகாரச் சேவையில் 1961 முதல் 1994 வரை சேவையாற்றினார்.

முதலில் அவர் அணுப் பாதுகாப்பு தொடர் பான விவகாரங்களுக்கான விஷேட நிபுணராக அல்ஜீரியாவில் கடமையாற்றினார். 1983 முதல் 1987 வரை பிரஸல்ஸில் நேட்டோவின் தகவல் பணிப்பாளராகப் பணியாற்றி பின்னர் 1987 முதல் 1990 வரை அல்ஜீரியாவுக்கான தூதுவராகவும் 1990 இலிருந்து 1994 வரை மொரோக்காவுக்கான தூதுவராகவும் பணியாற்றினார். ஜேர்மன் முஸ்லிம்களின் மத்திய கவுன்ஸில் (Central Council of Muslims in Germany) கௌரவ உறுப்பினராகவும் ஆலோசகராகவும் இவர் சேவையாற்றினார்.

தான் இஸ்லாத்தைத் தழுவியமைக்கான காரணங்களை Diary of a German Muslim (ஜேர்மன்) என்ற நூலிலும் Journey to Islam (ஆங்கிலம்) என்ற நூலிலும் இவர் அழகாகத் தெளிவுபடுத்தி உள்ளார். நீங்கள் எப்படி இஸ்லாத்தைத் தழுவினீர்கள் என வொஷிங்டன் ரிபோர்ட் பத்திரிகை இவரிடம் கேட்டதற்கு, நீங்கள் எப்படி காதலில் விழுந்தீர்கள் என்பதற்கு ஓர் ஆணோ பெண்ணோ விடையளித்தால் அது நிச்சயமாக காதலாக இருக்க முடியாது. எனது நிலையும் அது தான் என அவர் பதிலளித்திருந்தார்.

தான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்குப் பின்னணியாக அமைந்த மூன்று விடயங்களைச் சுட்டிக் காட்டும் அவர் முதலாவதாக தனது அல்ஜீரிய அனுபவம் பற்றிக் குறிப்பிடும்போது, அல்ஜீரிய சுதந்திரப் போராளிகள் பிரான்ஸ் படையினருடன் ஆறு மாத கால யுத்த நிறுத்த ஒப்பந்தமொன்றுக்கு இணங்கியிருந்தார்கள். இவர்கள் இந்த யுத்த நிறுத்தத்தை மீறச் செய்வதற்காக பிரான்ஸ் படையினர் இவர்களுடன் மிகவும் கடுமையாக நடந்து கொண்டார்கள். ஆனாலும் அவர்கள் தமது உடன்படிக்கையில் உறுதியாக இருந்தார்கள். அவர்களுக்கு இந்தளவு சக்தி எங்கிருந்து வந்தது என நான் தேடிப் பார்த்தேன். இவர்களுக்கு இந்தச் சக்தியை வழங்கிய அல்குர்ஆனை நான் படிக்கத் தொடங்கினேன். முழுமையாக இல்லாவிட்டாலும் மனதளவில் நான் முஸ்லிமாகிவிட்டேன். இதன் முதற்கட்டமாக கிறிஸ்தவக் கொள்கைகளை கைவிட்டு விட்டேன் என்கிறார்.

இரண்டாவது விடயமாக அவர் இஸ்லாமியக் கலைகளைக் குறிப்பி[illegible]



சகராக இருந்த இவர், விமர்சகருக்கு ஒரு தகுதி இருக்க வேண்டும் எனக் கருதினார். ஸ்பெய்னின் கிரனாடா, குர்துபா, அந்தலூஸ் நகரங்களின் இஸ்லாமியக் கலைகளைக் கண்டதன் பின்னர், இதைப் போல வேறு எந்தக் கலைகளும் என்னைக் கவரவில்லை என்று விவரிக்கிறார்.

தான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கான மூன்றாவது காரணமாக தத்துவங்களைக் குறிப்பிடும் அவர், உலகின் சிறந்த தத்துவவியலாளர்களாக முஸ்லிம்களே இருந்திருக்கிறார்கள். இப்னு ஸீனா, இப்னு கல்தூன், அல் கஸ்ஸாலி, இப்னு ருஷ்த் ஆகியோர் இவர்களில் முக்கியமானவர்கள். இவ்வளவு காலம் இவர்களை அறியாமல் இருந்ததற்காக என்னையே நான் நொந்து கொண்டேன் என்று தெரிவிக்கிறார்.

இஸ்லாமிய நாடுகளில் சேவையாற்றச் செல்லும் இராஜதந்திரிகளுக்கு இஸ்லாம் தொடர்பான அறிமுகத்தை வழங்கும் நிகழ்வொன்றை 1980 களில் ஜேர்மன் வெளிநாட்டுச் சேவைகள் அலுவலகம் ஏற்பாடு செய்திருந்தது. பேராசிரியர் முராதும் இதில் கலந்து கொண்டார். அன்றைய தினம் தனது மகனின் பிறந்த நாளாக இருந்ததால் மகனுக்கு விலைமதிக்க முடியாத பரிசொன்றை வழங்க அவர் [illegible] நடத்திய இமாமிடம் 14 பக்கங்களில் தனது ஆவலை எழுதிக் கொடுத்த பின் அடுத்த நாள் அதே இமாமின் முன்னிலையில் இஸ்லாத்தை ஏற்றார். தான் இஸ்ரேலுக்கோ வத்திக் கானுக்கோ இராஜதந்திரியாக அனுப்பப்படாமல் இருக்கும் வகையில் அவர் தான் இஸ்லாத்தை ஏற்றதை உடனடியாக வெளிநாட்டமைச்சுக்கு அறிவித்தார்.

இஸ்லாத்தை ஏற்றதன் பின்னர் இரண்டு தடவை கள் ஹஜ்ஜையும் ஐந்து தடவைகள் உம்ராவையும் முடித்துள்ளார். இவர் இமாமுக்கு எழுதிய 14 பக்க ஆவணம் பிரசுரிக்கப்பட்டு பல இடங்களிலும் விநியோகிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் தான் அவர் 'ஒரு ஜேர்மனிய முஸ்லிமின் டைரி' என்ற நூலை எழுதினார். இது தவிர Islam: The Alternative, Islam and Quran: An Introduction, Journey to Makkah, Religion on the Rise: Islam in the Third Millenium என்ற நூல்கள் உட்பட 13 புத்தகங்களை இவர் எழுதியுள்ளார். The Future of Islam in the East and the West இவரது இறுதி நூலாகும். 250 க்கும் மேற்பட்ட நூலாய்வுகளை இவர் செய்திருக்கிறார்.

இவரது மறைவு தொடர்பில் தனது அனுதாபத்தை வெளியிட்ட அமெரிக்க முஸ்லிம் அறிஞர் கலாநிதி யாஸிர் காழி, உண்மையிலேயே இவர் நமது காலத்தில் கிடைத்த பெரும் பேறு. அற்புதமான பாரம்பரியத்தையும் வரலாற்றையும் அவர் எமக்கு விட்டுச் சென்றுள்ளார் என்று தெரிவித்திருக்கிறார். அவர் இஸ்லாத்தை ஏற்றமை ஜேர்மனியின் தூதுவராகக் கடமையாற்றுவதற்குத் தடையாக இருக்கவில்லையா எனத் தான் கேட்டதற்கு வாய் விட்டுச் சிரித்ததாகக் கூறும் கலாநிதி யாஸிர் காழி, அவர் அதற்குத் தந்த பதிலையும் குறிப்பிடுகிறார். ''இது எனது சொந்தத் தெரிவு எனவும் இதனை நான் உங்களுக்குத் தெரியப்படுத்துவதாகவும் நான் ஜேர்மன் அரசாங்கத்துக்கு அறிவித்தேன். அதற்கு அவர்கள் அது எனது பணியைப் பாதிக்காத வரையில் எனது மதத்தைப் பற்றிய அக்கறை தமக்கு இல்லை எனத் தெரிவித்திருந்தார்கள்'' எனக் குறிப்பிட்டிருந்தார்.

எல்லாம் வல்ல அல்லாஹ் அவரது பணிகளை ஏற்றுக் கொண்டு அவரை அவனது உயர்ந்த சுவனத்தில் சேர்த்து வைப்பானாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஞ்சனின் வஞ்சனை

• பியாஸ் முஹம்மத்



2010 இல் ஆட்சியை மீண்டும் தொடர்வதற்கான மக்களாணை கிடைத்ததன் பின்னர் ஊடகங்கள் வாயிலாக மக்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலான பல சம்பவங்கள் நடந்தேறின. சூரியனுக்கு நிகரான மற்றுமொரு சூரியன் இலங்கையின் மத்திய பகுதியில் ஒளிர்வதாக செய்திகள் பரவின. நாட்டின் பல பாகங்களிலும் வித்தியாசமான வர்ணங்களில் அடிக்கடி மீன்மழை பொழிந்திருப்பதை ஊடகங்கள் அடிக்கடி எடுத்துக் காட்டின. விண்ணிலிருந்து வித்தியாசமான கழிவுகள் இலங்கைத் தரையில் கொட்டப்பட்டிருந்த தகவல்கள் பரவின. மக்கள் அத்தனையையும் ஆசியாவின் ஆச்சரியமாக அண்ணாந்து பார்த்துப் பரவசப்பட்டுப் போனார்கள். ஈற்றில் 2015 தேர்தலில் தான் அவர்கள் விழித்துக் கொண்டார்கள்.

பொதுவாக இலங்கை மக்கள் குழந்தைகளாக இருக்கும் போதே, தமது தேவைக்காக அழுத போதெல்லாம் வாயில் சூப்பியை மாட்டிப் பழக்கப்பட்டவர்கள். தமது தேவைகள் பற்றிக் குரலெழுப்ப முன்னரே பராக்குகளை நோக்கிக் கவனத்தைத் திசை திருப்பும் வித்தையை ஆளும் வர்க்கத்தினர் கச்சிதமாகக் கையாண்டு வருவது இன்றைய அரசியலிலும் நடக்கிறது. மக்களது தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் இருக்கும் என்ற நம்பிக்கை பாடசாலையில் படிக்கும் போது விளங்கா விட்டாலும், அரசியல் பாடம் அதனை விளக்கமாகக் கற்றுத் தருவது இப்போது புரிகிறது.

இலங்கை அணி கிரிக்கட் போட்டிகளில் வெற்றி பெறும் போதெல்லாம் மக்களின் கவனத்தை மறைத்து விலைவாசி உயர்த்தப்படுவது மக்களுக்குத் தெரியாததல்ல. துரதிர்ஷ்டவசமாகவோ அல்லது மக்களின் அதிர்ஷ்டவசமாகவோ இப்பொழுதெல்லாம் இலங்கை அணி வெல்வதில்லை.

இதற்கு அடுத்தபடியாக இலங்கை மக்களின் கவனம் ஊன்றியிருப்பது தொலைக்காட்சி நாடகங்களில். அந்த வகையில் கானியாவும் சுவிஸ் தூதரகமும், சம்பிக்கவின் கோர விபத்து, வெள்ளைவான் மர்மம், ஷானியும் ஷாபியும் என்ற தொடர்கள் ஓடி முடிய தற்போது ரஞ்சனும் வஞ்சனையும் எனும் தொடர் ஆரம்பமாகியிருக்கிறது. பழம் நழுவி பழக் கலவையிலேயே விழுந்த கதையாக பொதுத் தேர்தலுக்கு முந்திய களத்தில் பல விடயங்களைச் சாதித்துக் கொள்வதற்கு இது சாதகமாகியிருக்கிறது.

அரசியல்வாதிகளினதும் பிரபலங்களினதும் முகத்திரையைக் கிழிக்கும் விதமாக பல விடயங்கள் அடிக்கடி அவிழ்த்து விடப்படுவது அண்மைக் காலங்களில் நடந்து வருகிறது. விகிலீக்ஸ் புரளி கிளப்பி விடப்பட்ட போது அமளி துமளியாக இருந்த களநிலவரங்கள் அடங்கிப் போவதற்குள் பனாமா பேப்பர்ஸ் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தின. இவை எதுவுமே உள்நாட்டில் பாரிய தாக்கத்தைச் செலுத்தாதிருந்த நிலையில் ரஞ்சனின் குரல் பதிவுகள் தற்போது அந்த அனுபவத்தை நாட்டுக்கு வழங்கியிருக்கின்றன. 125,000 இற்கும் மேற்பட்ட ரஞ்சன் ராமநாயக்கவின் குரல் பதிவுகளில் ஒரு சிலவே தற்போது வரை வெளியிடப்பட்டிருக்கின்றன. ஏனையவை தொடர்பில் அவருடன் தொலைபேசியில் கதைத்தவர்கள் எல்லாம் அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

தனிப்பட்டவர்களின் அந்தரங்க லீலைகளையெல்லாம் அலசுவது நாகரிகமல்ல என்ற வகையில் ரஞ்சனின் செயல் நாகரிகமானதொன்றல்ல. நாகரிகம் என்பது ஒரு சமூகம் அல்லது இடம் சமூக, கலாச்சார வளர்ச்சியின் மேம்பட்ட கட்டத்தை அடையும் செயல்முறையாகும். இருக்கின்ற நிலையை விட கீழே செல்வது நாகரிக வீழ்ச்சியாகும். அந்த வகையில் தனிப்பட்டவர்களின் அந்தரங்கங்களை வெளியிடுவது அநாகரிகமானதாகும். பிக்பொஸ் பிரியர்களைப் போல அடுத்தவர்களின் அந்தரங்கங்களை ரசிக்கத் துடிப்பவர்களுக்கு இது சுவையானதாக இருக்கலாம். ஆனாலும் மனித நாகரித்தின் அளவுகோலில் இது மட்டமானதாகும்.

அந்த வகையில் ரஞ்சன் ராமநாயக்கவின் அநாகரிகமான செயற்பாடு நாட்டில் பரவாமல் சீர்படுத்துவது பற்றி நாடு, குறிப்பாக நாட்டின் பண்பட்ட மக்கள், சிந்திக்க வேண்டியிருக்கிறது. ஒருவருடைய குரலைப் பதிவு செய்வது அதனை எழுத்து வடிவில் கொண்டு வருவதற்காக மட்டுமே இருக்க வேண்டும், அதை விடுத்து ஒருவரது குரலைப் பதிவு செய்வதென்றால் அவரிடம் அது தொடர்பில் அனுமதி பெற வேண்டும் என்பது உலகம் ஏற்றுக் கொண்ட பண்பாடு. ஆனால் இலங்கையில் அனுமதியின்றி தொலைபேசி அழைப்புக்களைப் பதிவு செய்வது தொடர்பான சட்டங்கள் எதும் இல்லை என தகவல் தொடர்பு நிபுணர் பேராசிரியர் ரொஹான் சமரஜீவ தெரிவிக்கிறார். அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் இதற்கான சட்டம் இருக்கிறது. அங்கு ஒருவருடைய தொலைபேசி உரையாடலை அடுத்தவருடைய அனுமதி இன்றி பதிவு செய்வது தடுக்கப்பட்டுள்ளது என்கிறார் அவர்.

இதற்கென ஒரு நெறிமுறை வகுக்கப்படாவிட்டால் மனிதர்கள் மீதான அடுத்த மனிதனின் நம்பிக்கை முறிந்து போகிறது. அடுத்தவருடன் பேசும் போது கவனமாகப் பேசுவதற்கும் அல்லது பேசாமல் விட்டு விடுவதற்குமே மனிதர்கள் முனைவார்கள். இது மனிதர்களுக்கு இடையிலான தொடர்புகளைக் குறைத்து விடுகிறது. தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மனிதனின் அந்தரங்க வாழ்க்கையை தொலைத்து விட்டிருக்கிறது. யாரும் விரும்பாமலேயே சிசிடிவி கமராக்களுடாக அனைவரும் பின்தொடரப்படுகிறார்கள். தொலைபேசி உரையாடல்கள் தானியங்கி பதிவு செய்யப்படுகின்றன. ஒவ்வொருவருடைய கையிலிருக்கும் போனும், எந்த வடிவிலான கம்பியூட்டரும் அவரை அறியாமலேயே ஒருவரது நடத்தையை படம் பிடித்து விடுகின்றன. ஹோட்டல் அறைகளிலும் கழிவறைகள் குளியலறைகளிலும் பல்வேறு வடிவங்களில் உள்ள கமராக்கள் ஏதாவது தம்மைப் படம் பிடித்து விடுமோ என்ற பயம் அனைவரிடமும் தான் அப்பிக் கிடக்கிறது.

அந்த வகையில் இது ரஞ்சன் ராமநாயக்க மட்டும் செய்த ஒரு விபரீதமல்ல. கொல்லப்பட்ட ஊடகவியலாளர் லஸந்த விக்கிரமதுங்கவுக்கும் இந்தப் பழக்கம் இருந்திருக்கிறது. இன்னும் பலருக்கு இந்தப் பழக்கம் இன்றும் இருக்கிறது. 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தொலைத்தொடர்புகள் சட்டம் (1996 இல் திருத்தப்பட்டது), 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணினிக் குற்றங்கள் சட்டம் ஆகியன அனுமதியின்றி குரல்களைப் பதிவு செய்வதையும் இலத்திரனியல் கண்காணிப்புக்களையும் குற்றம் என்கிறது. தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் அரசாங்கங்கள் இந்தக் குரல் பதிவு வேலையைச் செய்கின்றன. ஆனால் அரசாங்கத்தின் சார்பில் யார் இதனைச் செய்யக் கூடும் என்ற வரையறை இல்லை. தேசிய பாதுகாப்புக்கென பதியப்படும் குரல்களை அரசியலுக்குப் பயன்படுத்தக் கூடாது என்ற சட்டமும் இங்கு இல்லை. இந்த வகையில் தனிமனிதனது அந்தரங்கத்துக்கு எந்தப் பாதுகாப்பும் இந்த நாட்டில் இல்லை என்பது ரஞ்சனின் குரல்பதிவு நிகழ்வு மூலமாகத் தெளிவாகிறது.

ஒவ்வொருவரும் தமது அந்தரங்கத்தைப் பாதுகாத்துக் கொள்கின்ற உரிமை (Right to Privacy) இல்லாத வரையில் ஒருவரது அந்தரங்கத்தை இன்னொருவர் வெளிப்படுத்தினால் அதற்கெதிராக இங்கு யாரும் வழக்குத் தொடர முடியாது. சைபர் வெளியில் நுழைந்ததன் பின்னர் யாருக்கும் தமது அந்தரங்கம் வெளிப்படுத்தப்படுவதைத் தடுக்கவும் முடியாது. தத்தமது அந்தரங்கங்களை அவரவரே பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிலை தான் இருக்கிறது. இந்த நிலையில், உரையாடல் துண்டிக்கப்பட்ட உடனேயே அந்த உரையாடல் இருவருக்கும் அமானிதமாகிவிடுகிறது என்ற உலகப் பொது விதியை மக்களிடம் பயிற்றுவிப்பது தான் இதற்குத் தீர்வாக முடியும்.

அடுத்ததாக ஊடகங்களின் விபச்சாரத்தை அழித்து விடுவதிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். தனது ஆதாரத்துக்காக, தனது சொந்தத் தேவைகளுக்காக குரல் பதிவுகளை ஒருவர் சேமித்து வைப்பது தவறில்லை. ஆனால் அதனை பொது வெளியில் பரவ விடுவதுதான் தவறு. அந்தத் தவறை இங்கு ரஞ்சன் செய்யவில்லை. விபச்சார ஊடகங்கள்தான் இதனை வைத்துக் கொண்டு சுகம் அனுபவித்தன.

பொலிசாரால் கைப்பற்றப்பட்ட இந்த சீடிக்கள் எப்படி ஊடகங்களிடம் போய்ச் சேர்ந்தன என்பது வேறு விடயம். ஆனால் இவற்றை ஜனரஞ்சகப்படுத்துவதில் ''அடுத்த விடயங்களை எடுத்துக் கொண்டு தங்களது விடயங்களைப் பாதுகாத்துக் கொண்டு'' செயற்படும் ஊடகங்கள் ஈஸ்டர் தாக்குதல் வேளையில் செயற்பட்ட போது போல மும்முரமாக இயங்கின. அதிலும் தமது எதிரி எனக் கண்டவர்களது குரல் பதிவுகளையே அவை முந்திக் கொண்டு வெளியிட்டன. இன்றுவரை அந்தக் குரல் பதிவுகள் யாருடையது என்பதை சோதித்தறிவதற்காக இரசாயனப் பகுப்பாய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையிலும் வைத்தியர் ஷாபியின் பலோப்பியன் விவகாரத்தை உண்மைப்படுத்த எத்தனித்தது போல இங்கும் ஊடக தர்மத்தை கழற்றி வீசி விட்டு இந்த ஊடகங்கள் ஒழுக்க நெறிகளை கற்பழிக்கின்றன. அவன்கார்ட் பிரதானி தன்னை விடுவித்துக் கொள்வதற்காக நீதித் துறையின் உயர் அதிகாரி ஒருவரின் குரல் பதிவை வெளியிட்ட போது இந்த ஊடகங்கள் இப்படி ஆர்ப்பரிக்கவில்லை என்பதிலிருந்து ஊடகங்களுடைய பத்தினித்தன்மை வெளிப்படுகிறது.

ரஞ்சனையும் இந்த இடத்தில் கழுவித் துப்புரவாக்க முடியாது. ரஞ்சனைப் பொறுத்தவரையில் தலைவன் (லீடர்) முதல் பெண் (மாயா) வரை எல்லாப் பாத்திரங்களையும் ஏற்று நடித்த பாராளுமன்ற உறுப்பினர் அவர். அந்த வகையில் அவரது நடிப்புத் துறையில் இதனையும் ஓர் அங்கமாகவும் பலரும் பார்க்கத் தலைப்பட்டுள்ளனர். மற்றுமொரு பிரபல நடிகரான கமல் அத்தராஆரச்சி இதுபற்றிக் குறிப்பிடுகையில், கதவைத் திறந்து வைத்துக் கொண்டு மலசலம் கழிப்பது போல என வர்ணித்திருக்கிறார். ரஞ்சனைக் கழுவி ஊற்றுவதில் பௌத்த பிக்குகள் சிலரும் வரிந்து கட்டிக் கொண்டு செயல்படுகின்றனர். பௌத்த விகாரைகளில் பௌத்த பிக்குகள் சிலரின் லீலைகளை வெளியே கொண்டு வந்த கோபம் அவர்களுக்கு. இதுவும் உண்மையில் பண்பாட்டுக்கு விரோதமானதுதான்.

சார்ஜன்ட் நல்லதம்பி புகழ் நிஹால் சில்வா ரஞ்சனின் அளவுக்குப் பேர் போனவர். இந்தப் பிரபல்யத்தைப் பயன்படுத்திக் கொள்ள முனைந்த அப்போதிருந்த அரசியல்வாதிகள் அவரை அரசியலுக்குள் இழுத்து பல வரப்பிரசாதங்களையும் வழங்கினர். ஈற்றில் அதே அரசின் காலப்பிரிவிலேயே அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். ரஞ்சனும் தற்போது நடிக்கத் தான் துணிந்திருக்கிறார் என்றால் நிஹால் சில்வாவை இந்த விடயத்தில் அவர் குருவாக எடுத்துக் கொள்வது நல்லது.

இறுதியாக, இது ஒரு பண்பாட்டுப் பிறழ்வு என்பது அமெரிக்க நாகரிகம் தெரிந்த ஜனாதிபதி கோத்தாவுக்குத் தெரியாமலிருக்க வாய்ப்பில்லை. ஆனால் உள்நாட்டுத் தலைவரான தனது அண்ணனுக்கு சட்டியைச் சூடாக வைத்துக் கொள்வதற்கு இவ்வாறான விடயங்களை எரிய விடுவது தான் கை வந்த கலை என்பது தெரிந்திருந்தாலும் அவரால் எதுவும் செய்ய முடியவில்லை. காரணம் இதன் அடுத்த நகர்வு எப்படி இருக்கும் என்பது அண்ணனுக்குத் தான் தெரியும். ஆனால் ரஞ்சனின் குரல் பதிவு விவகாரம் அடுத்த தேர்தல் வரை ஓயப்போவதில்லை என்பது மக்களுக்குத் தெரியும்.

# உள்ளூர் தொலைக்காட்சி சேவை பா.ஜ.க. - இஸ்ரேலிய பிரச்சாரக் கருவியாக மாறுகிறதா?

• லத்தீப் பாரூக்



இலங்கையின் தொலைக்காட்சிச் சனல்களை வழங்கும் நிறுவனமொன்று இந்தியாவின் பாஜக அரசாங்கத்திற்கும் இஸ்ரேலுக்கும் ஒரு பிரச்சார கருவியாக மாறுகிறதா? பாஜக சார்பு அரசாங்கம் மற்றும் சியோனிச சார்பு கொள்கைகளை அடிப்படையாக வைத்து இப்போது கேட்கப்படும் கேள்வி இது.

எடுத்துக்காட்டாக, ஏப்ரல் 2019 இல் சர்ச்சைக்குரிய ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்பு மற்றும் கொலைகளை அடுத்து, இந்தச் சனல் வழங்கும் நிறுவனம், டாக்டர் ஜாகிர் நாயக்கின் சர்வதேச அளவில் புகழ் பெற்ற பீஸ் டீவியை தடைசெய்தது. இன்றுவரை இந்த தடை நடைமுறையில் உள்ளது. குஜராத்தி முஸ்லிம்களை இனப்படுகொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட பிரதமர் மோடி, டாக்டர் ஜாகிர் நாயக் முன்வைக்கும் அறிவுசார் சவால்களை எதிர்கொள்ள முடியாததால் அவர்களை துன்புறுத்தி வருகிறார் என்பது அனைவரும் அறிந்ததே.

அதே வழியில் இந்தச் சனல் வழங்கும் நிறுவனம் இப்போது இந்திய தொலைக்காட்சி சேனலான NDTV ஐ நீக்கியுள்ளது. இது சர்ச்சைக்குரிய புதிய குடியுரிமைச் சட்டத்தை சவாலுக்குட்படுத்தும் மோடி அரசாங்கத்திற்கு எதிராக இந்தியா முழுவதும் நடந்து வரும் எழுச்சி பற்றிய சிறந்த சீரான தகவலை வழங்கி வந்தது. எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்க்கின்ற, பாஜக அரசாங்கத்தின் பிரச்சார சேனலான, மோடியின் குடியுரிமைச் சட்டத்துக்கு எதிரான எழுச்சியை மில்லியன் கணக்கானவர்களுக்கு இருட்டடிப்புச் செய்கின்ற டைம்ஸ் நவ் என்ற சனல் என்.டி.டி.விக்கு பதிலீடு செய்யப்பட்டது.

30 ஆண்டுகளுக்கு முன்பு காஷ்மீரில் இருந்து சில இந்து பண்டிதர்களை வெளியேற்றுவது குறித்த இந்திய முஸ்லிம்கள் மீது வெறுப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட சிறப்பு நிகழ்ச்சியொன்றை திங்களன்று (ஜன.20) டைம்ஸ் நவ் ஒளிபரப்பியது.

கார்டினல் மால்கம் ரன்ஜித் மற்றும் முன்னாள் அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள் பலரும் சுட்டிக் காட்டியதன்படி, ஈஸ்டர் ஞாயிறு சம்பவத்துடன் எந்த தொடர்பும் இல்லாத முஸ்லிம் சமூகத்தை தண்டிப்பதற்காகவே பீஸ் டீவி தடைவிதிக்கப்பட்டதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், டாக்டர் ஜாகிர் நாயக் பிரதமர் நரேந்திர மோடியின் காஷ்மீர் மீதான ஒடுக்குமுறைக்கு ஆதரவளித்தால் இந்த மாத தொடக்கத்தில் இருந்து இந்தியாவின் ஆளும் பாஜக அரசாங்கம் அவருக்கு எதிரான பண மோசடி குற்றச்சாட்டுகளை கைவிட முன்வந்ததாக பல தகவல்கள் வந்தன. இந்தியாவில் தாக்கல் செய்யப்பட்ட கிரிமினல் குற்றச்சாட்டுகளைத் திரும்பப் பெறுவதற்கு மேலதிகமாக, நாயக்கிற்கு அவரது சொத்துக்களை மீள வழங்கவும் நாடு திரும்புவதற்கான அனுமதி வழங்கவும் விலை பேசப்பட்டார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மலேசியாவில் நிரந்தர வதிவிட அந்தஸ்துள்ள நாயக், அவரை மௌனமாக்கும் பாஜக அரசாங்கத்தின் முயற்சியின் ஒரு பகுதியாக இருப்பதாகக் கூறி இவற்றையெல்லாம் மறுத்துள்ளார்.

நாயக்கை ஒப்படைக்க வேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கையை, இந்தியா அவர் மீது நியாயமான விசாரணை நடத்தாது என பிரதம மந்திரி கலாநிதி மகாதிர் முகமத் கூறிவருவதனால், மலேசிய அரசாங்கம் தொடர்ந்தும் நிராகரித்து வருகிறது. முஸ்லிம்களுக்கு எதிரான பாகு[illegible] காஷ்மீரில் மோடி அரசாங்கத்தின் ஒடுக்குமுறையையும், புதிய குடியுரிமைச் சட்டத்தையும் மகாதீர் பகிரங்கமாகவே விமர்சித்தார். டாக்டர் ஜாகிர் நாயக்கின் பீஸ் டீவி மத ஒப்பீட்டு தொடர்பிலான மிகவும் பிரபலமான தொலைக்காட்சி சேனலாகும். டாக்டர் நாயக் மற்றும் இஸ்லாமிய அறிஞர்கள் குழு ஒருபோதும் வன்முறையையோ வெறுப்பையோ ஊக்குவிக்கவில்லை. அதற்கு மாற்றமாக அமைதி மற்றும் நல்லிணக்கத்தின் செய்தியை மட்டுமே ஊக்குவித்தது. இது போன்ற அறிவுபூர்வமாக தொலைக்காட்சி சேனலை ஏன் இந்தச் சனல் வழங்கும் நிறுவனம் தடைசெய்தது என்பதே கேள்வி.

1965 அக்டோபர் 18 இல் பிறந்த ஜாகிர் நாயக் ஒரு இந்திய இஸ்லாமிய அறிஞர். தொழில் ரீதியாக அவர் ஒரு மருத்துவர். இஸ்லாமிய ஆராய்ச்சி அறக்கட்டளையின் (ஐஆர்எஃப்) நிறுவனர் மற்றும் தலைவரான அஹ்மத் டீடாட்டின் செல்வாக்கு பெற்று நாயக் இஸ்லாமிய போதகராக மாறினார்.

இஸ்லாமியம் மற்றும் அதன் கொள்கைகளை முஸ்லிம்களுக்கும் முஸ்லிமல்லாதவர்களுக்கும் தெளிவுபடுத்துவதற்காக டாக்டர் நாயக் ''பீஸ் டீவி'' என்ற மதத் தொலைக்காட்சி சேனலை சொந்தமாக நிறுவி வைத்திருக்கிறார். துபாயில் இருந்து இயங்கும் பீஸ் டீவி உலகம் முழுவதும் 200 மில்லியனுக்கும் அதிகமான பார்வையாளர்களைக் கொண்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. நாயக் தனது சேனலைப் பயன்படுத்தி இந்து மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுடன் சுமுகமான விவாதங்களையும், பிரபலமான விரிவுரைகளையும் வழங்குகிறார்.

2012 இல் இந்திய அரசு சேனலுக்கு தடை விதித்தது. பீஸ் டீவிக்கு மேலதிகமாக, நாயக் தனது பணிக்கான ஒரு கருவியாக சோஷியல் மீடியாவையும் பயன்படுத்துகிறார். தற்போது, பேஸ்புக்கில் 14 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் நாயக்கைப் பின்தொடர்கின்றனர். 2014 ஆம் ஆண்டில், அவர் இஸ்லாமிய ஸ்மார்ட்போனான பீஸ் மொபைலை அறிமுகப்படுத்தினார். இது ''உலகின் ஒரே நம்பகமான இஸ்லாமிய அண்ட்ராய்ட் ஸ்மார்ட் போன்'' என்று அறியப்பட்டது. முன்பே நிறுவப்பட்ட 50 க்கும் மேற்பட்ட இஸ்லாமிய பயன்பாடுகளும் (APPS), நாயக்கின் சுமார் 80 மணிநேர விரிவுரைகள் மற்றும் சொற்பொழிவுகளுடன் இந்த தொலைபேசி வெளிவந்தது.

### பாராட்டுக்களும் விமர்சனங்களும்

நாயக்கின் சூடேற்றும் மற்றும் சர்ச்சைக்குரிய பார்வைகளும் போதனைகளும் அவருக்கு பாராட்டுக்களையும் கடுமையான விமர்சனங்களையும் கொண்டு வந்துள்ளன. 2013 ஆம் ஆண்டில், ஐக்கிய அரபு எமிரேட்ஸின் பிரதமரும் துபாய் ஆட்சியாளருமான ஷேக் முஹம்மது பின் ரஷீத் அல் மக்தூமினாலும், மலேசியாவின் சுல் தான் கெடாவின் அப்துல் ஹலீம் ஆகியோரினாலும் பாராட்டப்பட்டார். 2015 ஆம் ஆண்டில் சவூதி மன்னர் சல்மான்

(பக்.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL
# 255 H-1/1, Dr. Danister De Silva Mawatha, Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## நீதி தேவதை விலைமாதுவாகக் கூடாது

இலங்கையின் நீதித்துறை பெற்றிருந்த மகோன்னதமான இடம் தற்போது கேலிக்குறியதாக மாறி வருகிறது. ஜனநாயகத்தின் மூன்று தூண்களில் முக்கியமானதான நீதித்துறை ஆட்டம் காணும் போது ஜனநாயகம் எனும் ஒட்டுமொத்தக் கட்டடமும் ஆட்டம் காணத் துவங்கும் என்பது மறுக்க முடியாதது. அந்த வகையில் நீதித்துறையின் சரிவு இலங்கையின் ஜனநாயகத்தை கேள்விக்குறியதாக்கும் நிலைக்கு நிச்சயமாகத் தள்ளிவிடும்.

ரஞ்சன் ராமநாயக்க வெளியிட்டுள்ள குரல் பதிவுகள் நீதித்துறை தொடர்பில் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையில் சந்தேகத்தை வளர்த்து விட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட நீதிபதிகளில் சிலர் இடமாற்றப்பட்டுள்ளார்கள் அல்லது இடைநிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வழங்கிய தீர்ப்புக்கள் மாற்றப்படுமா, இந்தத் தீர்ப்புக்களினால் பாதிக்கப்பட்டவர்களின் நிலை என்ன என்ற கேள்விகள் இப்பொழுது எழுகின்றன.

அதேபோல வைத்தியர் ஷாபியின் விவகாரமும் மீண்டும் நீதிமன்றம் ஏறியிருக்கின்றது. வைத்தியர் ஷாபியின் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு, சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, குற்றப் புலனாய்வுத் துறையின் அறிக்கைகள் எல்லாம் பெறப்பட்டு நீதித் தீர்ப்பு வழங்கி முடிவடைந்ததன் பின்னர் மீண்டும் ஆரம்பத்திலிருந்து விசாரணைகள் துவங்கியுள்ளன. இவர் தொடர்பில் முன்னர் தீர்ப்பு வழங்கிய நீதிபதி தொடர்பில் அதிருப்தி வெளியிடப்பட்டே வழக்கு மீளவும் தொடரப்பட்டிருக்கிறது. ஆனால் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஷாபியின் வழக்கை மீளவும் இழுத்து அவரைத் தண்டிப்போம் என ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்கள் சூளுரைத்திருந்தார்கள். அந்த வகையில் வைத்தியர் ஷாபியின் வழக்கு மீளவும் நீதிமன்ற வாசலுக்கு வந்திருப்பதன் நோக்கம் நாட்டு மக்களுக்குத் தெளிவாகத் தெரிகிறது.

இதேபோல தான் ஜனாதிபதியாக வந்தால் சிறையில் உள்ள இராணுவத்தினரை உடனடியாக விடுவிப்போம் என தேர்தல் காலத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ கூறியிருந்தார். நீதித்துறைக்கு அப்பால் சென்றே அவர் இந்த வாக்குறுதியை வழங்கியிருந்தார். ஜனாதிபதியானதும் அவர் தனது வாக்கை நிறைவேற்றும் முயற்சியில் இறங்கியிருக்கிறார். இது தொடர்பில் கருத்து வெளியிட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், சிறையிலிருந்த 34 இராணுவ அதிகாரிகள் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். அதிலும் குறிப்பாக மிருசுவில் பகுதியில் 8 தமிழர்களை கொடூரமாகச் சித்திரவதை செய்து படுகொலை செய்த குற்றச்சாட்டில் தூக்குத் தண்டனை பெற்ற சுனில் ரத்நாயக்க என்ற இராணுவ அதிகாரியும் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டுள்ளார் எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

நீதித்துறை அரசியல்வாதிகளிடம் சோரம் போவது ஜனநாயக விழுமியங்களை எதிர்பார்க்கும் நாட்டில் அராஜகம் தலைவிரித்தாடுவதற்கு வழிவகுக்கிறது. ஆட்சித் தலைவர்களே நீதித்துறையை தமது இஷ்டத்துக்குப் பணிய வைக்க நினைப்பது நாட்டில் கொடுங்கோலாட்சிக்கான ஆரம்பப் புள்ளிகளாகவே மக்கள் பார்க்கிறார்கள். அநியாயம் இழைக்கப்பட்டவர்களும், தாம் அநியாயங்களுக்கு உட்படுவோமோ என்று பயந்து பயந்து ஜனநாயகத்தை அனுபவிக்கும் மக்களும் தஞ்சமடையும் ஒரே இடமாக நீதித் துறை தான் காணப்படுகிறது. இதிலும் மக்கள் நம்பிக்கை இழந்துவிடுவார்களானால் அதனைத் தொடர்ந்து வரும் அடக்குமுறையின் கீழால் வாழ்வதனை மக்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள்.

ஆட்சியாளர்களாலும் அரசியல்வாதிகளாலும் நீதி தேவதை மானபங்கப்படுத்தப்படுவதில் இருந்து மக்கள் தான் காப்பாற்ற வேண்டும். ஏனெனில் மக்களுக்குத் தான் நீதி தேவைப்படுகிறது.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011-5353635
பெக்ஸ் : 011-5335500
ஈமெயில் : srpckwood@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# தேசிய மர நடுகைத் திட்டத்தில் இலங்கை முஸ்லிம் சமூகத்தின் பங்களிப்பு

• கலாநிதி பரீனா ருஸைக்

2020 பெப்ரவரி 4 ஆம் திகதி எமது நாடு 72 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் முகமாக தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் ஜனவரி 01 ஆம் திகதி முதல் தேசிய மரநடுகைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதன்படி, 'வளரும் நாட்டுக்கு வளரும் மரம் (Growing Tree for Growing Country) என்னும் தொனிப்பொருளின் கீழ் இம்மர நடுகைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஒரு மில்லியன் மரங்களை நடுகின்ற திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்பதே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கோட்பாடாகவும் காணப்படுகின்றது. அதாவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கையிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் ஒரு மரமேனும் நடப்பட வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு மில்லியன் மரங்கள் (One Million Tree) நடுவதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சுற்றுப்புறச் சூழலை தூய்மையாக வைத்திருக்க வேண்டுமாயின் இந்த மரங்களினுடைய தேவை உணரப்பட்ட விதத்தில் இந்த மர நடுகை திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இலங்கையில் தற்போது 29 வீதமாகக் காணப்படுகின்ற வனப்பகுதியை இன்னும் ஐந்து வருடத்திற்குள் 32 வீதமாக



அதிகரிக்க வேண்டும் என்ற கொள்கையும் இவ்வரசாங்கத்திடம் காணப்படுகின்றது. இது ஒருபுறமிருக்க, பிரதமரின் கோரிக்கை என்னவெனில், நடப்படுகின்ற ஒவ்வொரு மரமும் பல பயன்களை தரக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதாகும். வெறுமனே அரசாங்கம் சொல்வதற்காக வேண்டி மரம் நடுவதல்ல. ஒவ்வொரு வீடுகளிலும் நடப்படுகின்ற மரங்கள் பல பயன்களை தரக்கூடியதாக இருக்க வேண்டும் என்ற தீர்மானத்தை பிரதமர் முன்வைத்துள்ளார்.

இவ்வடிப்படையில் மர நடுகைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்ற சில படிமுறை ஒழுங்குகளை நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். இம்மரநடுகைத் திட்டம் முறையாகவும் சிறந்த முறையிலும் மேற்கொள்ளப்பட வேண்டுமாக இருந்தால் அத்திட்டம் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட வேண்டும். தேசத்தை கட்டியெழுப்புகின்ற நடவடிக்கையில் இம்மரநடுகைத் திட்டத்தின் முக்கியத்துவம் எந்தளவுக்கு காணப்படுகின்றது என்கின்ற விடயம் மக்கள் மத்தியில் கல்வி மற்றும் விழிப்பூட்டல்கள், மூலம் வழங்கப்படுவதோடு இத்திட்டத்தினை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் படிமுறைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

எனவே மாகாண, மாவட்ட, பிரதேச செயலக, கிராம சேவகப் பிரிவு மட்டத்தில் இந்தத் தேசிய மரநடுகைத் திட்டத்தினை ஒழுங்குபடுத்த முடியும். இப்பிரிவுகளுக்கிடையில் உப ஒருங்கிணைப்பு என்ற அடிப்படையில் அவற்றுக்கான பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு அதற்கு ஏற்ற மரங்கள் பகிர்ந்தளிக்கக்கூடிய விதத்தில் இவ்விடயம் காணப்பட வேண்டும்.

மறுபுறத்தில் நாம் முஸ்லிம்கள், நாட்டுப் பிரஜைகள் என்ற அடிப்படையிலும் எமக்கும் இம்மரநடுகைத் திட்டத்தில் பாரிய பங்கு காணப்படுகின்றது. இதன் பிரகாரம் ஒன்றில் மாகாண அடிப்படையில் அல்லது மாவட்ட அடிப்படையில் நோக்கி இந்த 25 மாவட்டங்களிலும் எத்தனை பள்ளிவாசல்கள் காணப்படுகின்றன? [illegible] களை மையப்படுத்திய விதத்தில் ஒரு பள்ளிவாசலுக்குக் கீழால் எத்தனை குடும்பங்கள் வருகின்றன? அல்லது வீடுகள் இருக்கின்றன? என்பது பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு ஒவ்வொரு குடும்பத்துக்கும் அல்லது வீட்டுக்கும் ஒவ்வொரு மரக்கன்று வீதம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

பகிர்ந்தளிக்கப்படுகின்ற தாவரங்கள் பல பயன்களை கொண்டிருக்க வேண்டும் என்பது இங்கு முக்கியமானது. அதேநேரம் காலநிலை உள்ளிட்ட பௌதீகத் தன்மைக்கு பொருத்தமான தாவரங்கள் தெரிவுசெய்யப்பட்டு வழங்கப்பட வேண்டும். இந்நாட்டின் முஸ்லிம் சமூகம் என்ற அடிப்படையில் எங்களது பங்களிப்புக்களையும் இம்மரநடுகை திட்டத்திற்கு வழங்க வேண்டும். நாம் முழுமனதாக இத்திட்டத்தில் ஈடுபட வேண்டும்.

பல பயன்களை தரக்கூடிய மரங்கள் என்கின்ற போது குறிப்பாக நெல்லி, அகத்தி, யூகலிப்டஸ், வேம்பு, பலா, மா, தென்னை போன்ற மரங்களை குறிப்பிட முடியும். இவை சூழலுக்கும், சமூகத்துக்கும், பொருளாதாரத்திற்கும் பங்களிப்பை வழங்கக்கூடிய தாவரங்களாகும். இவ்வாறு பல்வேறு பயன்களைத் தரக்கூடிய தாவரங்களையே நாம் பௌதீக சூழலுக்கு ஏற்ப பள்ளிவாசல்கள் மூலம் அல்லது தேசிய ரீதியாக நடைமுறைப் படுத்தப்படுவதாயின் கிராமசேவகர் பிரிவு மட்டத்தில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு விநியோகிக்கப்படுகின்ற மரங்கள் சிறந்த முறையில் நடப்பட்டு கண்காணிக்கப்பட வேண்டும்.

அதேநேரம் மரநடுகைத் திட்டம் என்னும் போது சுற்றுப்புறச் சூழலின் ஆரோக்கியத்தை பேணுகின்ற வகையிலும் அது காணப்பட வேண்டும். சிறந்த மரங்களை கொண்ட சுற்றுப்புறச் சூழலாக காணப்படும் போதே அங்குள்ள நீர், வளி, மண் போன்றவை சிறப்பானவையாக காணப்படும். எனவே தேசத்தை கட்டியெழுப்ப வேண்டுமாயின் நிச்சயமாக சுற்றுப்புறச் சூழல் சிறந்ததாகவும், தூய்மையானதாகவும், ஆரோக்கியமானதாகவும் காணப்பட வேண்டும்.

இம்மரநடுகைத் திட்டம் வெற்றிகரமானதாக இடம்பெற வேண்டுமெனில், ஊடகங்கள் இது தொடர்பான விழிப்புணர்வை பொது மக்களுக்கு வழங்க வேண்டும். மேலும் துண்டுப் பிரசுரங்கள், கலந்துரையாடல்கள், சுவரொட்டிகள், பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி மற்றும் சமூக வலைத்தளங்களுக்கூடாக பெதுமக்களுக்கு இதன் முக்கியத்தும் உணர்த்தப்பட வேண்டும். ஊடகங்களின் பங்களிப்பும் சிறந்த முறையில் காணப்படுகின்ற போதே இம்மரநடுகைத் திட்டத்தை சிறந்த முறையில் முன்னெடுக்க முடியும். உண்மையில் அதிகமான மக்களுக்கு மரத்தினுடைய முக்கியத்துவம் உணர்த்தப்படவில்லை.

உலகளாவிய ரீதியில் ஆபிரிக்க கண்டத்தை எடுத்துக் கொண்டால், அங்குள்ள நாடுகள் உலகிலேயே வறுமையான நாடுகளாக காணப்படுகின்றன. சூழலியல் ரீதியாகவும் பின்னடைந்த நாடுகளாக உள்ளன. காரணம், அந் நாடுகளில் சிறந்த சுற்றுப்புறச் சூழலில்லை. அதாவது ஒரு சிறந்த பசுமைத்தன்மை கொண்ட சூழல் அங்கு இல்லை. ஆனால், எமது நாடு சிறந்த இயற்கை வளங்களை செறிவாகக் கொண்ட நாடாகக் காணப்படுகின்றது. நகரமயமாக்கல், கைத்தொழில் நடவடிக்கைகள், முறைகேடான மனித நடவடிக்கைகள் போன்ற காரணங்களால் பசுமையான மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டு ஒரு [illegible]மையையும் தூய நீரை பெற்றுக் கொள்வதற்கு கஷ்டமான நிலைமையும் உருவாக்கப்பட்டுள்ளது.

எனவே நாம் இழந்த சுற்றுப்புறச் சூழலை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமென்றால் இந்த மரநடுகை என்னும் விடயம் அத்தியாவசியமானது. இம்மரநடுகை சிறப்பாக இடம்பெற வேண்டுமாக இருந்தால் அது திட்டமிட்ட அடிப்படையில் காலநிலைக்கு ஏற்ற வகையில் காணப்பட வேண்டும். நாம் தெரிவுசெய்யும் மரங்கள் பல் பயன்களை கொண்டதாகவும், காலநிலைக்கும் பௌதீகத் தன்மைகளுக்கும் பொருத்தமானவையாக காணப்பட வேண்டும்.

மரங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்ற வீடுகள் அல்லது குடும்பங்களது நில அமைவு மற்றும் அளவு எப்படிக் காணப்படுகின்றது? என்பதும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டும். நகர்ப்பறச் சூழலில் உள்ள வீடுகளில் நிலம் தட்டுப்பாடாக இருக்கலாம். ஆனால் அவர்களாலும் முடியாது என்றில்லை. அவர்களுக்கும் ஒரு மரம் வழங்கப்பட வேண்டும். அது ஒரு பூச்சாடியில் வளர்க்கக் கூடியதாக இருக்கலாம்.

எதிர்வரும் சுதந்திர தினத்தை முன்னிட்டு வீடுகளில் நிலப்பகுதி காணப்படுகின்றதோ இல்லையோ ஒவ்வொரு வீடுகளிலும் இம் மரநடுகையை மேற்கொள்ளலாம். அதாவது முடியும் என்கின்ற எண்ணத்தை உருவாக்க வேண்டும். நிலமற்றவர்கள் ஒரு பூச்சாடியில் கறிவேப்பிலை மரத்தையாவது நட வேண்டும். பல்பயன்களை தரக்கூடிய மரங்களில் பூச்சாடிகளில் நடக்கூடிய மர இனங்கள் காணப்படுகின்றன. அவை இனங்காணப்பட்டு ஒழுங்காக விதத்தல் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

பள்ளிவாசல்களில் அல்லது கிராம சேவகர் பிரிவு அடிப்படையில் மரக் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்படுகின்ற போது குறிப்பிட்ட குடும்பத்துக்கு நிலம் எந்தளவு காணப்படுகிறது என்பதும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான தரவுப் பட்டியல் ஏற்கனவே பெறப்பட்டிருக்க வேண்டும். பூச்சாடிகளில் நட முடியுமான சில தாவர இனங்கள் காணப்படுகின்றன. முருங்கை, அகத்தி, மாதுளை, கறிவேப்பிலை போன்ற தாவரங்களை இங்கு குறிப்பிட முடியும்.

எனவே முஸ்லிம்கள் அனைவரும் ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு மரத்தை நட்டி அது சிறந்த முறையில் வளர்க்கப்படுமாக இருந்தால் சூழலுக்கு நாம் வழங்கும் பங்களிப்பு அளப்பறியதாக அமையும். இது சூழலுக்கு வழங்குகின்ற வெகுமதியை பணத்தில் மதிப்பிட முடியாது. சுற்றுப்புறச் சூழலை அழகிய முறையில் இந்தத் தாவரங்கள் பாதுகாக்கும். சிறந்த முறையில் ஒட்சிசனை பெற்றுத் தரும். நச்சு வாயுக்களை உறிஞ்சிக் கொள்ளும். காபன்டயோக்சைட்டை உறிஞ்சிக் கொள்ளும். இவ்வாறு பணம்கொடுத்து வாங்க முடியாத பெறுமதிமிக்க தேவைகளை இத்தாவரங்கள் எமக்கு வழங்குகின்றன. இது தொடர்பான விழிப்பூட்டலை நாம் அனைத்து மக்களுக்கும் வழங்க வேண்டும்.

குறிப்பாக முஸ்லிம்கள் தேசத்தை கட்டியெழுப்புகின்ற விடயத்தில் முழு மூச்சாக ஈடுபட வேண்டும். எமது தேசம், எமது நாடு, நாட்டுப்பற்று என்கின்ற விடயங்களில் முழு மூச்சாக ஈடுபடும் பட்சத்தில் அது நாட்டில் சகவாழ்வுக்கும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் வழிவகுக்கும்.

இஸ்லாத்திற்கும் மரநடுகை என்கின்ற விடயத்திற்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்புகள் காணப்படுகின்றன. எனவே அல் குர்ஆன், அல்ஹதீஸில் கூட மரநடுகையின் முக்கியத்துவம் ஆழமாக குறிப்பிடப்பட்டுள்ளது. முடிந்தவரையில் எமது நாட்டை சிறந்த முறையில் கட்டியெழுப்புகின்ற நடவடிக்கையில் பல பயன்களை தரக்கூடிய மரங்களை நட்டி சூழலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளக்கூடிய விடயத்தில் ஈடுபாடு கொள்ள வேண்டும்.

மரங்கள் என்னும் போது சில மரங்கள் மருந்து மூலிகைகளாகவும் காணப்படுகின்றன. ஆகவே மரநடுகை என்பது மனித ஆரோக்கியத்துக்கும் இன்றியமையாததாகும். இவையனைத்து விடயங்களையும் கவனத்திற் கொண்டு சுற்றுப்புறச் சூழலை கட்டியெழுப்ப வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்து இம்மரநடுகைத் திட்டத்தை பெப்ரவரி 04ஆம் திகதியன்று கட்டாயம் ஒவ்வொரு வீடுகளிலும் நடைமுறைப்படுத்தி நாட்டை கட்டியெழுப்பும் பணியில் பங்கு கொள்ள முழுமையாக பாங்காற்றுவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான முஸ்லிம்கள் பற்றிய படிமங்கள்

• இப்கார் ஃபயூமி

தேர்தல் முடிந்த கையோடு இடைக்கால அமைச்சரவை ஒன்றை உருவாக்கிய மஹிந்தவின் பொதுஜன பெரமுன அரசு அதில் எந்தவொரு முஸ்லிமையும் இணைத்துக் கொள்ளவில்லை. தமது தேர்தல் பிரச்சாரங்களின்போது சிங்கள மக்கள் தமக்கு வழங்கிய ஆணைகளில் இதுவும் ஒன்று என ஹிருவும் தெரனவும் அறிந்து வைத்திருக்கும்.

இலங்கை முஸ்லிம் சிறுபான்மை சமூகத்தை புதிய அரசாங்கம் ஒதுக்குவதற்கும் ஓரங்கட்டுவதற்கும் தீர்மானித்து விட்டதன் முதல் அடையாளமாக இது பார்க்கப்படுகின்றது. இந்திய செய்தியாளர் ஒருவர் இது குறித்து கோத்தாவை வினவியபோது, ''முஸ்லிம் சமூகத்தில் அமைச்சர் பதவிக்குத் தகுதியான எவரும் இல்லை என்பதனால் அவ்வாறு நியமிக்க முடியவில்லை'' என்று பதிலளித்திருந்தார்.

அமைச்சர் பதவியொன்றுக்கான 'தகுதி' என்னவென்று இன்றைய இடைக்கால அமைச்சரவையைப் பார்த்தால் இலகுவாகப் புரிந்துகொள்ளலாம். இந்நிலையில் முஸ்லிம்களை மென்மேலும் துருவமயமாக்கும் ஒரு தந்திரமாகவும் பொதுத் தேர்தலை இலக்கு வைத்துமே புதிய அரசாங்கம் இத்தகைய கைங்கரியங்களில் ஈடுபட்டு வருகின்றது.

14 ஆம் திகதி தமிழ்த் தேசியப் பத்திரிகைகளின் ஆசிரியர்களை அலரி மாளிகையில் வைத்து கலந்துரையாடிய மஹிந்த முஸ்லிம் அமைச்சர்கள் எவரும் இடம்பெறாமை குறித்து கேள்வி எழுப்பப்பட்டபோது ''அமைச்சரவையில் முஸ்லிம் அமைச்சர் எவரும் இல்லை என்ற குற்றச்சாட்டுக்கு நாம் பொறுப்பல்ல. பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களாக முஸ்லிம்கள் எவரும் இல்லை. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினருக்கு அமைச்சுப் பதவியை வழங்க முன்வந்தபோதும் பைஸர் முஸ்தபா அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. அமைச்சுப் பதவிக்கு சுதந்திரக் கட்சி தனது பட்டியலில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் எவரையும் சிபாரிசு செய்யாத நிலையிலேயே நாம் பைஸருக்கு அமைச்சுப் பதவியை வழங்க முன்வந்தோம். எமது அரசாங்கத்தில் முஸ்லிம் பிரதிநிதி வேண்டுமானால் முஸ்லிம் மக்கள் மற்றும் அவர்களது தலைவர்கள் எதிர்வரும் தேர்தலில் சிந்தித்துச் செயல்பட வேண்டும். எமது கட்சியில் முஸ்லிம் பிரதிநிதிகளை முஸ்லிம் மக்கள் தெரிவு செய்ய வேண்டும். அவ்வாறு செய்வார்களாயின் முஸ்லிம்கள் அமைச்சரவையிலும் இடம்பெறலாம்'' எனத் தெரிவித்திருந்தார்.

மஹிந்தவின் இக்கதையாடலில் பல சூட்சுமங்கள் தொக்கி நிற்கின்றன. விஜேதாச பிரேரித்துள்ள 21 ஐ நிறைவேற்றிவிட்டால் முஸ்லிம் பிரதிநிதித்துவம் குறைந்து விடும். ஆனால், அதை நிறைவேற்றுவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற முஸ்லிம் கட்சிகள் உட்பட ஏனைய சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவும் அரசாங்கத்திற்குத் தேவை.

முஸ்லிம்கள் இனி விரும்பினால் தாமரை மொட்டில் இணைந்து பாராளுமன்றம் நுழையலாம். அமைச்சரவையிலும் இடம்பெறலாம். தனிக்கட்சியிலிருந்து வரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சராவது சாத்தியமில்லை. எமக்கு வாக்களித்தால்தான் நீங்கள் நாட்டுப் பற்றாளர்களாக இருக்கலாம். வாக்களிக்காதவர்கள் எமது எதிரிகள். அவர்கள் பழிவாங்கப்படுவர் அல்லது புறக்கணிக்கப்படுவர். அவர்களைப் பயங்கரவாதிகளாகக் காண்பித்து பெரும்பான்மை இனத்தின் வாக்குகளாலேயே மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எங்களால் பெற முடியும் என்பதுதான் இந்த வார்த்தைகளின் சூட்சுமம்.

ஜனநாயகம், பன்மைத்துவம், மாற்று நிலைப்பாடுகள் என்ற எதற்குமே இனி நாட்டில் இடமில்லை. தாம் விரும்புவது போன்றே அனைவரும் ஆட வேண்டும். இல்லையென்றால் அவர்கள் எதிரிகளாகக் கட்டமைக்கப்படுவார்கள் என்பதை சமகால அரசியல் நிறுவிக் கொண்டே இருக்கின்றது.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி பத்தாயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையுடன் சம்பந்தப்பட்டது என்பதை நாடே அறியும். அதன் பிரதான சூத்திரதாரி அர்ஜுன மஹேந்திரன். ஒரு சிங்கப்பூர் பிரஜை. அவரை மத்திய வங்கி ஆளுநராக நியமித்தவர் ரணில். இக்குற்றச்சாட்டுடன் சம்பந்தப்படுத்தப்படும் மற்றொருவர் முன்னாள் நிதியமைச்சர் ரவி. தேர்தல் பிரச்சாரங்களின் போது மஹிந்த அணியினர் சிங்கள மக்களிடம் திரும்பத் திரும்பக் கூறி அவர்களை நம்பவைத்த ஒரு கதைதான் இந்தப் பிணைமுறி மோசடி.

இலங்கையின் முழுப் பொருளாதார வீழ்ச்சிக்கும் ஒரே காரணம் மத்திய வங்கி பிணைமுறி மோசடிதான் என்று சிங்கள மக்களை நம்பவைத்து தேர்தலில் வெற்றி பெற்ற அரசு, ரணிலையோ ரவியையோ அதனுடன் சம்பந்தப்பட்ட ஊழல் பெருச்சாளிகள் எவரையுமே கைதுசெய்யவில்லை. மாறாக, சம்பிக்க, ராஜித, ரஞ்சன் என்று தேர்தல் மேடைகளில் கிண்டல் செய்தவர்களை மட்டும் உள்ளே தள்ளியது.

இன்று வைத்தியர் ஷாபி விவகாரத்தைப் பூதகரமாக்கி, மூடப்பட்ட கோப்புகளைத் திறக்கின்றனர். பழிவாங்கும் மோகத்தில் ஷாபி மீது புதுப் புது வழக்குகள், புதுப் புது நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படுவதன் மர்மம் என்ன? இதுவரை ஷாபி குறித்து அரச நிறுவனங்களால் முன்வைக்கப்பட்ட அனைத்து அறிக்கைகளும் அவரைக் குற்றமற்றவராக விடுவித்த நிலையில், தலைமழித்த ஒரு மதகுரு குருனாகலையிலேயே கூடுகட்டிக் கொண்டு கும்மாளமடிப்பதேன்?



நீதிமன்றம் தனது விவகாரங்களை சுயாதீனமாகக் கையாள்வதற்கு இடம் கொடுத்து விட்டு, பன்சலைக்கு மீள வேண்டிய மதகுரு, நீதிமன்ற வளாகத்திற்குள் நின்று கொண்டு தெரன, ஹிரு போன்ற இனவாத ஊடகங்களுக்கு முன்னால் வைத்தியர் ஷாபி குறித்து பொய் மூட்டைகளை அவிழ்ப்பதன் அரசியல் என்ன?

காலனித்துவத்திற்குப் பிந்திய இலங்கையில் இனத்துவ அரசியல் (Ethno Nationalism) நீடித்தது. இன்று இனத்துவத் தேசியம், இனவாதத் தேசியமாக (Racist Nationalism) உருமாறியிருப்பது கவலைக்கிடமானது.

தேர்தல் முடிந்த கையோடு ஊடக சந்திப்பை நடத்திய ஞானசார, இனி தமக்கு எந்த வேலையும் கிடையாது. தந்தை வீடு திரும்பி விட்டார். இனி தனயனுக்கு வேலையில்லை என்று புதிய அரசாங்கத்தின் வருகையோடு தமது இனவாதப் பிரச்சாரத்தின் நோக்கம் முடிந்துவிட்டது என்று பச்சையாகவே கூறியிருந்தார்.

ஹிருனிகா நடத்திய ஊடக சந்திப்பில், ஞானசாரவுக்கு எதிர்வினையாற்றி அவர், இத்துடன் அடிப்படைவாத இயக்கம் கலைக்கப்பட்டு விட்டது என்று கூறியபோது, முஸ்லிம்கள் சற்று நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். ஆயினும், மூத்த பத்திரிகையாளர் விக்டர் [illegible] சொன்னது போல இந்தப் [illegible] யார்தான் கட்டிவைப்பார்கள். அது டபபா விலிருந்து மீளக் கிளம்பி முஸ்லிம் சமூகத்தைப் பயம் காட்டிக் கொண்டிருக்கின்றது.

கடந்த 14 ஆம் திகதி ஞானசாரர் நடத்திய ஊடக சந்திப்பில், நளீமிய்யாவில் கற்ற அனைவரையும் கைதுசெய்ய வேண்டும் என்று வெறுப்புப் பிரச்சாரத்தைக் கக்கியுள்ளார். இந்த விஷ நாகத்திற்கு பாலூட்டி வளர்த்தவர்கள் பவ்வியமாக நின்று பூரித்துப் போகிறார்கள். முன்னைய ஆட்சியாளர்களும் சிங்கள வாக்குகளை முன்னிட்டு ஞானசாரர் குறித்து எதுவும் செய்யவில்லை.

இத்தகைய சூழ்நிலையில் தேர்தலுக்குப் பிந்திய முஸ்லிம் சமூகத்தில் ஒரு வகை தோல்வி மனப்பாங்கும், குற்ற உணர்வும் தோன்றியுள்ளது. துட்டகைமுனுவின் சிலைக்குப் பக்கத்தில் நின்று புதிய ஜனாதிபதி பதவியேற்றபோது, தாம் பெரும்பான்மைச் சிங்கள வாக்குகளாலேயே ஜனாதிபதியானார் எனவும் சிறுபான்மைச் சமூகங்கள் தனக்கு வாக்களிக்கவில்லை எனவும் கூறியமை முஸ்லிம் சமூகத்தில் இந்த தோல்வி மனப்பாங்கை மென்மேலும் கூர்மைப் படுத்தியுள்ளது.

எவ்வாறாயினும் நடப்பு அரசியல் போக்குகளையும் மாற்றங்களையும் கண்டு முஸ்லிம்கள் அளவுக்கு அதிகம் அச்சமடைய வேண்டியதில்லை. அல்லது கடந்த தேர்தலில் தாம் தவறிழைத்து விட்டோம் என்று குற்ற உணர்வுக்கு ஆட்பட வேண்டியதுமில்லை. அரசியல்வாதிகளின் கூற்றில் இருக்கும் உள்முரண்பாட்டைப் புரிந்துகொண்டால் ஜனநாயக நடைமுறையிலுள்ள தெரிவுகளை மக்கள் புரிந்துகொண்டால் சிறுபான்மைச் சமூகங்கள் அற ரீதியில் எந்தத் தவறும் இழைக்கவில்லை என்ற முடிவை எளிதில் பெறுவார்கள்.

தேர்தலுக்கு மூன்று மாதங்களுக்கு முன்பே மொட்டில் இணைந்த சில சிங்களக் கட்சிகளின் தலைவர்கள் உள்ளிட்டு, அதன் பிரதான வேட்பாளரும் முஸ்லிம் வாக்குகள் தமக்குத் தேவையில்லை என்று பகிரங்மாகக் கூறிவந்தனர். தேவைப்படாத வகையில் பெரும்பான்மை மக்களின் வாக்குகளை மாத்திரம் பெறும் பிரச்சார உத்திகளை லாவகமாக முன்னெடுத்தனர். ஆனால், தேர்தலில் வெற்றி பெற்ற கையோடு முஸ்லிம்கள் தமக்கு வாக்களிக்கவில்லை என்று குற்றம் சாட்டினர்.

தேவையற்ற, வேண்டப்படாத வாக்குகளை முஸ்லிம்கள் ஏன் அளிக்க வேண்டும் என்பதுதான் இங்குள்ள கேள்வியாகும். அதிகாரத்தில் உள்ளவர்கள் மீள் சிந்திக்க வேண்டிய இன்னொரு பக்கமும் இங்கே இருக்கத்தான் செய்கின்றது. சிறுபான்மை மக்கள் ஏன் தமது அணியை ஆதரிக்கவில்லை. கோளாறு எங்கே இருக்கின்றது. கடந்த கால கசப்பான [illegible] சிறுபான்மை [illegible] ஏற்பட்ட இழப்புகள், இவைதான் மொட்டு அணியிலிருந்து சிறுபான்மை தூரமாவதற்கு காரணமானதா என்பதை அவர்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியுள்ளது.

ஆனால், இப்போது இந்தப் பக்கத்தைப் பார்க்க வேண்டிய தேவை அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு இல்லை. காரணம், பெரும்பான்மை மக்களே தமது பலம் என்று அவர்கள் நம்புகின்றனர். அந்தப் பலத்தைத் தக்கவைப்பதற்கு அவர்களுக்கு முன்னாலுள்ள ஒரே தெரிவு சிறுபான்மையினரை எதிரிகளாக முன்னிறுத்தும் அரசியலை முன்னெடுப்பதுதான்.



இப்போது அவர்களுக்குத் தேவை ஒன்றே ஒன்றுதான். அது பாராளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை. அதைப் பெற்றுக்கொண்டால் அரசியலமைப்புச் சட்டங்களை மாற்றுவதன் மூலம் சிறுபான்மையினரை -குறிப்பாக முஸ்லிம்களை- சட்டப்படியே அடக்கி ஒடுக்கி, பூச்சி புழுக்களை போல் நசுக்கி வைக்கலாம் என்று அவர்கள் சிந்திக்கிறார்கள்.

இந்தத் திரிசங்கு நிலையில் முஸ்லிம்களின் அடுத்த கட்டம் என்ன செய்வது என்று குழம்பிப் போயுள்ளது. பொதுத் தேர்தலை முன்னிறுத்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தனிச் சிங்கள வாக்குகளால் மாத்திரம் பெற்றுக் கொள்வதற்கு மீளவும் முஸ்லிம்களுக்கு எதிரான கெடுபிடிகள் தலை தூக்கியுள்ளன. ஷாபி மீளவும் நீதிமன்றத்திற்கு இழுக்கப்படுகிறார். ஹிஸ்புல்லாஹ்வின் ஷரீஆ பல்கலைக்கழகம் குறித்த விவகாரம் விவாதத்திற்கு வருகிறது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ரிஷாத் மற்றும் அஸாத் சாலியிடம் வாக்குமூலங்கள் பதியப்படுகின்றன. ஞானசாரர் மீண்டும் தலையை உயர்த்துகிறார். இவையெல்லாம் தேர்தலுடன் நின்று விடுமா அல்லது தேர்தலுக்குப் பின்னரும் தொடருமா என்பது குறித்து பல்வேறு விவாதங்கள் மேற்கிளம்பியுள்ளன.

சமகால சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தில் நடப்பு அரசியல் குறித்து இரண்டு விதமான பார்வைகள் உள்ளன. ஒரு சாரார் முஸ்லிம்கள் மத்தியில் குற்ற உணர்வை வளர்க்கின்றனர். கோத்தாவிற்கு நாம் வாக்களிக்காமல் விட்டமை பெருந் தவறாகும். இந்தத் தவறை பொதுத் தேர்தலில் நாம் விடக் கூடாது. மொட்டுக்கு வாக்களிப்பதே முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு உள்ள ஒரே வழி. அதனால் வடகிழக்கிற்கு வெளியே ஒவ்வொரு மாவட்டத்திலும் மொட்டு சார்பில் களமிறங்கும் ஒரு வேட்பாளரையேனும் நாம் ஒருமித்து ஆதரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் இப்போதே அதற்கான முஸ்தீபுகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

பதவியேற்றபோது ஜனாதிபதி கூறிய கருத்திலும் முஸ்லிம் சமூகத்திலுள்ள இந்தச் சாரார் கூறும் கருத்திலும் ஓர் உள்முரண்பாடு இருக்கின்றது. இலங்கையில் இரண்டு மில்லியன் முஸ்லிம் சனத்தொகையில் 30 வீதமானவர்களே கிழக்கு மாகாணத்தில் வசிக்கின்றனர். அவர்களில் 90 வீதமானவர்கள் சஜித்துக்கு வாக்களித்தனர் என்பது உண்மையே. அதற்கும் சில காரணங்கள் இருந்தன. மஹிந்த ஆட்சியில் முஸ்லிம்கள் எதிர்கொண்ட நெருக்கடிகள், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் வாக்காளர்களுக்கு முன்னால் கூறிய வாக்குறுதிகள், அதேபோன்று ஜனநாயக ரீதியில் மக்களுக்குள்ள தெரிவுச் சுதந்திரம் போன்ற காரணங்கள் பல.

ஆனால், முஸ்லிம்களின் 70 வீதமானவர்கள் தென்னிலங்கையிலேயே வசிக்கின்றனர். வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களும் பெருவாரியாக தென்னிலங்கையிலேயே (வடகிழக்கு மாகாணங்களுக்கு வெளியே) வசிக்கின்றனர். அவர்களில் கணிசமானவர்கள் சுமார் 70 வீதமானவர்கள் கோத்தாவிற்கே வாக்களித்துள்ளனர். குறிப்பிட்டுக் கூறக்கூடிய கிராமங்களைத் தவிர்த்து நோக்கினால் உண்மை அதுவே.

பதவியேற்பின்போது முஸ்லிம்கள் வாக்களிக்கவில்லை என்று கூறிய கோத்தா, சமீபத்திய ஊடகவியளலார் சந்திப்பின்போது முஸ்லிம்களும் வாக்களித்துள்ளனர். எனவே அவர்களது விவகாரங்கள் குறித்தும் நான் கவனம் செலுத்த வேண்டியுள்ளது எனக் கூறியிருக்கிறார்.

ஆக முஸ்லிம்கள் இரு பெரும் சிங்கள பௌத்த தலைவர்களுக்கும் தமது வாக்குகளை வழங்கியுள்ளனர் என்பது உறுதி. கிழக்கில் செறிவாக உள்ள முஸ்லிம் பிரதேசங்களில் இரு வேட்பாளர்களுக்கும் வழங்கப்பட்ட வாக்கு வித்தியாசம் சற்று காட்டமாகத் தெரிந்தது. அதற்கான காரணம் முஸ்லிம்களின் செறிவே. முஸ்லிம்கள் சஜித்துக்கு வாக்களித்ததனால் அவர்கள் இனவாதிகளோ நாட்டுக்கு எதிரானவர்களோ அல்லர். ஒரு நல்ல பௌத்தருக்குத்தான் அவர்கள் வாக்களித்ததாகக் கருதுகின்றனர்.

ஒட்டுமொத்த இலங்கை முஸ்லிம்களும் ஒன்றிணைந்து சஜித்தை ஆதரித்தார்கள் என்றோ கோத்தாவை புறக்கணித்தார்கள் என்றோ கூறமுடியாது. பொதுவாக ஒரு ஜனநாயக நாட்டில் மக்களுக்குள்ள சுதந்திரத் தேர்வை (Option) அவர்கள் கையாண்டுள்ளனர். அவ்வளவுதான்.

ஹிஸ்புல்லாஹ் என்ற முஸ்லிம் வேட்பாளருக்கோ சிவாஜிலிங்கம் என்ற தமிழ் வேட்பாளருக்கோ முஸ்லிம்களோ தமிழர்களோ தமது அறுதிப் பெரும்பான்மை வாக்கினை அளித்திருந்தால் அவர்கள் இனச்சார்பு கொண்டவர்கள் என்று கூறிக்கொள்ளலாம். ஆனால், அவர்கள் வாக்களித்தது சிங்களத் தலைவருக்கே.

எனவே முஸ்லிம் சமூகத்தை யாரும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்த வேண்டியதில்லை. தாழ்வு மனப்பான்மையை உருவாக்க வேண்டியதுமில்லை. எவ்வாறாயினும் பொதுத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து சமூகத்தில் பல்வேறு தரப்பினர் மத்தியிலும் பல்வேறு நிலைப்பாடுகள் மேலெழுவதை அவதானிக்க முடிகிறது. இது குறித்து நாம் நிதானமாகவும் மூலோபாய ரீதியிலும் சிந்திப்பது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல தாய்நாடு 04

- ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி -

## எமக்கு மத்தியில் சகிப்புத் தன்மை வேண்டும்

இந்நாட்டில் வாழ்வதில் எமக்கு பல்வேறு சவால்கள் காணப்படுகின்றன. இந்தச் சவால்களை வெற்றிகொள்வதற்கு நான்கு விடயங்களைச் செய்ய வேண்டும். முதலாவது, இந்நாட்டின் சூழலுக்கேற்றவாறு வாழ வேண்டும். இரண்டாவது, இந்த சூழலுக்கேற்றவாறு வாழ்வதற்கு இஜ்திஹாத் செய்துகொள்ள வேண்டும். மூன்றாவது, இஜ்திஹாத் மூலம் இந்நாட்டின் சூழலுக்கு அமைய வாழ்வதற்கு எமக்கு மத்தியில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை அதாவது சகிப்புத்தன்மை (Tolerance) காணப்பட வேண்டும். நான்காவது, நடுநிலைப் பண்பு (Moderation) காணப்பட வேண்டும்.

நபி(ஸல்) அவர்கள் முஆத் இப்னு ஜபல் (ரலி) அவர்களை யமன் தேசத்துக்கு ஆளுநராக நியமித்து அனுப்பி வைக்கும்பொழுது ''முஆத் அவர்களே! மக்களின் பிரச்சினைகளில் தீர்ப்பளிக்கும் நிலை ஏற்படும் பொழுது எதை அடிப்படையாகக் கொண்டு தீர்ப்பளிப்பீர்கள்?'' என வினவினார்கள். அதற்கு முஆத் இப்னு ஜபல் (ரலி) அவர்கள், ''அல்லாஹ்வின் வேதத்தைக் கொண்டு தீர்ப்பளிப்பேன்'' என்றார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், ''அல்லாஹ்வின் வேதத்தில் அந்தத் தீர்ப்பை நீங்கள் பெறாவிட்டால் என்ன செய்வீர்கள்?'' என்றார்கள். அதற்கு முஆத் (ரலி) அவர்கள், ''அல்லாஹ்வின் தூதரே! உங்களது பொன்மொழிகளை அடிப்படையாகக் கொண்டு தீர்ப்பளிப்பேன்'' என்றார்கள்.

மீண்டும் நபி (ஸல்) அவர்கள், ''எனது அறிவுரைகளிலும் நீங்கள் தேடும் தீர்வு உங்களுக்கு கிடைக்காவிட்டால் என்ன செய்வீர்கள்?'' என்று வினவினார்கள். அதற்கு முஆத் (ரலி) அவர்கள், ''நான் தேடுகின்ற தீர்வு அதிலும் எனக்குக் கிடைக்காவிட்டால் மிகவும் கவனத்தோடு ஆய்வுசெய்து தீர்ப்பளிப்பேன்'' என்றார்கள். உடனே நபி (ஸல்) அவர்கள் ''இறைவா! உன்னுடைய தூதராகிய நான் திருப்தி கொள்கின்ற வழிமுறையை எனது தோழருக்கும் வழங்கிய உனக்கே எல்லாப் புகழும்'' என்று கூறி முஆத் ரலி அவர்களின் நெஞ்சை தடவிக் கொடுத்தார்கள்.

இதுவே இஜ்திஹாதுக்கான பலமான ஆதாரமாகும். நபி (ஸல்) அவர்களின் காலத்தில் கூட எல்லா விடயங்களும் அல்குர்ஆனில் காணப்படுவதில்லை என்கின்ற விடயத்தை ஏற்றுக்கொண்டார்கள். நபிமொழியிலும் எல்லாவற்றுக்குமான தீர்வுகள் காணப்படுவதில்லை. புதிய சூழ்நிலைகள் உருவாகிக் கொண்டே போனது. நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே இஜ்திஹாதுக்கான சூழல் உருவாகியதென்றால் இன்று 1440 வருடங்களுக்குப் பிறகு அறிவியல், தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ள நிலையில் எவ்வளவு தூரத்துக்கு இஜ்திஹாத் காணப்பட வேண்டும்? இதனால் இஜ்திஹாத் செய்யப்பட வேண்டியது கட்டாயமானது. பழைய சிந்தனைகள் இன்றைய கால கட்டத்திற்கு பொருந்துவதில்லை. அதை இன்றைய சூழ்நிலைக்கு எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதைப் பற்றிய விடயங்களையே எமது உலமாக்களும் புத்திஜீவிகளும் சேர்ந்து செய்ய வேண்டும்.

இஜ்திஹாத் செய்கின்ற போது எமக்கு மத்தியில் சகிப்புத்தன்மை காணப்பட வேண்டும். நாம் மாத்திரம் ஒரு குழுவாக இருந்து கொண்டு அடுத்தவையெல்லாம் முனாபிக், முர்த்தத் என்று சொல்ல இயலாது. யாருடைய முறை சிறந்தது என்பதை அல்லாஹ்வே அறிகின்றான். அல்லாஹ்வே மிகப்பெரியவன். நாம் நல்லெண்ணத்துடன் இதைச் செய்து கொண்டு செல்ல வேண்டும். ஒரு முஸ்லிமாக நாம் கலிமாச் சொல்லி, நபியவர்களை பின்பற்றி நடக்கிறோம் என்றால் நாம் ஏன் மற்ற சகோதரர்களுடன் சண்டை பிடித்துக்கொள்ள வேண்டும்.

முஸ்லிம் சமூகத்தில் பல் வேறு பிரிவுகள் காணப்படலாம். இதற்காக வேண்டி நாம் அடுத்தவர்களுடன் கோபித்துக் கொண்டு எமது சமூகத்துக்கான நன்மையான விடயங்களில் பங்குபற்றாமல் இருப்பது தவறானது. இப்படியிருக்கும் போது எமக்கு மத்தியில் வேற்றுமையே உருவாகும். நாம் எமக்கு மத்தியில் ஒன்றுபடாமல் மாற்று மதத்தவர்களுடன் எவ்வாறு நல்லிணக்கத்தை பற்றிப் பேசுவது? இது மிகப்பெரும் சவாலாகும். எனவே எமக்கு மத்தியில் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, சகிப்புத்தன்மை வளர வேண்டும்.

முன்னைய காலத்தில் எமது சமூகத்திலுள்ள ஒவ்வொரு அமைப்பினரும் அவரவர் செயற்பாடுகளை எவ்விதப் பிரச்சினைகளுமின்றி முன்னெடுத்து வந்தார்கள். ஒரு பள்ளிவாசலில் ஒரு பிரிவினர் கந்தூரி, பராத் போன்ற செயற்பாடுகளையும் மற்றொரு அமைப்பினர் தஹ்லீம், பயான் போன்ற அம்சங்களையும் செய்து வந்தார்கள். பிற்பட்ட காலத்தில் ஒரு குழுவினர் மாத்திரம் பள்ளிவாசலை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்து மற்றைய அமைப்பினர்களை வெளியே தள்ளிவிட்டார்கள். இதனால் என்ன நடந்தது? அவர்கள் வேறு பள்ளியை நாடினார்கள். இப்படித்தான் புதிய பள்ளிவாசல்கள் உருவாகின. எனவே தௌஹீத் பள்ளிக்குள் என்ன நடக்கிறதென்று அடுத்தவர்களுக்குத் தெரியாது. இவையெல்லாவற்றையும் உடைத்துக் கொண்டே NTJ உருவானது.

எனவே முதலில் எம்மிடம் சகிப்புத்தன்மை காணப்பட வேண்டும். விட்டுக்கொடுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். நபி (ஸல்) அவர்களுக்குக் கூட தனது சிறிய தந்தையான அபூதாலிபுக்கு ஹிதாயத்தைக் கொடுக்க முடியவில்லை. இதன் அர்த்தம் அல்லாஹ்வைத் தவிர எங்களால் யாரையும் முஸ்லிமாக்கவும் முடியாது; ஹிதாயத்தை கொடுக்கவும் முடியாது. எனவே முஸ்லிமல்லாத ஒருவருக்கு ஹிதாயத்தை வழங்க முடியாதெனில், எமது சமூகத்தின் ஏனைய அமைப்பினர்களையும் கட்டாயப்படுத்த முடியாது. எனவே நாம் சகிப்புத் தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டும். எமது செயற்பாடுகளை நாம் தரமான முறையில் அமைத்துக்கொள்ளும் போது அதைப் பார்த்து அடுத்தவர்கள் எம்முடன் வந்து சேர்ந்துகொள்வார்கள். இந்த முறையிலே நாம் வாழ வேண்டும்.

நபி (ஸல்) அவர்களின் சிறிய தந்தையான அபூதாலிப் மரணத் தருவாயில் இருந்தபோது நபி (ஸல்) அவர்கள் அபூதாலிபுடைய முழு உடலையும் தடவினார்கள். நபியவர்களின் கைபடும் இடங்களை நரக நெருப்பு தீண்டாது என்பதால் நபியவர்கள் அபூதாலிபின் முழு உடலையும் தடவியபடி விரல் பகுதிக்கு சென்ற போது அவரது உயிர் பிறிந்தது. அப்போது அல்லாஹ் பின்வரும் வசனத்தை இறக்கினான்.

''நபியே! நிச்சயமாக நீர் விரும்பியோரை நேர்வழியில் செலுத்திவிடமாட்டீர். எனினும் அல்லாஹ் தான் நாடியோரையே நேர்வழியில் செலுத்துகின்றான். மேலும் நேர்வழி பெறுகின்றவர்களை அவனே மிக மிக அறிந்தவன்'' (28:56)

நபி (ஸல்) அவர்களுக்கே அவ்வளவுதான் முடிந்தது என்றால் நாங்கள் யார்? எனவே இந்த வரையறையை நாம் அறிந்துகொள்ள வேண்டும். இவ்வரையறையை அறிந்துகொள்ள முடியாமல் போகின்ற போதே நாம் வலுக்கட்டாயமான முறையில் மற்றுமொருவருக்கு எமது மார்க்கத்தை திணிக்கப் பார்க்கின்றோம். இதில் தான் சகிப்புத்தன்மை இல்லாமல்போய் பிரச்சினை ஏற்படுகின்றது. நாம் சிறந்த முறையில் வாழ்கின்ற போது எம்மைப் பார்த்து இன்னுமொருவருக்கு ஹிதாயத் உரித்தாகும் என்றிருந்தால் அதனை அல்லாஹ் வழங்குவான். அதனால் நாம் இன்னுமொருவருக்கு ஹிதாயத் கொடுக்க முன்னர் எமது சமூகத்திற்குள் சகிப்புத்தன்மையை ஏற்படுத்த வேண்டும்.

எமது சமூகத்திலுள்ள விடயங்களை எமக்குள்ளால் தீர்த்துக்கொள்ள வேண்டும். அதை விடுத்து எமது பிரச்சினைகளை மற்றைய சமூகத்தவர்களுடன் கூறி தீர்வுகாண முற்படக் கூடாது. முதலாவது எமக்குள் ஒற்றுமை ஏற்பட வேண்டும். பள்ளிவாசலை எல்லோருக்கும் திறந்துவிட வேண்டும். அங்கு அமைதியான சூழல் ஏற்படுத்தப்பட்டு அனைவரும் வந்து போகும் இடமாக மாற்றப்பட வேண்டும். இதற்கு எமக்குள் விட்டுக் கொடுப்பும் சகிப்புத்தன்மையுமே மிக முக்கியமானது.

# அநாகரிகத்தின் அத்திவாரம்

• விக்டர் ஐவன்

தமிழில்: ராஃபி சரிப்தீன்

வளமான அரசியல் விழிப்புணர்வும், ஜனநாயக விழுமியங்களும் இல்லாமல் இருப்பது இலங்கை முகம் கொடுத்திருக்கும் நெருக்கடிகளுக்கும் தோல்விகளுக்கும் பிரதானமான காரணங்களாகக் கருத முடியும். சுதந்திரம் கிடைத்த காலத்திலிருந்து இந்த நிலை தான் தொடருகிறது.

சுதந்திரத்துக்கான பாரியதொரு போராட்டம் நடத்தப்படாமலேயே இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தது. இலங்கை நவீன உலகில் பிரவேசித்ததன் பின்னர் உருவான முற்போக்கு அரசியல் தலைவர்கள் யாருமே லிபரல் அரசியலின் மரபொழுக்கங்களைப் பற்றி ஆழமாக அறிந்தவர்களல்லர். மாக்ஸ்வாத நூல்கள் பல சிங்களத்தில் வெளிவந்திருந்தாலும், பாரம்பரிய லிபரல் சிந்தனையாளர்களது நூல்கள் எதுவுமே இதுவரை சிங்களத்தில் வெளிவரவில்லை. கலாநிதி சானக அமரதுங்க 80 களின் இறுதியில் லிபரல் கட்சி என்ற பெயரில் ஆரம்பித்த அரசியல் கட்சியும் ஆங்கிலம் பேசுபவர்களுக்கே மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தது. இலங்கைத் தேசிய காங்கிரஸின் தலைவர்களுக்கிடையே மேற்கு நாடுகளில் கல்வி கற்ற சிலர் இருந்த போதிலும், லிபரல் மரபொழுக்கங்களைப் பற்றி பரந்த தெளிவு படைத்த ஒரு தலைவராவது இருக்கவில்லை. அவர்களுக்கிடையில் அறிவில் சிறந்து விளங்கிய பொன்னம்பலம் அருணாச்சலம் கூட லிபரல்வாத தலைவராகக் கொள்ளக் கூடியவரல்ல.



### சமசமாஜ இயக்கம்

அறிவுபூர்வமான சிறந்த ஒருங்கிணைப்பு சமசமாஜ இயக்கத்திடமே காணப்பட்டது. மிக்மோர் குறிப்பிடுவது போன்று, அது புத்திஜீவிகளின் இயக்கம். அவர்களில் தேச எல்லைகளைக் கடந்தவர்கள் இருந்தார்கள். முக்கியஸ்தர்கள் அனைவருமே வெளிநாடுகளில் கல்வி கற்றவர்களாக இருந்தார்கள். ஒரே குலத்தில், ஒரே இனத்தில் அவர்கள் திருமணம் முடிக்கவில்லை. அவர்கள் கலப்புத் திருமணம் புரிபவர்களாக இருந்தார்கள். கொவிகம குலமாக மட்டுமே இல்லாமல் பிரபல்யம் இல்லாத பல குலங்களைச் சேர்ந்தவர்களாக, மத நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்டவர்களாக அவர்கள் இருந்தார்கள். அறிவு ரீதியாக அவர்கள் திறமை வாய்ந்தவர்களாக இருந்ததோடு, சிறந்த தலைவர்களாகவும், சிறந்த எழுத்தாளர்களாகவும், பாராளுமன்ற அரசியல் முறையில் முன்னோடிகளாகவும் அவர்கள் விளங்கினார்கள். துரதிர்ஷ்டவசமாக அவர்கள் லிபரல் வாதத்திலிருந்து மாக்ஸ்வாதத்துக்கு மாறினார்கள். அவர்கள் அரசையும் பாராளுமன்றத்தையும் மார்க்ஸினதும் லெனினினதும் கோணங்களில் பார்த்தார்கள். அவர்களின் அதிகமான அக்கறை வர்க்கங்களில் இருந்ததேயல்லாமல் தேசத்தில் இருக்கவில்லை.

இலங்கைச் சிங்களவர்களின் சிந்தனையில் அதிக தாக்கம் செலுத்தியவராக அநகாரிக தர்மபாலவைக் கருத முடியும். தமிழ்ச் சமூகத்தில் ஆறுமுகநாவலர் இந்த இடத்தைப் பெறுகிறார். சிங்கள மக்கள் தர்மபாலவையும், தமிழர் நாவலரையும் வீர புருஷர்களாகக் கருதினாலும், இந்திய மதச் சீர்திருத்த இயக்கத்தின் ராஜ் ராம் மோகன் ராய், அஹமத் கான் போன்றோருடன் ஒப்பிடும் போது, நாவலரும் தர்மபாலவும் குறுகிய சிந்தனை படைத்த சிறிய மனிதர்களாகவே தோன்றுகிறார்கள்.

இந்திய மதச் சீர்திருத்த இயக்கத்தின் சமூக சிந்தனையின் இறுதி இலக்கு விரிவாக்கப்பட்டதன் பின்னர் அதனை அர்த்தமுள்ள முடிவொன்றை நோக்கிய இயக்கமாக நகர்த்தியது சுதந்திரத்துக்கான இயக்கமே. அது இந்தியர்களுக்கு ஜனநாயகத்தையும் ஜனநாயகத்தின் பெறுமதியையும் கற்றுத் தந்தது. மதச்சார்பின்மைக்கு முழுமையாக அர்ப்பணிக்கப்பட்ட அனைத்து விதமான வர்க்க, மத, குலவாதங்களுக்கு எதிராக பலமான சிந்தனைப் புரட்சியில் ஈடுபட்ட இயக்கமாக அதனைக் கருத முடியும். காந்தி மதவாதியாகக் கருதப்பட்டாலும் அவர் [illegible] வில்லை. மதச்சார்பற்ற நாட்டையே [illegible] அவர், மதம் பாடசாலையில் கற்றுக் கொடுக்கப்பட வேண்டிய அவசியமில்லை என்று கருதுபவராக இருந்தார்.

### சிந்தனா வறுமை

இலங்கையின் சுதந்திரத்துக்கு சிந்தனா ரீதியான பின்னணியொன்று இருக்கவில்லை. அதேபோல அது சமூகத்துக்கு சிந்தனா ரீதியில் எந்தத் தாக்கத்தையும் விளைவிக்கவுமில்லை. இந்திய சுதந்திரப் போராட்டத்துக்கு 1936 களிலேயே மனித உரிமைப் பிரகடனம் ஒன்று இருந்தது. அப்போது ஐக்கிய நாடுகள் சபை கூட இருக்கவில்லை. டி.எஸ். சேனநாயக்க வைட்ஹோல் அதிகாரசபைக்கு முன்வைத்த அரசியல் யாப்பு முன்மொழிவு ஐவர் ஜெனிங்ஸ் ஊடாகவே முன்வைக்கப்பட்டது. யாப்பில் மனித உரிமைப் பிரகடனம் உள்வாங்கப்படுவதற்கு டி.எஸ். எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் சொல்லப்படுகிறது. ஜீ.ஜீ. பொன்னம்பலத்துக்கு மனித உரிமைகள் பிரகடனத்தின் பெறுமதி தெரிந்திருந்தால் ஜீ.ஜீ.பொன்னம்பலமும் ஐம்பதுக்கு ஐம்பதை விட மனித உரிமைப் பிரகடனத்தையே கோரியிருப்பார். இந்தியா 1936 இல் பேசத் தொடங்கிய மனித உரிமை தொடர்பான விடயங்களை இலங்கை 70 களிலேயே பேசத் தொடங்கியது.

அரசியல் விழிப்புணர்வு தொடர்பில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலுள்ள இடைவெளியை இதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். சுதந்திரத்துக்கான ஆர்ப்பாட்டங்கள் நடந்த வேளையிலும், சுதந்திரம் பெற்ற பின்னரும் இந்தியாவில் நிலவிய அரசியல் விழிப்புணர்வுக்கு நிகரான முன்னேற்றகரமான விழிப்புணர்வு இலங்கையிலும் நிலவியிருந்தால், இன, குல, மதத்தை முற்படுத்திய பிரச்சினைகளை சிறந்த மனித உரிமைப் பிரகடனமொன்றை வகுத்துக் கொள்வதன் மூலம் தீர்த்துக் கொள்ள முடியுமாக இருந்திருக்கும். அரசியல் முதிர்ச்சியில் காணப்பட்ட இந்தப் பின்னடைவு அனைத்து இனங்களையும் சேர்ந்த தலைவர்களில் மட்டுமன்றி, அரசிலும் அதன் நிர்வாக ஒழுங்கிலும் குறிப்பாக நீதித் துறையிலும் தாக்கம் செலுத்தியது.

நவீன ஜனநாயக ஆட்சி முறையும் அதனுடன் தொடர்பான அனைத்தும் லிபரல்வாதக் கொள்கையின் மேலேயே கட்டி எழுப்பப்பட்டிருப்பதனால் லிபரல்வாதம் தொடர்பான தெளிவு பெற்றிருப்பது அவசியமாகிறது. நவீன அரசியல் யாப்பு கூட லிபரல் வடிவமைத்தது தான். அந்த வகையில் அதற்கொரு முதலாளித்துவ முகம் இருந்தாலும், லிபரல்வாதத்தை ஜனநாயகத்தின் அரசியல் மதம் என்று சொல்ல முடியும். இலங்கையில் ரஷ்யப் புரட்சி, சீனப் புரட்சி, கியூபா புரட்சி பற்றி மனப்பாடத்தில் சொல்வதற்குத் தெரிந்திருந்தாலும், ஆங்கிலப் புரட்சி, அமெரிக்கப் புரட்சி, பிரெஞ்சுப் புரட்சி பற்றிய அறிவிருக்கவில்லை. முன்னைய புரட்சிகள் தொடர்பில் சிங்களத்தில் எழுதப்பட்ட அல்லது மொழிபெயர்க்கப்பட்ட புத்தகங்கள் நிறைய இருந்தாலும், இரண்டாவதாகச் சொல்லப்பட்ட புரட்சிகள் பற்றி பொதுவான வரலாற்றுப் புத்தகங்களில் வருவதேயல்லாமல், சிங்கள மொழியில் எழுதப்பட்ட அல்லது மொழி பெயர்க்கப்பட்ட புத்தகங்கள் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். மார்ட்டின் விக்கிரமசிங்க போன்ற அறிவியலாளர்களும், மார்க்ஸ்வாதம், சமூகவுடமை பற்றியெல்லாம் எழுதினாலும், லிபரல் வாதம் பற்றி எழுதவில்லை. சிந்தனையின் ஏற்பட்ட இந்த வெறுமை இலங்கையின் தோல்வியில் முக்கிய காரணியாக தாக்கம் செலுத்தியது.

### அரசியல் யாப்பு

அரசியல்ரீதியில் நாகரிகமடைந்த நாடுகள் தமது அரசியல் யாப்பினை கண்ணியத்துடன் பாதுகாக்கப்பட வேண்டிய புனிதமான ஒன்றாகவே பார்க்கின்றன. அரசியல் யாப்பினை மீறுவதனை அவர்கள் மனித சமூகத்தையே கூட்டாகக் கொலை செய்வது போன்ற பெரும் பாவமாகவே நோக்குகின்றார்கள். நாகரிகமடைந்த நாடுகளில் அரசியல் யாப்போ, அரசியல் யாப்பு நடைமுறைகளோ அரிதாகவேனும் மீறப்படும் போது, உடனடியாகவே அந்தத் தவறினைத் திருத்திக்கொள்வதற்கான முயற்சி எடுக்கப்படுகிறது.

இந்தியாவில் இந்திரா காந்தியின் ஆட்சியின் போது அவருக்கிருந்த பெரும்பான்மைப் பலத்தைப் பிரயோகித்து யாப்பின் தோற்றத்தையும் அமைப்பையும் மாற்றுவதற்கு ஏதுவாகும் வகையில் 1976 இல் 42 ஆவது திருத்தத்தை அங்கீகரிப்பதற்கு அவரால் முடியுமாகவிருந்தது. நீதிமன்றம் இதற்குப் பலமான எதிர்ப்புத் தெரிவித்த போதும், இதனையும் மீறி தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு அவருக்கு முடியுமாகவிருந்தது.

அவர் செய்த இந்த சாகசம், இந்திய சமூகத்தில் பலமான எதிர்ப்பை அவருக்குச் சம்பாதித்துக் கொடுத்தது. 1977 தேர்தலில் அவர் அடைந்த தோல்வியைத் தீர்மானிக்கும் அளவுக்கு அது பாதிப்புச் செலுத்தியது. இந்தத் தேர்தலில் ஜனதா கட்சி வெற்றியீட்டியதன் பின்னர் 1978 இன் 42 மற்றும் 43 ஆவது திருத்தங்களினூடாக அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட்ட மாற்றத்தை சரிசெய்தது. அத்தோடு, இந்தியாவில் ஆட்சியில் அமரும் ஆளும் கட்சிகள் யாப்பின் தோற்றத்தையும் கட்டமைப்பையும் மாற்றுவதனை இந்திய உயர் நீதிமன்றம் தடை செய்தது.

13 உயர்நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய குழுவினால் வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்பு, இந்தியாவில் ஆட்சி செய்த எல்லா ஆட்சியாளர்களினதும் எதிர்ப்புக்கு உள்ளாகிய போதிலும், எந்த ஆட்சியாளருக்கும் நீதிமன்றத்தின் இந்த வழிமுறையை மாற்ற முடியவில்லை. அரசியலமைப்பைப் பாதுகாக்கும் காவல் தேவதையாக உயர்நீதிமன்றமே செயற்பட வேண்டும். இந்திய உயர் நீதிமன்றம் தம்மீது சுமத்தப்பட்டிருக்கும் இந்தப் பொறுப்பை அட்சரம் பிசகாமல் நிறைவேற்றி வருகிறது.

### யாப்பை மீறுதல்

யாப்பை மீறுவதில் உலகில் முதலிடத்தை இலங்கைக்குப் பெற முடியும். பல தடவைகள் இலங்கையில் யாப்பு மீறப்பட்டுள்ளது. இந்த எந்தச் சந்தர்ப்பத்திலும் அது மக்களின் பலத்த எதிர்ப்பை எதிர்நோக்கவில்லை. இலங்கையில் யாப்பு மீறப்படுவதற்கு உரித்தான முக்கிய அடையாளம், யாப்பு மீறப்படும் சந்தர்ப்பங்களில் நிறைவேற்றதிகாரம், சட்டவாக்கம், நீதித் துறை என்ற ஜனநாயகத்தின் மூன்று தூண்களும் அதனுடன் இணைந்து கொள்வது. அடுத்த அடையாளம், யாப்பு மீறப்படும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அந்தத் தவறைத் திருத்திக் கொள்வதற்கான முயற்சியேதும் எடுக்கப்படுவதில்லை. இதனை எமது நாட்டின் அரசியல் பண்பாட்டை எடுத்துக் காட்டும் சிறந்த கண்ணாடியாகக் கருத முடியும்.

முதலாவது யாப்பு மீறல் 1956 இன் சிங்களம் அரச மொழியாக்கப்பட்டதில் தொடங்குகிறது. சோல்பரி யாப்பின் 29 (!!!) பிரிவின்படி, எந்த இன அல்லது மதக் குழுக்களுக்கும் சார்பாகவோ எதிராகவோ சட்டம் இயற்றுவது தடுக்கப்பட்டுள்ளது. தான் இந்த யாப்புக்கு முரணாகச் செயற்படுவதாக பிரதமர் பண்டாரநாயக்க அறியாமல் இருந்திருக்க முடியாது. சட்டமா அதிபருக்கும் சபாநாயகருக்கும் இது தெரியாமலிருக்க வாய்ப்பில்லை. சிங்களத்தை அரச மொழியாக்கும் சட்டம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர், சிங்கள தகுதி காண் பரீட்சையில் சித்தியடையத் தவறிய கோடீஸ்வரன் எனும் தமிழ் குமாஸ்தா, தனது பதவியுயர்வும், சம்பள அதிகரிப்பும் தடைப்படுவதற்கு எதிராக அரச மொழிக் கொள்கைளை சவாலுக்குட்படுத்தி மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தொடுத்தார்.

அரச ஊழியர் ஒருவருக்கு அரசுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது என்று கூறி அரச வழக்கறிஞர் வழக்கைத் தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார். மாவட்ட நீதிபதி கோடீஸ்வரனுக்குச் சார்பாகத் தீர்ப்பு வழங்கினாலும் சட்டமா அதிபர் அதனை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்றார். மேன்முறையீட்டு நீதிமன்றம் மாவட்ட நீதிபதியின் தீர்ப்பைத் தள்ளுபடி செய்தது. முறைப்பாடு செய்தவர் பெடரல் கட்சியின் துணையுடன் வழக்கை பிரிவி கவுன்சிலுக்கு கொண்டு சென்றார். சிங்கள அரச மொழிக் கொள்கை அரசியல் யாப்புக்கு முரணானது என பிரிவி கவுன்சில் தீர்ப்பு வழங்கியது.

(பக்.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேர்லின் உச்சிமாநாடும் லிபியாவின் அரசியல் எதிர்காலமும்

• கலாநிதி றவூப் ஸெய்ன்

ஜனவரி 19 இல் ஜேர்மனியின் தலைநகர் பேர்லினில் நடைபெற்ற லிபியாவின் சிவில் யுத்தம் குறித்த உச்சிமாநாடு குறிப்பிட்டுக் கூறக் கூடிய எதிர்பார்ப்புக்களின்றி நிறைவடைந்துள்ளது. 13 ஆம் திகதி அங்காரா மற்றும் மொஸ்கோவுக்கிடையில் இடம்பெற்ற போர் நிறுத்த பேச்சுவார்த்தைகளை ஆவணப்படுத்தி சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரையும் அது குறித்து கருத்தொருமைப்பாட்டை உருவாக்குவதற்கே பேர்லின் உச்சிமாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.

ஜேர்மன், ரஷ்யா, துருக்கி, எகிப்து, ஐக்கிய அறபு அமீரகம், திரிப்போலியைத் தளமாகக் கொண்ட தேசிய நல்லிணக்க அரசாங்கத்தின் பிரதிநிதிகள், ஐ.நா. சபைப் பிரதிநிதிகள், ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியப் பிரதிநிதிகள், ஜேர்மன் ஆகியன உச்சிமாநாட்டில் கலந்துகொண்டன.

கடாபி ஆட்சியில் இராணுவத் தளபதியாக விளங்கிய கலீபா ஹப்தரின் படையினர் திரிப்போலியை நெருங்கி வரும் வேளையில் இவ் உச்சிமாநாடு இடம்பெற்றுள்ளது. இதேவேளை, ஆபிரிக்க நாடான, எண்ணெய் வளமிக்க லிபியாவில் எண்ணெய் வயல்கள் செறிவாக உள்ள பிராந்தியங்களில் பெரும்பாலானவற்றை ஹப்தரின் படை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளது. இதனால் லிபியாவின் சர்வதேச சந்தைக்கான எண்ணெய் ஏற்றுமதி 1.2 பில்லியன் பீப்பாய்களால் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது ஐரோப்பிய எண்ணெய் வளப் பற்றாக்குறையை ஏற்படுத்துவதோடு, உலகச் சந்தையில் பெற்றோலியத்திற்கான விலை அதிகரிப்பை ஏற்படுத்தலாம் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இத்தகைய சூழ்நிலையிலேயே லிபியா குறித்த உச்சிமாநாடு பேர்லினில் நடைபெற்று முடிந்துள்ளது.

மொஸ்கோ, அங்காரா இரண்டும் இணைந்து திரிப்போலி அரசாங்கமும் ஹப்தர் அணியும் கடந்த ஒன்பது மாதங்களாக ஈடுபட்டு வரும் சிவில் போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என தயாரித்த ஆவணத்தில் கலீபா ஹப்தர் ஒப்பமிடவில்லை. ஐ.நா.வினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய நல்லிணக்க அரசின் தலைவர் பயாஸ் அல் சர்ராஜ் மற்றும் ஹப்தர் ஆகியோர் மொஸ்கோவிற்கு அழைக்கப்பட்டனர். பிரேரணையை சர்ராஜ் ஏற்றுக்கொண்டு ஒப்பமிட்ட போதும் ஹப்தர் ஆவணத்தில் கையொப்பமிடவில்லை.

கோட்பாட்டளவில் போர் நிறுத்தத்திற்கு ஹப்தர் இணக்கம் தெரிவித்துள்ள போதும், ஆவணத்திலுள்ள நிபந்தனைகள் எதனையும் அவர் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. இந்நிலையிலேயே பேர்லின் உச்சிமாநாடு 19 ஆம் திகதி இடம்பெற்றது.

ஹப்தரின் படையினர் லிபியாவின் எண்ணெய் வயல்கள் மீது தாக்குதல்களை ஆரம்பித்தபோதே மேற்கு நாடுகள் வழிப்படைந்தன. ஹப்தரின் படை தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்துமானால் நாளொன்றுக்கு 72,000 கச்சா எண்ணெய் பீப்பாய்களை லிபியா இழக்க நேரிடும் என்பதோடு, லிபியாவின் பெற்றோலிய ஏற்றுமதியும் பெருமளவு பாதிக்கப்படும் என்ற எச்சரிக்கப்படுகின்றது.

உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட நாடுகளில் அரைவாசிக்கும் மேற்பட்டவை ஹப்தர் அணிக்கு ஆயுதங்களையும் நிதியாதரவையும் வழங்கி வருகின்றவை என்பது மிகவும் எதிரிடையானது. முக்கியமாக அர்தூகானுடன் இணைந்து போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு ஆதரவளிக்கும் புட்டின், ஹப்தருக்கு ஆயுதங்களை விநியோகித்தவர். அதே போன்று, எகிப்து மற்றும் ஐக்கிய அறபு அமீரகம் என்பனவே பிரிவினைவாத ஹப்தரின் ஆக்கிரமிப்புப் படைக்கு பெருமளவு ஆயுதங்களையும் நிதியாதரவையும் வழங்கி வருகின்றன.

வெளிநாட்டுத் தலையீடுகளின் விளைவே ஹப்தரின் போர் முன்னேற்றம் என்று கருதப்படுகின்றது. இந்நிலையில், 55 பக்க போர் நிறுத்த அறிக்கையில் ஹப்தர் நேரடியாக ஒப்பமிடவில்லை எனக் கூறப்படுகின்றது. உச்சிமாநாட்டில் கலந்துகொண்ட சில மேற்கு நாட்டுத் தலைவர்கள் லிபியாவில் வெளிநாட்டுத் தலையீடுகள் அதிகம் இடம்பெறுகின்றன எனவும், அவை நிறுத்தப்பட்டு நிரந்தர போர் நிறுத்தத்திற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளன.

கடந்த ஒன்பது மாதங்களாகப் போர் நிறுத்தத்தைக் கொண்டு வர பல்வேறு முயற்சிகள் நடைபெற்ற போதும், திரிப்போலியைக் கைப்பற்றும் ஹப்தரின் இராணுவ முன்னகர்வு நிறுத்தப்படவில்லை. இதற்கான மூல காரணம் லிபியாவில் இடம்பெறும் வன்முறைகளுக்குப் பின்னால் ரஷ்யா, எகிப்து மற்றும் அமீரகம் என்பன இருந்து வருவதே.

உச்சிமாநாட்டில் கலந்துகொண்ட நாடுகளில் ஜேர்மனி, கொங்கோ, பிரான்ஸ், அல்ஜீரியா ஆகிய நாடுகளும், அபிரிக்க ஒன்றியமுமே லிபியப் போரில்







சம்பந்தப்படாதவை. ஏனைய நாடுகள் லிபியாவின் எண்ணெய் வளத்தில் குறியாக உள்ளன. ஹப்தரின் படை திரிப்போலியைக் கைப்பற்றுவது தமது நலன்களுக்குச் சார்பானது என்று நம்புகின்றன. லண்டனும் மொஸ்கோவும் வொஷிங்டனும் தமது பொருளாதாரத் தேவைகளுக்காக கலீபா ஹப்தருக்கு மறைமுகமாக ஆதரவளித்து வருகின்றன. இந்நிலையில், ஐ.நா.வின் அங்கீகாரத்திற்கு உட்பட்ட பயாஸ் சர்ராஜின் அரசாங்கம் இராணுவ ரீதியில் ஒப்பீட்டளவில் பலவீனமாகவே உள்ளது. இந்நிலையில் உச்சிமாநாட்டில் வலியுறுத்தப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் எந்தளவு சாத்தியப்படும் என்பதும், அதற்கு இந்நாடுகள் இதய சுத்தியுடன் ஆதரவளிக்கின்றனவா என்பதும் கேள்விக்குறியே.

உச்சமாநாட்டில் கலந்துகொண்ட அனைத்துத் தரப்பும் 55 அம்சங்களைக் கொண்ட அறிக்கையில் ஒப்பமிட்டுள்ளன. ஐ.நா.வினால் அமுல்படுத்தப்பட்டுள்ள லிபியாவுக்கான ஆயுத ஏற்றுமதித் தடையை தாங்கள் மதிப்பதாக அவை வலியுறுத்தியுள்ளன. ஆனால், தொடர்ந்தும் லிபியாவின் ஹப்தர் படைக்கு ஆயுதங்களும் நிதியும் தங்குதடையின்றி கிடைத்துக் கொண்டிருக்கிறது.

உச்சிமாநாட்டில் உரையாற்றிய ஜேர்மன் சான்சலர் அஞ்சலா மார்கல், "லிபியாவில் இடம்பெறும் இரத்தக் களரியை முடிவுறுத்த முன்னால் உள்ள பாதை மிகவும் சவால் நிறைந்தது. ஏனெனில், புவி அரசியல் மற்றும் பொருளாதார நலன்களுக்காக அங்கு இடம்பெறுவது ஒரு சிக்கலான நிழல் யுத்தம்" எனத் தெரிவித்தார்.

ஜனவரி 12 இல் ரஷ்யாவும் துருக்கியும் இடையீட்டாளராக நின்று உருவாக்கிய போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு சர்வதேச ஆதரவையும் ஐ.நா.வின் சட்ட ரீதியான அங்கீகாரத்தையும் பெறுவதே உச்சிமாநாட்டின் நோக்கமாக இருந்தது. ஹப்தரும் சர்ராஜும் உச்சிமாநாட்டின் உள்ளடக்கம் குறித்து விளக்கமளிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இரு தரப்பு மட்டுமன்றி, வெளித் தலையீடுகளை மேற்கொள்ளும் நாடுகளும் நிரந்தரப் போர் நிறுத்த உடன்படிக்கையை ஆதரிக்க வேண்டும் என ஜேர்மன் தலைவர் மார்கல் உச்சரிமாநாட்டில் மீள வலியுறுத்தினார்.

2011 இல் லிபியாவில் ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சியைத் தொடர்ந்து முன்னாள் இராணுவ ஆட்சியாளர் முஹம்மர் கடாபியை நேட்டோ படையினர் கொன்றனர். அதனைத் தொடர்ந்து லிபியாவில் மிகப் பெரும் அரசியல் குழப்பங்களும் வன்முறைகளும் இடம்பெறத் தொடங்கின. லிபியா எண்ணெய் வளமிக்க நாடு என்பதனால் குழப்பகரமான லிபியாவின் அரசியல் சூழலை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள எண்ணிய நாடுகள் லிபியாவின் உள்விவகாரங்களில் தலையிடத் தொடங்கின.

கடாபிக்குப் பின்னர் அந்நாட்டில் ஓர் இடைக்கால அரசாங்கம் உருவாக்கப்பட்டது. பின்னர் இடம்பெற்ற தேர்தலைத் தொடர்ந்தும் அதிகப்படியான ஆசனங்களைப் பெற்ற கட்சி என்ற

> **"ஹப்தருக்குப் பின்னால் உள்ளவர்கள் திரிப்போலி அரசைக் கவிழ்ப்பதில் ஹப்தரை விட மும்முரமாக இருப்பார்களாயின், பேர்லின் உச்சிமாநாட்டில் எந்த அர்த்தமும் இல்லாமல் போய் விடும். லிபியாவில் அமைதியைத் தோற்றுவிப்பதற்கு அறபு நாடுகளிடமும் ஐரோப்பிய நாடுகளிடமும் இருக்க வேண்டிய ஒரே விடயம் அரசியல் நேர்மை மட்டுமே."**
>
> -அரசியல் ஆய்வாளர் க்ளெடியா காஸினி-

வகையில் பயாஸ் சர்ராஜின் அரசாங்கம் சட்டபூர்வமானது என்று ஐ.நா. அங்கீகரித்தது. ஆனால் கடாபியின் முன்னாள் இராணுவ ஜெனரலாகப் பணியாற்றிய கலீபா ஹப்தரை அமீரகம், சவூதி மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் திரிப்போலி அரசுக்கு எதிராகக் கிளறுமாறு ஊக்குவித்தன. மொஸ்கோ தனது பங்கிற்கு ஆயுத விநியோகத்தில் ஈடுபட்டது. வொஷிங்டன் இறுதியில் வெல்லப் போகும் சக்திகளை கவனமாக எதிர்பார்த்து நின்றது.

கடந்த ஒன்பது மாதப் போரில் ஆயிரக்கணக்கான லிபியர்கள் கொல்லப்பட்டதோடு, பல்லாயிரக்கணக்கானோர் லிபியாவை விட்டு வெளியேறினர். ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். திரிப்போலியைக் கைப்பற்றும் முனைப்பில் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து ஹப்தர் தனது தாக்குதலைத் தீவிரப்படுத்தினார்.

லிபியாவின் சிவில் யுத்தத்தில் 2019 ஏப்ரல் ஒரு திருப்புமுனையாகும். தற்போது திரிப்போலியை கைப்பற்றும் முயற்சியில் ஹப்தர் படிப்படியான முன்னேற்றங்களைக் கண்டுவரும் நிலையிலேயே பேர்லின் உச்சிமாநாடு நடைபெற்றது.

"ஐரோப்பாவும் ஐரோப்பிய நாடுகளும் லிபியப் பிரச்சினையில் ஈடுபாடு கொண்டுள்ளன என்பதைக் காட்டுவதற்கு பேர்லின் பயனுள்ள உச்சிமாநாடு தான். அதேவேளை, பிராந்தியத்தில் லிபியப் போரைத் தீவிரப்படுத்தும் நாடுகள் மென்மேலும் வன்முறையைத் தூண்டாமல் இருப்பதற்கு ஐரோப்பா அவர்கள் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்கிறார் சர்வதேச நெருக்கடிக் குழுவின் சிரேஷ்ட அரசியல் ஆய்வாளர் க்ளெடியா காஸினி. இவ் உச்சிமாநாடு மோதலை நிறுத்துவதற்குப் போதுமானதா என்பதே இப்போதைக்குள்ள கேள்வி என அவர் தெரிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டிலிருந்தே ஐ.நா.வின் ஆயுத ஏற்றுமதித் தடை அமுலில் உள்ளது. ஆனால், அது பலவீனமாகவே உள்ளது. வெளிநாட்டு சக்திகள் லிபியாவிலுள்ள தமது நேச அணியினருக்கு ஆயுதங்ளை கடந்த ஒன்பது ஆண்டுகளாக விநியோகித்தே வந்துள்ளது. தேசிய நல்லிணக்க அரசுக்கு துருக்கி அரசாங்கம் தனது படையினரையும் ஆயுதங்களையும் கடந்த சில மாதங்களாக வழங்கி வருகின்றன. அதேவேளை, ரஷ்யாவும் எகிப்தும் அமீரகமும் ஹப்தரின் படைப் பலத்தைப் பெருக்கி வருகின்றன.

ஆகவே உச்சி மாநாட்டு அறிக்கையும் தீர்மானங்களும் எவ்வளவு தூரம் நம்பகத் தன்மை கொண்டவை என்பதும் இதயசுத்தியுடனானவை என்பதும் கேள்விக்குள்ளானவை. பேர்லின் உச்சிமாநாட்டுத் தீர்மானங்கள் ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு அனுப்பப்படவுள்ளன. அதன் அனுமதியைப் பெற்று நடைமுறைப்படுத்துவது அதன் நோக்கமாகும். ஆனால், வெளிநாடுகளின் தலையீடுகளை நிறுத்துவது குறித்த வாக்கினை எந்தளவு தூரம் இந்நாடுகள் நிறைவேற்றும் என்பது ஐயத்திற்கு இடமானவை.

பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளாக உள்ள ரஷ்யாவும் பிரான்ஸும் பிரிவினைவாத ஹப்தரின் அனுதாபிகள் என்பது நிலமையை மேலும் சிக்கலாக்குகின்றது. எதிர்வரும் நாட்களில் ஹப்தர் மற்றும் சர்ராஜ் அணிகளிலிருந்து தலா ஐந்து இராணுவ உயர் அதிகாரிகள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். ஐ.நா. பொதுச் செயலாளர் என்டோனியோ கட்டர்ஸ், அவர்கள் பத்துப் பேரின் பெயர்களும் அறுதியிடப்பட்டுள்ளன என பேர்லின் மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

பேர்லின் மாநாடு, லிபியாவின் சிவில் யுத்தம் முடிவுக்கு வர வேண்டும். தவறும் பட்சத்தில் அந்நாட்டின் பொருளாதாரம், சமூகம் அழிந்து நாசமாகி விடும் என்பதை உணர்த்தும் வகையில் இடம்பெற்றுள்ளது. ஆனால், கலந்துரையாடல்களின் உள்ளடக்கங்கள், முடிவுரைகள், தீர்மானங்கள் என்பவற்றை எந்தளவு தூரம் சம்பந்தப்பட்ட நாடுகள் அமுல்படுத்தப் போகின்றன என்பதைப் பொறுத்தே லிபியாவில் போரா, சாமாதானமா என்பது தீர்மானிக்கப்படும்.

ஹப்தருக்குப் பின்னால் உள்ளவர்கள் திரிப்போலி அரசைக் கவிழ்ப்பதில் ஹப்தரை விட மும்முரமாக இருப்பார்களாயின், பேர்லின் உச்சிமாநாட்டில் எந்த அர்த்தமும் இல்லாமல் போய் விடும். லிபியாவில் அமைதியைத் தோற்றுவிப்பதற்கு அறபு நாடுகளிடமும் ஐரோப்பிய நாடுகளிடமும் இருக்க வேண்டிய ஒரே விடயம் அரசியல் நேர்மை மட்டுமே என்கிறார் காஸினி.

ஐ.நா.வின் சமாதானத் திட்டம், அரசியல், இராணுவம், பொருளாதாரம் ஆகிய மூன்றையும் தழுவியதாகும். இவை மூன்றிலும் உடன்பாடுகளை எட்டுதல் என்பது ஐ.நா. நீண்டகாலமாகத் தோல்வியடைந்து வரும் விவகாரமாகும். 76 வயதான ஹப்தரின் உளவியல் காரணிகள் போரை மும்முரப்படுத்துவதற்கே ஊக்கமளிப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். ஒரு வகை அதிகார வெறியினால் தூண்டப்பட்டுள்ள ஹப்தர், லிபியாவின் பிரதான எண்ணெய் வயல்கள் மீது தாக்குதலை ஆரம்பித்து, சர்ராஜின் அரசாங்கத்தை குலைநடுங்கச் செய்துள்ளார்.

1.2 பில்லியன் பெற்றோல் ஏற்றுமதியை லிபியா இழந்துள்ளது. ஹப்தரின் படை முன்னேறிச் செல்லுமானால் நாளொன்றுக்கு 72,000 பீப்பாய் கச்சா எண்ணெய்யை லிபியா இழக்க வேண்டி ஏற்படும். ஏற்கனவே, ஹப்தரின் படைதான் பெருமளவிலான எண்ணெய் வயல்களைக் கட்டுப்படுத்தி வருகின்றது.

வட ஆபிரிக்க நாடான லிபியா நீண்டகாலமாக இத்தாலியின் கொலனியாக இருந்த நாடு. அல்ஜீரியா, மோரோக்கோ, சூடான் ஆகியவற்றை விட செறிவான எண்ணெய் வயல்கள் கொண்ட நாடு. 99 வீதம் முஸ்லிம்களைக் கொண்ட இந்நாட்டில் 80 வீதமான நிலம் மனித வாழ்க்கைக்குத் தகுதியற்ற, கடும் வெப்பம் நிறைந்த பாலைவனமாகும். 20% நிலத்திலேயே 6 மில்லியன் லிபியர்கள் வாழ்கின்றனர்.

கடாபியின் 40 ஆண்டுகால ஆட்சியின் பின்னர் கோத்திரங்களுக்கும் குலக் குழுக்களுக்கும் இடையில் மேற்கு நாடுகளால் தூண்டி வளர்க்கப்பட்ட பகை முரண்பாடு இன்று ஓர் ஆயுதப் போராக விஸ்வரூபம் எடுத்துள்ளது.

திரிப்போலிக்கும் பெங்காசிக்கும் இடையிலான இந்த சிவில் யுத்தத்திற்கு லிபியர்கள் பெரும் விலை கொடுத்து வருகின்றனர். தமது நலன்களைக் காத்துக் கொள்ளும் நோக்கில் மேற்கு நாடுகள் இரட்டை விளையாட்டில் ஈடுபட்டு வருகின்றன. துருக்கியின் அர்துகான், லிபிய நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவதில் அயராது உழைத்து வருகிறார். ஆனால், அவரோடு இணைந்திருக்கும் ஐரோப்பிய நாடுகள் இதய சுத்தியுடன் தான் செயல்படுகின்றனவா என்பது கேள்விக்குரியது.

போர் நிறுத்தப்பட்டால் பேர்லின் உச்சமாநாடு வெற்றுபெறுகிறது என்று அர்த்தம். மறுதலையாக போர் தொடர்ந்தால் லிபிய நெருக்கடி கிட்டிய எதிர்காலத்தில் முடிவுக்கு வராது என்பதே அர்த்தம். எதிர்காலமே இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்பார்வை



நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி

# “இன ரீதியான கட்சி என்கின்ற வாதம் அடிப்படையிலேயே ஒரு பிழையான கருத்து”



ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் -
பொதுச்செயலாளர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்

- **ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான அரசியல் சூழ்நிலையை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

ஜனாதிபதித் தேர்தலில் நாம் ஆதரித்த வேட்பாளர் தோல்வியடைந்தார். நாம் யாருமே எதிர்பாராத மிகப்பெரிய பெரும்பான்மை பலத்துடன் தற்போதைய ஜனாதிபதி வெற்றிபெற்றிருக்கின்ற யதார்த்தத்தை நாம் முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும். ஏனெனில், சிறுபான்மைகள் ஒட்டுமொத்தமாக ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவினை ஆதரித்தனர். 'நிச்சயமாக எமது வேட்பாளர் வெற்றி பெறுவார், அவர் வெற்றி பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டாலும் கூட ஒரு மிகவும் குறைந்த இரண்டாவது முறை வாக்கெண்ணும் நிலவரத்துக்கு வரலாம்' என்கின்ற பார்வையே எல்லோரிடத்திலும் இருந்தது.

இங்கு மக்கள் விடுதலை முன்னணியின் இரண்டாவது வாக்கு ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவிற்குக் கிடைக்கலாம், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்குகள் குறையும் பட்சத்தில் அந்த வாக்குகளை ஹிஸ்புல்லாஹ் பெற்றுக் கொடுப்பார் என்கின்ற கற்பனையிலேயே எல்லோரும் இயங்கினார்கள்.

ஆனால் யாருமே எதிர்பாராத வண்ணம் பாரியதொரு அமைதிப் புரட்சி சிங்கள மக்களுக்கு மத்தியில் நிகழ்ந்தது. கடும்போக்கு சிங்களவாதிகளின் வழிகாட்டலில் 'ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ஒட்டுமொத்தமாக இந்த நாட்டை சிங்கள பௌத்த மக்களிடமிருந்து அழித்து விடுவார், சிங்கள பௌத்த கலாசார பின்னணியை அழித்து விடுவார், சிறுபான்மைக்கு அடிபணிந்து விடுவார், முக்கியமாக ஈஸ்டர் தாக்குலுக்குப் பிற்பாடு இஸ்லாமிய பயங்கரவாதமொன்று உருவாக்கப்படுகின்ற சூழ்நிலையில் தங்களுடைய பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தல் வரும், அதைத் தடுக்கக் கூடிய சக்தியுள்ள ஒரேயொரு மனிதர் கோட்டாபய ராஜபக்ஷதான், அவரை நாங்கள் அதிகாரத்திற்கு கொண்டு வந்தால் மாத்திரம்தான் தங்களுடையதும், தங்களுடைய பிள்ளைகளுடையதும், தங்களுடைய எதிர்கால சந்ததியினருடையதும் அடிப்படையான பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும்' என்கின்றதொரு சிந்தனையில் இவர்கள் எழுந்திருந்த விடயத்தை நாங்கள் யாருமே அறிந்துகொள்ளாமல் போய்விட்டோம்.

தமிழ் பேசுகின்ற வடகிழக்கில் வாழ்கின்ற தமிழ் முஸ்லிம் மக்கள் ஒன்றாக இந்தப் பொதுத் தேர்தலில் முகம்கொடுக்க வேண்டும். வடகிழக்கிற்கு வெளியே உள்ள தமிழ் பேசுகின்ற தமிழ் முஸ்லிம் மக்களும் கூட முடிந்தளவு ஒரு சிங்கள சக்தியுடன் சேர்ந்து இந்தத் தேர்லில் முகம் கொடுத்து எங்களது பிரதிநிதித்துவத்தை கூட்டிக் கொள்ள வேண்டும் என்கின்றதொரு கோஷமும் உள்ளது.

- **ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது எதிர்கால அரசியல் திட்டங்களை எவ்வகையில் முன்னெடுக்கவுள்ளது?**

என்னுடைய முன்னைய பதிலில் இது தொடர்பான கருத்துக்களைக் கூறியுள்ளேன். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் எமது உச்சபீடம் கூடி இது சம்பந்தமாக ஆராயும் என்றே கூற முடியும். எல்லா மாவட்டங்களிலும் உள்ள அமைப்பாளர்கள், மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து தேவையேற்படும் பட்சத்தில் அந்தந்தப் பிரதேசங்களுக்குச் சென்று தலைமைத்துவமும் கட்சியும் அமைப்பாளர்களும் அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடி ஒரு முடிவெடுப்பது உகந்ததென்று நான் நினைக்கிறேன்.

- **இன ரீதியான கட்சிகள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றதொரு சூழலில் தேசிய நல்லிணக்கத்துக்காக வேண்டி ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்னெடுத்துள்ள மூலோபாயங்கள் என்ன?**

தேசிய நல்லிணக்கம் என்பது எமது முழு மூச்சான பிரதான கொள்கையாகும். இன ரீதியான கட்சி என்கின்ற வாதம் அடிப்படையிலேயே ஒரு பிழையான கருத்து. ஏனென்றால், பெரும்பான்மை மக்கள் சிறுபான்மைகளை ஒடுக்குவதற்கான அரசியல் நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற போது சிறுபான்மைகள் தங்களது அரசியல், சமூக ரீதியான உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்கு தங்களுக்குள் ஒரு ஒற்றுமையைக் கொண்டு வந்து தேசிய ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஒன்றுபட்டு நிற்கின்ற போது, அதில் வெறுமனே இவர்கள் இன ரீதியான அரசியல் பேசுகிறார்கள் என்று கூறுவது ஒரு நியாயமில்லாத கருத்தாகும்.

நாம் ஆரம்பத்திலிருந்து கூறி வருவது என்னவெனில், எல்லா இனங்களுக்கும் சமத்துவம் கிடைக்கின்றதொரு சூழ்நிலை என்பது இலங்கை

லாவிட்டாலும் கூட சிறுபான்மைகள் மத்தியில் ஒரு பீதி ஏற்பட்டுள்ளது. அதாவது எங்களுடைய சமூக அடையாளத்தை அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஒட்டுமொத்தமாக அழித்துவிட்டு ஒரு வெறுமனே கலாசார ரீதியாக இன்னுமொரு இனமாக இருந்துவிட்டு போகுங்கள் என்றொரு கோஷமே இன்று பெரும்பான்மை அரசியல் வாதிகளிடம் காணப்படுகின்றது.

மறைந்த தலைவர் அஷ்ரப் அவர்கள் முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கும் போது அன்று நாட்டில் காணப்பட்ட அதே அரசியல் சூழ்நிலைதான் இன்றும் காணப்படுகின்றது. ஆகவே மக்கள் இதனைப் புரிந்துகொண்டுள்ளார்கள். ஆகவே நாம் ஒற்றுமையாக இந்தத் தேர்தலுக்கு முகம்கொடுத்து எங்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டும் என்ற அவா எல்லோரிடத்திலும் காணப்படுகிறது. அதற்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது பங்களிப்பை நியாயமாகச் செய்யும் என்று நான் நம்புகின்றேன்.

- **இம்முறை பொதுத் தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடும் தீர்மானத்தில் உள்ளதா? இல்லாவிட்டால் தனித்துப் போட்டியிட்டு ஏதேனும் ஒரு கட்சியுடன்**

முக்கியமாக ஆளும் பிரதான கட்சியான ஐ.தே.க. இது சம்பந்தமான தெளிவான ஒரு பார்வையை கொண்டிருக்கவில்லை என்பது எமக்கு விளங்குகிறது. இந்தச் சூழ்நிலையில்தான் கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். இதையே நாம் அடிப்படை விடயமாகக் காண்கிறோம்.

- **எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அகில இலங்கை மக்கள் காங்கிரஸுடன் சேர்ந்து போட்டியிடுவது சம்பந்தமான கருத்துக்கள் சமூக மட்டத்தில் நிலவி வருகிறது. இது சம்பந்தமாக உங்களுடைய நிலைப்பாடு என்ன?**

இது சம்பந்தமாக நாம் எந்தவொரு இறுதி முடிவுக்கும் வரவில்லை. சில பிரதேசங்களில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸுடன் கேட்க வேண்டும் என்ற ஒரு நிலைப்பாடும், சில பிரதேசங்களில் 'அப்படிக் கேட்கக்கூடாது, அது அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்குத் தான் சாதகமாக அமையும்' என்றதொரு கருத்தும் ஒன்றுக்கொன்று முரணானவாறு இருக்கின்றது. ஆனால் ஒட்டுமொத்தமாக இங்கிருக்கும் சூழ்நிலையில் சிறுபான்மைகள் முகம்கொடுக்கின்ற சவால்களுக்கு மத்தியில் முஸ்லிம்கள் ஒன்றுபட வேண்டும் என்கின்றதொரு பாரிய கோஷம் இருந்து வருகிறது. அது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்று மாத்திரமல்ல. ஒட்டுமொத்தமாக எல்லா முஸ்லிம்களும் முஸ்லிம்களுடைய தாய் கட்சியான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவத்தின் கீழ் ஒன்று சேர்ந்து இந்தத் தேர்தலில் முகம்கொடுக்க வேண்டும் என்கின்ற கோஷமும் வலுத்து வருகின்றது.

விசேடமாக வடகிழக்கை பொறுத்தவரையில் தமிழ் பேசுகின்ற தமிழ் முஸ்லிம் மக்களுக்கு ஒட்டுமொத்தமான சவால்கள் எதிர்காலத்தில் ஏற்படலாம். இது குறுகிய 2020, 2025 ஆண்டுகளுக்கு மாத்திரமானதல்ல. பத்து வருடங்களாகக் கூட இந்த ராஜபக்ஷ ஆட்சி இருக்கலாம். அதற்கிடையில் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளும், அவர்களது அடிப்படை அரசியல் உரிமைகளும் இல்லாமல் ஆக்கப்படலாம். மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றுக்கொள்ளப்பட்டால் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் அரசியல் ரீதியாக தங்களுடைய பிரதிநிதித்துவத்தை கூட பெற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்படலாம் என்கின்றதொரு சவாலான சூழல் காணப்படுகின்றது.

ஆகவே நாங்கள் இயன்றவரை எல்லா சிறுபான்மை மக்களையும் ஒன்றிணைத்து அதுவும்

யர் (ஸ்ரீ லங்கா) என்கின்ற அடையாளத்தை கொண்டு வருவதன் மூலமே சாத்தியப்படும். அதாவது இந்த நாட்டின் தேசிய அடையாளத்தை தூக்கி நிறுத்த வேண்டுமெனில், நாட்டினை அடிப்படையாகக் கொண்ட அடையாளத்தின் மூலமே முடிகிறதே ஒழிய நாட்டுக்குள் வாழ்கின்ற இனங்களைப் பொறுத்து வருகின்ற அடையாளங்களால் அல்ல.

மறைந்த முன்னாள் தலைவர் அஷ்ரப் அவர்கள் இக்கட்சியை உருவாக்கிய போது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்கின்ற வசனத்தை பாவித்ததும் கூட இந்நாட்டிற்குள் வாழ்கின்ற சகல இன மக்களும் ஸ்ரீ லங்கா என்றதொரு அடையாளத்தின் அடிப்படையில் ஒன்றாக வாழவேண்டுமென்ற அவாவின் பேரிலாகும். ஆகவே எங்களைப் பொறுத்தவரையில் இனங்களுக்கிடையிலான ஒற்றுமை என்பது இந்த நாட்டுடன் சேர்ந்த அடையாளங்கள் மற்றும் எல்லா இனங்களுக்கும் சமமான அந்தஸ்து வழங்கும் அடையாளத்தில் தான் தங்கியிருக்கிறது என்பதாகும்.

- **ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது அடுத்த கட்ட அரசியல் செயற்பாடுகளில் முஸ்லிம் அரசியல் தலைமைகள், சிவில் சமூக அமைப்புக்களுடனான கலந்துரையாடல்களை எவ்வகையில் முன்னெடுத்துச் செல்கின்றது?**

நாம் பல்வேறு மட்டங்களுடன் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றோம். இன்றும் கூட (19.01.2010) எமது உச்ச பீடம் கூடுகிறது. அதன் பின்னர் சிவில் சமூக அமைப்புக்கள், கிராம மட்டங்களில் உள்ள கட்சியின் அமைப்பாளர்கள், பள்ளிவாசல்கள், புத்திஜீவிகள், வெவ்வேறு துறைகளில் உள்ள மக்களுக்கு மத்தியில் கலந்துரையாடல்களை மேற்கொள்வதன் மூலம் நாம் எப்படி ஒற்றுமையாக இருந்து எமது பிரதிநிதித்துவத்தை முடிந்தளவு உயர்த்திக்கொள்வது என்பது பற்றி நிச்சயமாக சிந்திப்போம்.

- **எதிர்வரும் பொதுத் தேர்தலில் கடந்த தேர்தல்களை பார்க்கிலும் கூடுதலான ஆசனங்களை பெறக்கூடிய நிலைமைகள் காணப்படுகின்றதா?**

ஆம். உண்மையாக கிடைக்கும் என்கின்ற நம்பிக்கை உள்ளது. [illegible]

**கூட்டுச் சேரும் முடிவில் உள்ளதா?**

இது தொடர்பாக எவ்வித இறுதித் தீர்மானங்களும் எட்டப்படவில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கின்ற தலைமைத்துவப் பிரச்சினையை அவர்கள் கூட்டாகச் சேர்ந்து வெற்றிகரமாக அதை செய்துகொண்டால் எங்களுக்கு அது நன்றாக இருக்கும். ஆனால் ஒட்டுமொத்தமாக எங்களை நேசிக்கின்ற சிறுபான்மையை சமமாகப் பார்க்கின்ற ஒரு பெரும்பான்மை அணியுடன் சேர்வது தான் சிறந்தது. ஆனால் எமது தேர்தல் வியூகம் அந்த நேரத்தில் இருக்கின்ற சந்தர்ப்ப சூழ்நிலையை வைத்தே தீர்மானிக்கப் பட வேண்டும். இப்பொழுது அதைப் பற்றிச் சொல்வது கடினமாக இருக்கும்.

- **இலங்கை வரலாற்றில் அடிமைச்சரவையில் ஒரு முஸ்லிம் இல்லாத நிலை உருவாகியிருக்கிறது. இது பற்றி நீங்கள் குறிப்பிட விரும்புவது என்ன?**

இது பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்பதே என்னுடைய தனிப்பட்ட கருத்தாகும். தமிழ் மக்கள் கபினட் அந்தஸ்து இல்லாமலேயே அவர்கள் தங்களது விடயங்களைச் செய்திருக்கிறார்கள். நாட் டின் கபினட்டில் பெயரளவுக்குக் கூட எல்லா இனங்களையும் பிரதிபலிக்க முடியாத சூழலை ஏற்படுத்தியிருப்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டியது அவர்கள் தான். நாங்களல்ல. ஆகவே அவர்களுடைய இயலாமையையே இது காட்டுகின்றது.

- **இலங்கை முஸ்லிம் சமூகத்திற்கு நீங் கள் கூற வரும் செய்திகள் என்ன?**

முதலாவது விடயம், எதிர்கால தசாப்தம் என்பது மீண்டும் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு ஒரு பாரிய சவாலாக அமையும். ஆகவே மக்களுக்கு நான் வழங்கும் முதலாவது கருத்துதான் நாங்கள் எவ்வளவுதான் எங்களுக்குள் கசப்பான அனுபவங்களைக் கொண்டிருந்தாலும் கூட அதை மறந்து விட்டு நாங்கள் ஒன்றாக இந்த அரசியல் சவால்களுக்கு முகம்கொடுக்கத் தயாராக வேண்டும். அரசியல் ரீதியில் சிறுபான்மை இனங்கள் ஒன்றுபட வேண்டும் என்ற விடயமும் முஸ்லிம்கள் முக்கியமாக ஒன்றுபட்டு இயங்க வேண்டும் என்ற விடயமும் மிக முக்கியமானது என்பதையே [illegible]




அபூ ஷாமில்

# துருக்கியாக மாறும் சோனக தேசம்

**இன்டக்கி குத்பால எங்கட நாடு இஸ்லாமிய நாடாக மாறணும் என்டா நாலு விசயம் செய்யனுமாம். தாஇயான ஹாபிழான வைத்தியர்களை உருவாக்குதல், இராணுவத்தில் சேர்தல், அரபுத் தமிழைப் பாதுகாத்தல், பலதாரமணம் முடித்தல்.**

கடந்த இருவாரங்களுக்கு முன்னர் களுத்துறை மாவட்டத்திலுள்ள பள்ளிவாசலொன்றில் நிகழ்த்தப்பட்ட குத்பாப் பிரசங்கம் தொடர்பில் பேஸ்புக்கில் பதிவேற்றப்பட்டிருந்த விடயம் இது. தலை இல்லாதவனுகள் என அவர் அந்தக் கதீபை இதில் திட்டியிருந்தார்.

என்னவென்று சொல்வது, யாரிடம் போய்ச் சொல்வது? மதம் தலைக்கேறிய தறுதலைகளை வைத்து நாட்டில் நடத்தப்படுகின்ற அட்டகாசங்கள் போதாதென்று இன்னும் அதனை நீடிக்கச் செய்கின்ற இது போன்ற அறிவில் ஆதவர்களை சமூகம் இப்படிக் காறி உமிழும் காலம் வந்து விட்டது என்பதனைத்தான் இது உணர்த்துகிறது.

ஆயிரம் வருடங்களுக்கு மேலான முஸ்லிம் சமூகத்துக்குள்ளால் அண்மைய தசாப்தங்களில் புகைந்து கொண்டிருந்து விட்டு தீப்பிடிக்கத் தொடங்கிய வன்முறைக் கலாச்சாரத்துக்கு வித்திட்டவர்கள் இந்த ஆலிம்கள்தான். ஆளுக்கொரு பக்கமாகப் பிரிந்து பிரிவினைகளுக்குத் தூபமிட்டு சமூகத்தைச் சண்டைக்கிழுத்த சன்மார்க்கப் பிரிவுகள் அனைத்தினதும் தானைத் தலைவர்களாக இந்த ஆலிம்கள்தான் இருந்து வந்திருக்கிறார்கள்.

ஒவ்வொருவரும் உள்நாட்டிலும் வெளியிலும் தமது மத்ரஸாவை மேலாதிக்கம் செய்யும் வண்ணம் தமது கருத்துக்களைப் பரப்பி அமைதிக்கும் சமாதானத்துக்கும் பேர்போன இஸ்லாத்தை வன்முறைக்கும் தீவிரவாதத்துக்குமானதாக கொச்சைப்படுத்தி விட்டார்கள். இன்று இலங்கையில் இஸ்லாமிய தீவிரவாதத்துக்கு அடையாளமாக மத்ரஸாக்களைத்தான் காட்டுகிறார்கள். இந்த மத்ரஸாக்களில்தான் ஸஹ்ரான்கள் உருவாகியதாக உச்ச ஸ்தாயியில் முழங்குகிறார்கள்.

இவற்றையெல்லாம் யாரும் மறுக்க முடியாதபடி இந்த முல்லாக்கள் மிம்பர்களிலே கொக்கரித்துத் தொலைக்கிறார்கள். எங்கு இருக்கிறோம், என்ன பேசுகிறோம் என்பது தெரியாமல் அறியாமைப் போதையில் குழம்பிப் போயிருக்கும் இதுபோன்ற ஆலிம்களினால் சமூகமே தள்ளாடுகிறது.

இவர்களிடம் இருந்து எப்படித் தம்மைப் பாதுகாத்துக் கொள்வது என்ற பாதுகாப்புப் பிரச்சினை இப்பொழுது சாதாரண மக்களிடம் அப்பத் தொடங்கியுள்ளது. தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் ஓர் ஆலிம் கலந்து கொண்டால், பொது இடமொன்றில் அவர்கள் பேச அழைக்கப்பட்டிருப்பதாகத் தெரிந்தால் மக்களுக்குத் தொடை நடுங்கத் தொடங்குகிறது. எந்த நேரத்தில் எதனை உளறிக் கொட்டி பித்னாவை உருவாக்கி விடுவார்களோ என்று நெஞ்சு பதறத் தொடங்குகிறது.

இதற்குக் காரணம் உலமாக்களே அன்றி வேறு யாரும் இல்லை. சமூகம் உலமாக்களுக்கு மதிப்பளிப்பதில் இருந்து ஒருநாளும் பின்வாங்கியதில்லை. பெரும்பான்மைச் சமூகங்களில் மதகுருக்களுக்குக் கிடைக்கும் மரியாதையை விட முஸ்லிம் சமூகத்தில் உலமாக்களுக்கு வழங்கப்படும் மரியாதை குறைந்து விடவில்லை. ஆனால் இப்படியே போனால் முஸ்லிம் சமூகமும் இந்த நிலைக்கு மாறிவிடுமோ என்று அஞ்ச நேருகிறது.

முஸ்லிம் தனியார் சட்ட விவகாரத்தில் சில உலமாக்கள் எடுத்த கடும்போக்கான நிலைப்பாடு இன்று முஸ்லிம் விவாகச் சட்டமே தேவையில்லை என்பதற்கு எதிராகப் போராட வேண்டிய நிலைக்கு சமூகத்தை ஆளாக்கியிருக்கிறது. இஸ்லாமியச் சட்டங்களும் நடைமுறைகளும் வழக்கொழிந்தவை என முஸ்லிமல்லாதவர்களில் சிலர் சிந்திக்கின்ற ஒரு நிலைமையை இந்த நிலைப்பாடு உருவாக்கியிருக்கிறது. இதனை வைத்து இஸ்லாம் பிற்போக்கானது என்று நிறுவுவதற்கு உலமாக்களின் நிலைப்பாடு காரணமாக அமையப் போகிறது.

துருக்கியும் ஆரம்பத்தில் ஐரோப்பாவின் நோயாளியாகக் கருதப்படுவதற்கு பிற்போக்கான உலமாக்களே காரணம் என துருக்கிய இராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார். ஜொஹன்னஸ் குட்டன்பேர்க் அச்சுப் பொறியைக் கண்டுபிடித்ததில் இருந்து முந்நூறு வருடங்களின் பின்பே அது துருக்கியில் அறிமுகமாகியிருக்கிறது. அல்குர்ஆனையோ கிதாபுகளையோ அச்சு வாகனத்தில் ஏற்றக் கூடாது என உலமாக்கள் அப்போது எடுத்திருந்த நிலைப்பாடே அதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

தமது நாடு பின்னடைவதற்கு இந்த உலமாக்கள்தான் காரணம் எனக் கருதிய மக்கள் உலமாக்களின் பிடியிலிருந்து விலகி தம்மை முன்னேற்றிக் கொள்வதற்குத் துணிந்தனர். விளைவாக இன்று துருக்கி இஸ்லாத்தை விட்டும் தூரமான ஒரு நாடாகி, மக்கள் மதச்சார்பற்ற கொள்கையை ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு மாறியிருக்கிறது.

இலங்கைச் சோனக தேசத்திலும் கடும்போக்கான நிலைப்பாடுகள் மக்களை இஸ்லாத்தை விட்டும் தூரமாக்கி வருவதை அவதானிக்க முடிகிறது. முன்னாள் அமைச்சர் கபீர் ஹாஷிமின் மகளது திருமணம் தொடர்பில் சமூகத்தில் நிலவிய கருத்துக்கள், சுவர்ணவாஹினி செய்தி வாசிப்பாளர் பாதிமா நஸ்ரினுடைய திருமணம் தொடர்பான செய்திகள் அண்மைக்கால வெளிப்பாடுகளாக அமைந்திருக்கின்றன. கடந்த காலங்களில் முஸ்லிம் பெயர் தாங்கிய பலரது மரண அறிவித்தல்கள் பாதையோரங்களில் ஒட்டப்பட்டிருந்ததையும் மறக்க முடியாது.

உலமாக்களின் நிலைப்பாடுகள் தமது உயிருக்கும் இருப்புக்கும் ஆபத்தாக முடியுமோ என்ற அச்சம் மக்களை இந்த நிலைக்குத் தொடர்ந்தும் தள்ளி வருகிறது. இனி இப்படியான உலமாக்களிடம் இருந்து மார்க்கத்தையும் மக்களையும் காப்பாற்றுவதற்கான பணிதான் எஞ்சியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• ஜெய்னுலாப்தீன் நிஷாஸ்

# 2020 பொதுத் தேர்தலில் முஸ்லிம் அரசியலின் கவனக் குவிப்பு

கடந்த தசாப்தங்களில் இலங்கையில் அரசியல் வித்தியாசமான பரிமாணங்களில் நகர்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் அதன் பின்னால் வருகின்ற பொதுத் தேர்தல் என்பன வித்தியாசமான அரசியல் சூழ்நிலைகளை அடியொட்டியதாக அமைவதைக் காணக் கூடியதாக உள்ளது.

2010 ஜனாதிபதித் தேர்தலில் போர் வெற்றியே அரசியல் வெற்றியைத் தீர்மானித்தது. 2015 இல் நல்லாட்சி என்ற கோஷம் அரசியல் வெற்றியாகியது. அதே போன்று SLFP இனதும் UNP இனதும் எதிர்பாராத கூட்டும் இவ்வெற்றியை தீர்மானித்ததில் முக்கிய பங்கு வகித்தது. 2019 ஜனாதிபதித் தேர்தல் தேசிய பாது காப்பு, பெரும்பான்மைச் சமூகத்தின் ஒற் றுமை என்பன தேர்தல் வெற்றியைத் தீர்மானித்தது. ஏப்ரல் 21 இல் ஏற்பட்ட மனிதாபிமானத்திற்கு எதிரான குண்டுத் தாக்குதல் அதனை ஒட்டிய முஸ்லிம் எதிர்ப்பு அரசியல் என்பன பெரும்பான்மைச் சமூகத்தை ஒற்றுமைப்படுத்துவதிலும் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் அமோக வெற்றிக்குக் காரணமாகவும் அமைந்து விட்டது.



இந்த எதிர்பாராத அரசியல் வெற்றியானது ஐ.தே.க. போன்ற மிகப் பெரும் அரசியல் கட்சிகளையே ஆட்டம் காணச் செய்ததுடன் சிறுபான்மைக் கட்சிகளான தமிழ், முஸ்லிம் கட்சிகள் உட்பட மூன்றாவது சக்தியாக வரும் எனப் பெரிதும் எதிர்பார்த்த ஜேவிபியின் அரசியல் பின்னடைவுக்கும் காரணமாக அமைந்துவிட்டது.

பொதுஜன பெரமுனவின் இந்த அரசியல் வெற்றியின் பின்னரான சூழ்நிலைகள் அனைத்துக் கட்சிகளினதும் அரசியல் போக்கு, அரசியல் வியூகம் என்பவற்றில் பாரிய மாற்றங்களைச் செய்ய வெண்டிய கட்டாய நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளன. இந்த வகையில் முஸ்லிம் அரசியல் எவ்வாறான நிலைப்பாடுகளை எடுக்க வேண்டும் என்பதில் பாரிய குழப்ப நிலையும் தெளிவற்ற ஒரு நிலையும் ஏற்பட்டுள்ளதோடு, எதிர்கால அரசியல் போக்கு பற்றிய பல வாதப் பிரதிவாதங்களும் முஸ்லிம் அரசியலில் தோன்றியிருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

முஸ்லிம் அரசியல் என்ற பதம் வெறுமனே முஸ்லிம் அரசியல் கட்சிகளை மட்டுமல்லாது பெரும்பான்மை கட்சிகளில் உள்ள முஸ்லிம் அரசியல்வாதிகளை உள்ளடக்கிய ஒரு பார்வையுடன்தான் இக் கட்டுரை எழுதப்படுகின்றது. இந்த முஸ்லிம் அரசியலின் போக்கைத் தீர்மானிப்பதில் முஸ்லிம் சமூகம் அதன் சிவில் அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு பாரிய பங்களிப்பு உள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது.

பல்வேறுபட்ட அரசியல் சூழ்நிலைகளின் போதும் முஸ்லிம் அரசியல் அவ்வப்போது மிகச் சரியான முடிவுகளை எடுத்தாலும் குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி அவர்களின் ஆட்சியின்போது ஏற்பட்ட 52 நாள் அரசியல் குழப்பத்தின்போது முஸ்லிம் அரசியல் எடுத்த நிலைப்பாடுகளும், ஏப்ரல் 21 தாக்குதலின்போது முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு எதிராக இனவாதிகளால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் அழுத்தங்களின்போது முஸ்லிம் அரசியல் எடுத்த முடிவுகளிலும் சில விமர்சனங்கள் இருந்தாலும் அரசியல் ஒற்றுமை என்ற ஒரு விடயம் குறிப்பாகப் பார்க்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் 2019 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலின் பின்னரான சூழ்நிலைகள் மிகவும் தீர்க்கமான, நிதானமான, வழமையான அரசியல் வழிமுறைகளை விட்டும் முற்றிலும் வித்தியாசமான வழிகளை, வழமையான அரசியல் போக்கை விட்டும் புதிய பாதையில் பயணிக்க வேண்டியதன் அவசியத்தை வேண்டி நிற்கின்றது. இந்த வகையில் முஸ்லிம் சமூகம், அதன் சிவில் அமைப்புகள், அரசியல் கட்சிகள் என்பன எவ்வாறான நோக்குடையதாக, இலக்குடையதாக, எதிர்வரும் 2020 பொதுத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும் என்பதற்கான சில ஆலோசனைகளை முன்வைக்க விரும்புகிறேன்.

### முஸ்லிம் சமூகமும் அரசியல் போக்கும்

கடந்த காலத்தில் முஸ்லிம் சமூகம் தனது பிரதான அரசியல் இலக்காக அபிவிருத்தி அரசியல், அரச வேலை வாய்ப்பு என்பதனையே பிரதான சமூகத் தேவையாக முதன்மைப்படுத்தியது. இதன் காரணமாக முஸ்லிம் அரசியலின் எதிர்பார்ப்பும் அமைச்சுப் பதவிகள், அபிவிருத்தி, வேலை வாய்ப்பு என்பவற்றை உள்ளடக்கியதாக அமைந்தது. ஆனால், எதிர்வரும் காலங்களில் அபிவிருத்தி அரசியல் என்பதைப் புறந்தள்ளி நாட்டினது பொது அபிவிருத்தியை உள்ளடக்கிய அதேவேளை, எமது சமூகத்தின் தனித்துவ மத மற்றும் கலாச்சாரங்களைப் பாதுகாக்கக் கூடிய உரிமை அரசியலை நோக்கியதாக அமைய வேண்டும்.

அதுமட்டுமல்லாது முஸ்லிம் அரசியலின் அரசியல் கட்சியில் தெரிவு முறையானது ஒரே வகையானதாக அமையாமல் கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப வித்தியாசமான தெரிவாக அமைய வேண்டும். வடக்கு, கிழக்கு, வடகிழக்குக்கு வெளியேயான அரசியல் ஆதரவு வித்தியாசமானதாக அமைய வேண்டும். எல்லா இடங்களிலும் பிரதேசங்களிலும் முஸ்லிம் வேட்பாளருக்கே வாக்களிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை மாற்றி, நேர்மையாகச் சிந்திக்கின்ற, செயற்படுகின்ற பெரும்பான்மை சமூக அரசியல்வாதிகளை வெற்றி பெறச் செய்யும் வியூகங்களை முஸ்லிம் சமூகம் அமைத்துக் கொள்ள வேண்டும்.

என்ன நடந்தாலும் எமது அரசியல் ஆதரவு முஸ்லிம் கட்சிகளுக்கும் ஐ.தே.க. வுக்கும்தான் என்ற நிலைப்பாட்டில் இருந்து முஸ்லிம் சமூகம் மீட்சி பெறுவதோடு மட்டுமல்லாமல் ஐ.தே.க.வின் கடந்த கால ஆட்சியில் எமது சமூகம் பெற்றுக் கொண்ட விடயங்கள், சாதித்தவைகள் பற்றி மீள்பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும். இதே விடயம் தனி முஸ்லிம் கட்சிகளுக்கும் பொருந்தும்.

இந்த வகையில் வடக்கு, கிழக்கிற்கு வெளியே ஆளும் கட்சி, எதிர்க்கட்சி, மூன்றாம் அரசியல் சக்தி என்பவற்றிற்கானதாக அமைவது பற்றிச் சிந்திக்க வேண்டும். இந்த நிலைப்பாடுகளில் எந்த நிலைப்பாட்டை எடுத்தாலும் வெறும் முஸ்லிம் சமூகத்தின் நலன் என்பதோடு மட்டுமல்லாமல், நாட்டின் நலன் கருதியதாக சிறந்த நேர்மையான அரசியல்வாதிகளைப் பாராளுமன்றம் அனுப்புதல் என்பதே எமது இலக்காக அமைய வேண்டும்.

### சிவில் அமைப்புகளின் அரசியல் இலக்கு

2019 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலின் வெற்றியைத் தீர்மானிப்பதில் பெரும்பான்மை சமூகத்தின் சிவில் அமைப்புகளுக்குப் பாரிய பங்கு உண்டு என்பதை இத்தேர்தல் வெற்றியின் பின்னணியை நோக்கும்போது எவரும் இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும்.

இந்த அடிப்படையில் மாவட்டம் தோறும் முஸ்லிம் சமூகத்திற்கு அரசியல் வழிகாட்டல் வழங்குவதோடு முஸ்லிம் அரசியல் தலைவர்கள் மற்றும் கட்சிகளுக்கும் இடையிலான ஒரு பாலமாகவும் சிவில் அமைப்புகள் செயற்பட வேண்டிய கடமைப்பாடு காலத்தின் தேவையாகும்.

மாவட்டம் தோறும் முஸ்லிம் சமூகம் எவ்வாறான நிலைப்பாடுகளை எடுக்க வேண்டும் என்பதற்கான வழிகாட்டல்கள் வழங்குவதோடு முஸ்லிம் அரசியல் தலைமைகளுக்கும் வடகிழக்கிற்கு வெளியே அவர்கள் போட்டியிடும் பிரதேசங்கள் பற்றிய தெளிவையும் தேவையையும் உணர்த்த வேண்டியுள்ளது. இது மட்டுமல்லாமல் முஸ்லிம் அரசியல்வாதிகள் தேர்தல் காலத்தில் பிரச்சார மேடைகளில் நாட்டின் சூழ்நிலைகளை மறந்து நாம் ஒரு சிறுபான்மை சமூகம் என்பதையும் மறந்து நாம்தான் ஆட்சியைத் தீர்மானிப்பவர்கள், ஆட்சியை மாற்றுபவர்கள் போன்ற உசுப்பேத்திவிடும் பிரச்சார உத்தியை முழுமையாகக் கைவிட வைப்பதற்கான அழுத்தங்களை சிவில் அமைப்புகள் மேற்கொள்ள வேண்டும். கடந்த தேர்தலில் சிறுபான்மை அரசியல் தலைவர்களின் விவேகமற்ற பைத்தியக்காரத் தனமான வெற்றுப் பேச்சுக்கள்தான் பெரும்பான்மை சமூகத்தை உசுப்பேத்தியது என்பது தேர்தலுக்குப் பிந்திய முக்கிய பேசுபொருள் என்பதை யாரும் இங்கு இலகுவாக மறந்து விட முடியாது.

இன்னும் எதிர்வரும் தேர்தலில் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களும் வேறு பெரும்பான்மைக் கட்சிகளில் போட்டியிடும் வேட்பாளர்களையும் தகுதி வாய்ந்தவர்களை போட்டியிடுவதற்கான அழுத்தங்களை சிவில் அமைப்புகள் முன்வைக்க வேண்டும். இந்த வகையில் பலம் வாய்ந்த தேசிய ரீதியான, மாவட்ட ரீதியான ஊர் ரீதியான, சிவில் அமைப்புகளுக்கு பாரிய கடமைப்பாடு உள்ளதை அவர்கள் மறுக்க முடியாது.

### முஸ்லிம் அரசியல் கட்சிகளின் அரசியல் இலக்கு

இருபெரும் பெரும்பான்மை அரசியல் கட்சி சார்ந்திருந்த முஸ்லிம் சமூகத்தை தனி அரசியலுக்குக் கொண்டு வந்த பெருமை மறைந்த தலைவர் அஷ்ரப் அவர்களையே சாரும். முஸ்லிம் சமூகத்திற்குத் தனியான அரசியல் முகம் கொடுத்து முஸ்லிம் அரசியல் தனித்துவம், அபிவிருத்தி அரசியல் என்ற இரு பாதைகளில் முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சியை வழிநடாத்திச் சென்றார். பிற்காலத்தில் தனித்துவ முஸ்லிம் அரசியலில் உரிமைசார் அரசியல் பலவீனமடைந்து அபிவிருத்தி அரசியல் கலாச்சாரம் முக்கியத்துவம் பெற்ற ஒரு காலத்தில் அவரின் மரணமும் சம்பவித்தது. இதன் பின்னரான முஸ்லிம் தனித்துவ அரசியல் முற்றிலும் அபிவிருத்தி அரசியலாகி, முஸ்லிம் சமூகத்தின் அரசியல் அபிலாஷைகளை எந்தளவு நிவர்த்தி செய்தது என்பது கேள்விக்குறியாக உள்ளது.

இலங்கை அரசியலில் நாட்டு நலன் கருதிய பல அரசியல் மாற்றங்களை நிகழ்த்துவதற்கான சந்தர்ப்பங்கள் இருந்தும் தனிப்பட்ட அரசியல் நோக்கங்கள் முதன்மைப்படுத்தப்பட்டதால் கட்சியும் மக்களில் இருந்து செல்வாக்கு இழக்கப்பட்டு பல உடைவுகளையும் சந்தித்து நிற்கின்றது. இன்றைய அரசியல் சூழ்நிலையில் தனித்துவமான முஸ்லிம் அரசியல் அடையாளம் தேவையா? என்று விவாதிக்கும் அளவுக்கு விவகாரம் சென்றுள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னரான அரசியல் களம் மிகவும் சூடுபிடித்ததாகவே இருக்கப் போகின்றது. இது சிறுபான்மை சமூகங்களின் அரசியல் இருப்பிற்குச் சவாலான காலமாகவே இருக்கப் போகின்றது. ஒரே நாடு, ஒரே சட்டம் என்ற கொள்கை பெரும்பான்மை சமூகத்தில் முதன்மைப்படுத்தப்பட்டு வருவதும் பாராளுமன்றத்தில் பொதுஜன பெரமுன கட்சிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் வேண்டும் என்ற விடயமும் சிறுபான்மை அரசியலின் மோசமான எதிர்காலத்தைக் கட்டியம் கூறுகின்றது.

இவ்வகையான அரசியல் சூழ்நிலையை எமது முஸ்லிம் அரசியல் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறது என்பதுவே அனைவரினதும் கேள்வியாகும். எதிர்வரும் இவ்வாறான அரசியல் சூழ்நிலையை எதிர்கொள்ள முஸ்லிம் அரசியல் பின்வரும் கருத்து ரீதியான நடைமுறைக்கு வர வேண்டும்.

1. முஸ்லிம் சமூகம், சிவில் சமூகத்துடனான ஜனநாயகபூர்வமான கலந்துரையாடல்கள் மூலம் முஸ்லிம் சமூகத்தின் எதிர்பார்ப்பை, கோரிக்கைகளை தமது அரசியல் செயற்பாடுகளின்போது முன்னுரிமை வழங்க வேண்டும்.

2. பாராளுமன்றத்திற்கான அங்கத்தவர்களை தகுதிவாய்ந்தவர்களைத் தெரிவு செய்ய படித்த, பண்புள்ளவர்களை சமூக அங்கீகாரம் உள்ளவர்களை வேட்பாளர்களாக நியமிக்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களின் கல்வி அறிவு, மொழியாற்றல் முக்கியத்துவம் பெற வேண்டும்.

3. எதிர்வரும் தேர்தல் காலங்களில் பெரும்பான்மை சமூகத்தை உசுப்பேத்தும்

(பக்.14)




# குறுகிய அரசியல், பொருளாதார நோக்கங்களை தோற்கடித்து, நீதி, நியாயத்திற்காக முன்னிற்க வேண்டும்

இலங்கை எம் தாய் நாடாகும். பௌத்த, ஹிந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சமயங்களை பின்பற்றுகின்ற எம் எல்லோரினதும் தாய் நாடு இலங்கையாகும். இலங்கையர்களாகிய எமக்கு மத்தியில் சிறுபான்மை என்பது கிடையாது. இலங்கைத் தாய் நாட்டில் வாழும் நாம் எல்லோரும் சமமான பிரஜைகள். 'இது எமது நாடு' என்கின்ற உணர்வு எம் எல்லோரிடத்திலும் காணப்படுகின்றது. அன்று டீ.எஸ். சேனாநாயக்க, எஸ்.டபிள்யூ.ஆர்.டீ பண்டாரநாயக்க, எப்.ஆர். சேனாநாயக்க போன்றவர்கள் இது பற்றிய கருத்துக்களை அதிகம் கூறியுள்ளார்கள்.

இந்நாட்டில் எதிர்காலப் பயணம் மற்றும் சுதந்திரம் தொடர்பாக வெவ்வேறு தரப்புக்களைச் சேர்ந்த மக்கள் தங்களது பங்களிப்புக்களை நல்கியுள்ளனர். தற்போதும் பங்களிப்புக்களை செய்து வருகின்றனர். ஆயுதம் தரித்த இராணுவத்தை எடுத்துக் கொண்டாலும், பொலிஸாரை எடுத்துக்கொண்டாலும், மருத்துவத் துறையை எடுத்துக்கொண்டாலும், சட்டத்துறையை எடுத்துக்கொண்டாலும், வர்த்தகத் துறையை எடுத்துக்கொண்டாலும் இச்சகல துறைகளுக்கூடாகவும் இந்நாட்டின் சகல மக்களும் பங்களிப்புக்களை செய்துள்ளார்கள். எமது நாட்டின் எதிர்காலப் பயணத்திற்கும், நாட்டு நலனுக்காக வேண்டியும் சகல துறைகளுக்கூடாகவும் இந்நாட்டு மக்கள் பங்களிப்புச் செய்துள்ளனர்.

வரலாற்றில் பதிவாகியுள்ள எத்தனையோ சம்பவங்களை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். கண்டி மாவட்டத்தின் கடுகன்னாவை பகுதியில் அமைந்துள்ள முஸ்லிம் கிராமத்தில் வாழ்ந்த எமது ஆரம்ப கால முஸ்லிம் சகோதரர்கள் வெளிநாட்டு ஆக்கிரமிப்பு சக்திகளுக்கு எதிராக நாட்டைக் காப்பதற்காக முன்னின்று தம் உயிர்களையே துச்சமாய் மதித்து செய்த அர்ப்பணிப்புக்களை எமக்கு வரலாறு சான்று பகர்ந்துகொண்டுள்ளது. மரக்கலே (மா ரெகலே) என்னும் சொல் உருவாகிய பின்னணியானது தேசப்பற்றுமிக்க ஒரு முஸ்லிம் பெண்ணைச் சுற்றியே உருப்பெற்றுள்ளது. பங்கரகம்மன கிராமத்தில் வசித்த இந்தப் பெண்ணைப் பற்றிய கதைகளை நாம் வரலாற்றில் கற்றுள்ளோம்.

ஆனால் அண்மைக் காலம் தொட்டு இடம்பெற்று வருகின்ற சம்பவங்கள் எமக்குக் கவலையளிக்கின்றன. இலங்கையைத் தாய்நாடாகக் கொண்ட இச்சகல இன மக்களினதும் பங்களிப்புக்களைக் குறைத்து மதிப்பிடுவதற்குத் தயாராகின்ற முயற்சிகளை எம்மால் இன்று பார்க்க முடிகின்றது. இப்படிச் செய்வதற்கு முயற்சிக்கின்றவர்கள் எமது வரலாற்றையே மூடி மறைக்கப் பார்க்கின்றனர். இது எதற்காக செய்யப்படுகின்றது? என்பது பற்றி நாம் எல்லோரும் அவதானமாக இருக்க வேண்டும். இது தொடர்பில் ஆராயப்பட வேண்டும்.

முஸ்லிம்கள் வரலாற்றில் இத்தாய் நாட்டிற்காகச் செய்த தியாகங்கள் மறக்கடிக்கப்படுகின்ற போது எதிர்கால சந்ததியினர் மத்தியிலும் முஸ்லிம் சமூகம் பற்றிய பிழையான கண்ணோட்டமே ஏற்படுகின்றது. எனவே எம்முன்னோர் செய்த தியாகங்களை பற்றிய உரையாடல்கள் அவ்வப்போது மீட்டப்பட வேண்டியுள்ளது. அவை அடிக்கடி நினைவுகூரப்பட வேண்டும். அதற்கான முயற்சிகள் இன்னுமின்னும் அதிகரிக்கப்பட வேண்டும்.

இன்று உலகம் பூராகவும் இஸ்லாமிய சமூகத்துக்கு எதிராக அரசியல், பொருளாதார நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட ஆயுத, ஊடக போராட்டங்களை முன்னெடுத்திருப்பதை காண முடிகிறது. இது தொடர்பான அழுத்தங்கள் எமது நாட்டிற்கும் ஏற்பட்டுள்ளதை கண்டுகொள்ள முடிகின்றது. இத்தகைய சர்வதேச நிகழ்ச்சி நிரலுக்கு இரையாகி வரலாறு முழுவதுமாக நாட்டில் காணப்பட்ட நல்லிணக்கத்தை துண்டித்துவிட்டு மோதல்களை உருவாக்குவது என்பது எமது நாட்டிற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருக்கும் விடயமல்ல.

நாம் இந்தியாவில் காண்பதும் இதைத்தான். மியன்மாரில் காண்பதும் இதைத்தான். ஏனைய நாடுகளில் காண்பதும் இதைத்தான். இந்நிலையில் உலகம் முழுவதும் முஸ்லிம்கள் ஒரு தடவை யூதர்கள் முகம் கொடுத்ததைப் போன்று மற்றுமொரு தடவை கம்யூனிசவாதிகள் முகம்கொடுத்ததைப் போன்று பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். முஸ்லிம்கள் இன்று ஓரக்கண்களால் பார்க்கப்படுகின்றார்கள்.

குறுகிய அரசியல், பொருளாதார நோக்கங்களுக்காக வேண்டி முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை தோற்கடிப்பதற்கு தூரநோக்குடனும், அச்சமின்றி யும் உண்மை, நீதி நியாயத்திற்காக வேண்டி நாம் முன்னிற்க வேண்டும்.

இலங்கை அரசியலில் மேலெழுப்பப்பட்டு வருகின்ற இத்தகைய கீழ்த்தரமான மிலேச்சத்தனமான இழிவான இன, மதவாத முயற்சிகளை தோற்கடிப்பதற்கு இலங்கைத் தாய் நாட்டிற்கு அன்பு செலுத்துகின்ற சகல பிரஜைகளும் தமது கடப்பாடுகளையும் பொறுப்புக்களையும் அச்சமின்றி நிறைவேற்றுதல் வேண்டும்.

இலங்கை நாடு எம் அனைவருக்குமானது. இந்நாட்டில் பல்லின மக்கள் கலந்து வாழ்வதன் மூலம் உலகளவில் எமது நாடு பல்வேறு சிறப்புக்களை பெறுவதற்கு காரணமாய் அமைந்திருக்கிறது. எமது நாட்டை உலகளவில் தூக்கி நிறுத்திய பங்கு எல்லா சமூகங்களையும் சாரும். இவ்வாறு தான் வரலாறு நெடுகிலும் இது இருந்து வந்துள்ளது. தற்போது அவ்வரலாற்றை திரிபுபடுத்தி குறுகிய அரசியல் ஆதாயம் தேட முனைவதை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இலங்கைப் பிரஜைகளாகிய நாம் எல்லோரும் அம்முயற்சியை தோற்கடிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "முஸ்லிம் சமூகத்தின் மீது கொண்ட சுய வெறுப்பின் காரணமாக துவேச மனப்பான்மையுடன் நளீமிய்யா பட்டதாரிகளை பார்ப்பது பிழையானது."



மௌலவி எம்.எம்.ஏ. முபாரக் - பொதுச் செயலாளர், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை

துவேஷிகள் சிலர் நளீமிய்யா கலா பீடத்தை இனவாதப் பார்வையில் பார்த்தாலும் பெரும்பாலான படித்த மக்கள் நளீமிய்யா தொடர்பில் நல்ல பார்வையைக் கொண்டுள்ளனர். நாட்டுக்குச் சேவை செய்யும் உயர்ந்த பதவிகளில் நளீமிக்களே உள்ளனர். இந்நாட்டில் முஸ்லிம்கள் சார்பாக அரசின் உயர் பதவிகளுக்கு ஆட்களை அனுப்பிய தனி ஸ்தாபனமாக நளீமிய்யா காணப்படுகின்றது. முஸ்லிம் சமூகத்தின் மீது கொண்ட தனிப்பட்ட வெறுப்பின் காரணமாக துவேச மனப்பான்மையுடன் நளீமிய்யா பட்டதாரிகளை பார்ப்பது பிழையானது. நளீமிய்யாவில் கற்று வருபவர்கள் நல்ல தெளிவான கருத்துக்களை சொல்கின்றனர். உலகளாவிய அறிஞர்களின் நல்ல பல கருத்துக்களை பெற்று சமூகத்திற்கு வழங்குகிறார்கள். அதற்காக வேண்டி அவர்களுடன் தொடர்பு பட்டுள்ளார்கள், அவர்களுடைய சிந்தனையை வளர்க்கின்றார்கள் என்று குறிப்பிடுவது முறையல்ல.

## "ஜாமியா பற்றி ஞானசார தேரர் கூறும் கருத்துக்கள் அடிப்படைகள் அற்றவை."



உஸ்தாத் ஆசாத் அப்துல் முஈத் - தலைவர், ஜமாஅதுஸ் ஸலாமா

இந்நாட்டில் வாழ்கின்ற சமூகங்களில் கல்வி ரீதியாக மிகவும் பின்னடைந்த சமூகமாக முஸ்லிம் சமூகம் காணப்பட்டது. இந்த இடைவெளியை நிரப்புகின்ற பலதரப்புகளில் ஒன்றாக நளீமியா கலாபீடம் காணப்படுகின்றது.

மார்க்கக் கல்வியையும், அரசாங்கத்தின் பல்கலைக்கழகக் கல்வியையும், உயர்ந்த பண்பாடுகளையும் ஆன்மீகத்தையும் உள்ளடக்கிய அதன் கல்வித் திட்டத்தினூடாக இந்தநாட்டிற்கு நற்பிரஜைகளை உருவாக்குவதில் ஜாமியா பெரும் பங்காற்றியது என்றால் அது மிகையாகாது.

இந்த வகையில்தான் நாட்டின் பல்வேறு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றும் நளீமியா பட்டதாரிகள் சிறந்த முன்னுதாரணம் உள்ளவர்களாகவும், தமது பதவியை துஷ்பிரயோகம் செய்யாதவர்களாகவும், ஊழலற்ற சிறந்த நிர்வாகிகளாகவும் இன்றுவரை செயற்பட்டு வருகின்றனர். ஞானசார தேரர் குற்றம் சாட்டுவது போன்று அல்லாமல் நளீமியா கலாபீட பட்டதாரிகள் கலாபீடத்தில் கல்வி பயின்று, தமது பட்டப் படிப்பை பல்கலைக்கழகங்களில் பூர்த்தி செய்து, அரச ஆட்சேர்ப்பின் முறையான, நேர்மையான வழிமுறைகளினூடான உள்வாங்கப்பட்டே தமது பணிகளை ஆற்றி வருகின்றனர்.

இவ்வாறான நேர்மையான கல்வி, பண்பாட்டு பின்புலத்தில் உள்ளவர்களை முறையற்ற வகையில் குற்றம்சாட்டுவதும் அவர்களை கைதுசெய்ய வேண்டும் எனப் பேசுவதும் எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாத குற்றச்சாட்டுகளாகும். அது மாத்திரமல்ல, முஸ்லிம் சமூகத்தையும், முஸ்லிம் இளைஞர்களையும் தாம் கற்ற கல்வியினூடாக தீவிர சிந்தனையற்ற நடுநிலையான போக்கை வலியுறுத்தி வழிகாட்டி வரும் நளீமியா கலாபீடத்தை அடிப்படைவாதத்தின் தோற்றுவாய் எனக் குறிப்பிடும் ஞானசாரதேரர் அவர்களின் கருத்து முழு முஸ்லிம் சமூகத்தையும் கவலை கொள்ளச் செய்கின்றது.

இந்த இடத்தில் ஞானசார தேரர் அவர்கள் நளீமியா கலாபீடத்தின் நிர்வாகிகளுடன் கலந்துரையாடி அதன் உண்மைத் தன்மைகளை விளங்கிக்கொள்ள வேண்டுமென இங்கு நாம் அவருக்கு ஆலோசனை வழங்குகின்றோம்.

இன்று முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக முன்வைக்கப்படுகின்ற அடிப்படைவாதம் என்ற சொற்பிரயோகத்தின் ஊடாக எதனைச் சொல்ல வருகின்றார்கள் என்பது புரியாத புதிராகவே உள்ளது. ஞானசார தேரரின் நளீமியா கலாபீடத்திற்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு கலாபீடத்தின் நிர்வாகத்தினரும், பட்டதாரிகளும் உரிய வழிமுறைகளினூடாக தெளிவை வழங்க வேண்டிய கடமைப்பாட்டில் உள்ளனர் என்பதை இங்கு குறிப்பட விரும்புகின்றோம்.

## "தடைசெய்யப்பட்ட இயக்கங்களின் பெயரால் நளீமீக்களில் சிலர் தஃவாப் பணியில் ஈடுபாடு கொண்டிருப்பது இந்நிறுவனத்தின் மீதான சந்தேகங்களை மேலும் வளர்த்துள்ளது"



கலாநிதி ஏ அஸ்வர் அசாஹிம் - முன்னாள் சக உறுப்பினர் - அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா

ஜாமியா நளீமிய்யாவாக இருக்கலாம். அல்லது ஏனைய கல்வி நிறுவனங்களாக இருக்கலாம். அவை நாட்டின் முன்னேற்றத்துக்கான முதுகெலும்பு போன்றவையாகும். குறிப்பாக ஜாமியா நளீமிய்யாவைப் பற்றிக் குறிப்பிடுவதென்றால் அதுவொரு நல்ல நோக்கத்துக்காக ஆரம்பிக்கப்பட்ட கல்லி நிலையமாகும். காலப் போக்கில் வெளிநாடுகளில் இயங்கும் சில இயக்கங்களின் சிந்தனைகளை சிலர் சிறிது சிறிதாக திணிக்க எத்தனித்ததால் இன்றைய இலங்கைச் சூழலில் இந் நிறுவனம் பேசுபொருளாக மாற்றப்பட்டிருக்கிறது.

குறிப்பாக வெளிநாடுகளில் சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்படுகின்ற அல்லது தடைசெய்யப்பட்ட இயக்கங்களின் பெயரால் நளீமிய்யாவின் பட்டதாரிகளில் சிலர் தஃவா பணியில் ஈடுபாடு கொண்டிருப்பதால் இந்நிறுவனத்தின் மீதான சந்தேகங்கள் மேலும் வலுப்பெற்றுள்ளன. இந்நிறுவனத்தை மூடி விட வேண்டும் என்ற கோரிக்கையானது நோயாளிக்கு வைத்தியம் செய்வதை விட்டுவிட்டு நோயாளியை அழிக்க வேண்டும் என கூறுவதற்கு ஒப்பானதாகும்.

ஜாமியா நளீமிய்யா கலாபீடம் மாத்திரமல்ல, ஏனைய கல்வி நிறுவனங்களும் இலங்கையின் சூழலமைவை கருத்திற் கொண்டு இயங்க வேண்டும். இந்நாட்டில் நாம் சிறுபான்மையாக வாழ்கின்றோம் என்கின்ற விடயத்தை கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும். தீவிரமாக பேசக்கூடிய மாணவர்களை உருவாக்குவதை தவிர்த்து இமாம்கள் மற்றும் ஏனைய உலமாக்களின் கருத்துகளுக்கு கண்ணியம் கொடுக்கக் கூடியவர்களாக அவர்களை உருவாக்க வேண்டும்.

தற்போதைய காலகட்டத்தில் மிகப் பெரிய தஃவா என்னவெனில், மாற்று மதத்தவர்கள் மத்தியில் இஸ்லாம் கூறிய நல்ல விடயங்களை பிரதிபலிக்கும் வகையில் நடந்துகொள்வதற்கான போதனைகளை நாம் எமது மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதாகும். சமூக உறவுகள், வியாபாரம், அரசியல் உள்ளிட்ட சகல துறைகளிலும் முஸ்லிம்கள் தமது நற்குணத்திற்கு காரணம் இஸ்லாம் தான் என்பதை பிரதிபலிக்கக்கூடிய வகையில் தங்களுடைய நடத்தைகளை மாற்றிக் கொள்ள வேண்டும். எதிர்வரும் காலத்தில் இஸ்லாம் வளர்வதற்கு இதுவே போதுமானதாகும்.

- தொகுப்பு: ஹெட்டி ரம்ஸி



# ஞானசாரரின் நளீமீக்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள்

## "நளீமீக்கள் மற்றவர் உள்ளத்தில் நல்லெண்ணம் ஏற்படும் வகையில் நடந்துகொள்ள வேண்டும்."



அப்துல் ஹமீத் (பஹ்ஜி) -
தேசியப் பிறைக் குழுத் தலைவர், பெரிய பள்ளிவாசல் ஷரீஆ கவுன்சில் உப தலைவர், பிரதான இமாம் - கொழும்பு பெரிய பள்ளிவாசல், சாதுலியா தரீக்காவுடைய இலங்கைத் தலைவர்.

நளீம் ஹாஜியார் அவர்களின் நல்லெண்ணத்தின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமே ஜாமியா நளீமிய்யா கலாபீடமாகும். சமூகத்தில் படித்தவர்கள் வர வேண்டும், அவர்கள் உயர் பதவிகளை வகிக்க வேண்டும் என்கின்ற நல்ல நிய்யத்திலேயே இந்நிறுவனத்தை ஆரம்பித்தார். ஊரைக் குழப்புவது அல்லது பிரச்சினைப் பட்டுக்கொள்வது அல்லது பத்வாக்களை வழங்கி சமூகங்களுக்கிடையில் குழப்பத்தை உண்டுபண்ணுவது போன்ற நோக்கங்களுக்காக இந்நிறுவனம் உருவாக்கப்படவில்லை.

முன்பு ஒரு அறிஞர் ஒரு பத்வாவை வழங்கியிருப்பார். தற்போது அதில் நாங்கள் போய் பத்வா கொடுக்கும் போது பிரச்சினை ஏற்படும் அல்லவா? இது வரை காலமும் நாம் எங்கும் பத்வா வழங்கச் செல்வதில்லை. அது சரியில்லை. முன்னால் வாழ்ந்த உலமாக்கள் எப்படி வாழ்ந்தார்களோ அப்படி நாமும் போய்க் கொண்டுள்ளோம். இந்நாட்டில் நளீமீக்கள் முன்னோர்கள் வாழ்ந்தது போன்று குறிப்பாக சாதுலியா தரீக்காவைப் பின்பற்றி வாழ்ந்த நளீம் ஹாஜியாரைப் போன்று மற்றைய முஸ்லிம்களுடனும் மாற்று மத சகோதரர்களின் உள்ளத்தில் நல்லெண்ணம் ஏற்படும் வகையிலும் நடந்துகொள்ள வேண்டும்.

இவர்கள் மற்ற மக்களது நல்லெண்ணத்தை விட்டும் அகலக் காரணம் என்னவெனில், அவர்களுக்கு யார் சொல்லிக் கொடுத்தார்களோ தெரியவில்லை, அவர்கள் கொண்டிருக்கும் சில கருத்துக்கள் தான். உதாரணமாக பாடசாலைகளுக்கான பாடத் திட்டங்களில் முன்னர் மத்ஹப், தசவ்வுப், தராவீஹ் போன்ற விடயங்களை பற்றி அழகிய முறையில் குறிப்பிடப் பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து பாடசாலைகளுக்கான பாடத் திட்டங்களை வகுப்பதற்கு நளீமிக்களே அதிகம் பங்கு கொண்டார்கள். அவர்கள் இப்னு தைமியா, அபுல் அஹ்லா மௌதூதி போன்ற நவீன கால சிந்தனையாளர்களது கருத்துக்களை பாடப் புத்தகங்களில் புகுத்தி மாணவர்களது உள்ளங்களில் அவ்விடயத்தை போட்டார்கள்.

பழையதை இல்லாமல் செய்து புதிய தொன்றை கொண்டுவர வேண்டும் என்ற திட்டத்திலேயே போட்டிருக்கிறார்கள். மாற்று மத சகோதரர்கள் அல்லது எமது சமூகத்தின் பழைமைவாதிகளுக்கிடையில் மிகப்பெரும் பிரச்சினையேற்படுவதற்கு இதுவே முதற் காரணம்.

இரண்டாவது, இந்நாட்டில் இஸ்லாத்திற்காக வேண்டி பாடுபட்டு தொண்டாற்றிய முன்னைய காலத்தில் வாழ்ந்த பெரும் பெரும் உலமாக்கள், சூபிக்கள், இறைநேசர்கள் இங்கு வந்து பள்ளிவாசல்களை கட்டி, மத்ரஸாக்களை உருவாக்கி மாற்று மத சகோதரர்களுடன் ஒற்றுமையாக வாழ்ந்து காட்டிய வழிமுறைகள் இன்று இல்லாமல் போகக் காரணமும் எமது சில தீய சிந்தனைகளாகும்.

உதாரணமாக சில முஸ்லிம் நாடுகளில் சில இயக்கங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன. எகிப்து, சவூதி அரேபியா போன்ற நாடுகளில் இஹ்வானுல் முஸ்லிமீன் அமைப்பு தடைசெய்யப்பட்டுள்ளது. அது போன்று மலேசியாவில் வஹாபிசம் தடை செய்யப்பட்டுள்ளது. இப்படி தடைசெய்யப்பட்ட நாடுகளில் கூட எமது இஸ்லாத்தின் பெயரால் வருகின்ற பயங்கரவாத அல்லது தீவிரவாத இயக்கங்க[illegible] செய்யப்பட்டும் இலங்கையில் [illegible]யொரு தடை விதிக்கப்படவில்லை. காரணம், இலங்கைக்கு இது விடயம் பற்றித் தெரியாமல் உள்ளதாகும். இருந்தும் இவர்கள் உள்ளால் பாடப் புத்தகங்களிலும், தனியார் பாடசாலைகளிலும் சில சிந்தனைகளை புகுத்தியிருப்பதானது முன்னால் வாழ்ந்தவர்களை உண்மையிலேயே இழிவுபடுத்தியது போன்றுள்ளது.

முன்னால் வாழ்ந்தவர்கள் சரியில்லை. பின்னால் வாழ்ந்தவர்களே சரியென்பதை காண்பிக்கவே அவர்கள் இந்த வேலையை செய்திருக்கிறார்கள். முன்னால் வாழ்ந்த உலமாக்கள் அல்லது செய்ஹ் மார்கள் அல்லது இஸ்லாத்திற்காக தொண்டாற்றிய பெரும் பெரும் அறிஞர்களது சிந்தனைகள் அழிக்கப்பட்டு அவர்கள் சரியில்லை, அப்படியொன்று இல்லை என்றும் அபுல் அஹ்லா மௌதூதி, இப்னு தைமியா போன்றவர்களே புதிதாக கிளம்பி வந்து இஸ்லாத்துக்கு அரும் பங்காற்றியுள்ளனர் என்கின்ற சிந்தனையை போட்டுள்ளார்கள். இது மிகப்பெரும் தவறல்லவா?

இலங்கை, இந்தியா, மாலைதீவு, இந்தோனேசியா உள்ளிட்ட ஆசிய நாடுகளுக்கு சூபியாக்களுடைய தியாகத்திலேயே இஸ்லாம் பரவியது. அவற்றையெல்லாம் மறந்து நூறு, இருநூறு வருடங்களுக்குள் வந்த ஆட்களை பெரியவர்களாக்கி, இவர்கள் தான் எல்லாவற்றையும் செய்தார்கள், பழையவைகள் அனைத்தும் பிழையானவை எனக் கூறும் போதே பிரச்சினை வருகிறது. குனூத்தை இல்லாமல் செய்தார்கள், தராவீஹஉடைய எண்ணிக்கையைக் குறைத்தார்கள். இப்படி பழமையான மத்ஹபின் போக்கில் இந்நாட்டில் 90 வீதம் மத்ஹபை பின்பற்றி வாழ்ந்த மக்களின் உள்ளத்தில் இருக்கும் எல்லாவற்றையும் பித்அத், ஷிர்க் என்றார்கள்.

இது காபிர்களுக்கு மத்தியிலும் பாரியளவில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. பழமையை உடைக்கின்றார்கள், பழமையான முஸ்லிம்களுக்கு முஸ்லிம்களில் சிலர் எதிரியாக இருக்கின்றார்கள் என்கின்ற [illegible]

## "நளீமிக்கள் தங்களுக்கான நாட்டுப் பங்களிப்பையும் சமூகப் பங்களிப்பையும் சரியாகச் செய்வதன் மூலம் இந்த குற்றச்சாட்டுக்களிலிருந்து மீள முடியும்."



என்.எம். அமீன் -
தலைவர், முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீ லங்கா

நளீமீக்கள் இந்த நாட்டில் மர்ஹூம் நளீம் ஹாஜியார் அவர்களால் உருவாக்கப்பட்ட ஜாமியா நளீமிய்யாவின் பட்டதாரிகள். இந்த நாட்டின் முஸ்லிம் சமூகத்துடைய கிறீம் என்று சொல்கின்ற அதாவது க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சிறப்பாக சித்திபெற்றவர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கான இஸ்லாமிய அடிப்படையிலான கல்வியையும் உலகக் கல்வியையும் வழங்குகின்ற ஒரு நிறுவனமே நளீமிய்யா ஆகும். உண்மையிலேயே நளீமிய்யா பற்றி பல்வேறு குற்றச்சாட்டுக்களை புரிந்துகொள்ளாத சிலர் தெரிவித்து வருகின்றனர். நளீமிய்யா உண்மையில் முஸ்லிம்களுடைய முதுசமாகும். நளீமிய்யா பட்டதாரிகள் இந்நாட்டின் உயர் பதவிகளில் உள்ளனர். அவர்கள் அந்த இடங்களுக்குத் தானாக வரவில்லை. நாட்டில் நடாத்தப்படுகின்ற போட்டிப் பரீட்சைகளில் அவர்கள் தெரிவாகி அதனூடாகத் தான் உயர் பதவிகளுக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் அந்த இடங்களில் திறமையான முறையில் சிறப்பாக சேவையாற்றியிருக்கிறார்கள். உதாரணமாக இந்த நாட்டினுடைய தேர்தல் ஆணையாளராக ஒரு முஸ்லிம் இருந்ததென்றால் அது நளீமிய்யாவின் உற்பத்தியாகத்தான் உள்ளது.

இந்த சந்தர்ப்பத்தில் சிலர் முஸ்லிம் சமூகத்தை குழப்பிவிடுவதற்கான கருத்துக்களை தெரிவிப்பார்கள். நளீமிகள் தங்களுடைய செயற்பாட்டு முன்மாதிரியால் அதனை வெற்றிகொள்ள வேண்டும். இதனை எதிர்கொள்ள வேண்டிய தேவையில்லை. ஏனெனில் இன்று இப்படி தொடர்ந்து சில நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக எங்களை அடிக்க முற்படுகிறார்கள். ஆனால் அவையெல்லாம் வெற்றியளிக்காது. நளீமிக்கள் தங்களுக்கான நாட்டுப் பங்களிப்பையும் சமூகப் பங்களிப்பையும் சரியாகச் செய்வதன் மூலம் இந்த குற்றச்சாட்டுக்களிலிருந்து மீள முடியும்.

அதனை இப்போதே பெற்றிருக்கின்றார்கள். பல்வேறு அரச நிறுவனங்களில் அவர்கள் பணிபுரிகின்றார்கள். முன்மாதிரிமிக்கவர்களாக இருக்கின்றார்கள். அரச துறையில் ஏனையவர்களோடு ஒப்பிடும்போது நளீமீக்கள் நேர்மை, சிறப்பான செயற்திறன் காரணமாக இந்த சவாலை வெற்றிகொள்ள முடியும். ஒட்டுமொத்த பெரும்பான்மை சமூகங்களும் இப்படிப் பேசவில்லை. அவர்களோடு பணிபுரிந்தவர்கள் நளீமீக்களை புரிந்துகொண்டிருப்பார்கள். ஆகவே நாம் எங்களுடைய செயற்பாடுகள் மூலம் தான் எங்களுக்கான எதிர்கால சவால்களை வெற்றிகொள்ள முடியும்.

அவர்களுடைய போதனை ஒருபுறத்தில் செல்லட்டும் பரவாயில்லை, ஆனால் அவர்கள் அதனை கொஞ்சம் நிதானமாகக் கையாள்வது சிறந்தது. பழையது சரியில்லை, பழையது பிழை, பழையது பித்அத் என்று சொல்வது தவறானது. நளீமீக்கள் படிக்கின்றார்கள் என்பது உண்மை. பட்டங்களை பெறுகின்றார்கள். அரச பதவிகளில் சேவை புரிகின்றார்கள். ஆனால், அவர்களுள் மத்ரஸாக்களில் இல்மை கற்பிப்பவர்கள் மிக மிகக் குறைவு.

நளீமிக்களில் ஒரு சிலரைத் தவிர இஸ்லாமியத் துறையில் அகீதாவுடைய துறையில் அதாவது சரீஆவுடைய துறையில் ஆழமாகக் கற்கின்றார்களா? என்பது கேள்விக்குறியே. படிப்பு மாத்திரமே அவர்களது நோக்கம். சிறு சிறு குழுக்களாக சேர்ந்துகொண்டு பேஸ்புக்கிலும், பத்திரிகைகளிலும் அது கூடாது, இது கூடும் என்று வீணான பத்வாக்களை வழங்குகின்றார்கள். இப்படி குழுக்களாக சேர்ந்து கொண்டு சண்டைபிடித்தால் யாருக்கு நஷ்டம். எமது சமூகத்துக்குத் தான் நட்டம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதமரின்... (01 ஆம் பக்கத் தொடர்)

குறிப்பாக விமலவீர திசாநாயக்க இது தொடர்பில் தனது அதிருப்தியை வெளிப் படையாகவே வெளியிட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர்களுக்கு தாமதமின்றி தமது பொறுப்புக்களை வழங்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அமைச்சரவை அமைச்சர்களைக் கேட்டுள்ள நிலையில், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி பி.பீ. ஜயசுந்தா இது தொடர்பில் அனைத்து அமைச்சுக்களுக்கும் கடிதம் அனுப்பியுள்ளார்.

மீள்பார்வை சமூகம் சிந்திப்பதற்கும் தீர்மானமெடுப்பதற்கும் உதவும் வகையில் கால் நூற்றாண்டுகளாக இலங்கையில் வெளிவருகிறது. இதற்குத் துணை போகும் வகையான ஆக்கங்களுக்கு பத்திரிகையில் எப்போதும் இடமுண்டு. சமூகத்தை சரியான திசையில் வழிப்படுத்த வேண்டும் என்று கருதுபவர்கள் தாராளமாக தமது கருத்துக்களை எழுதலாம். அது அவரவர் சொந்தக் கருத்துக்களாகவே அமையும்.

## ஜம்இய்யதுல் உலமா... (01 ஆம் பக்கத் தொடர்)

இந்த நிலையில் கண்டி, புத்தளம், மாத்தறை, களுத்துறை, கொழும்பு போன்ற மாவட்டங்களில் ஜம்இய்யதுல் உலமா நேரடியாக வேட்பாளர்களைக் களமிறக் கவோ, அல்லது போட்டியிடும் வேட்பாளருக்கு ஆதரவளிக்கவோ கள மிறங்கி யிருப்பதாக குறித்த பிரதேசங்களில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. குறித்தொரு கட்சியை நோக்கியே இந்த ஆதரவுத்தளம் செயற்படுவதாகவும் இந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தாய்ப்பால்... (01 ஆம் பக்கத் தொடர்)

அவர் இங்கு உரையாற்றுகையில்,பால்மா பாவனையை தடுப்பது தேக ஆரோக் கியத்துக்கு முக்கியமானதாகும் என்றும், இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் பயன்பாட்டின் காரணமாக சிறு குழந்தைகளைப் போன்று வளர்ந்தோரும் பெரு மளவில் தொற்றா நோய்க்கு உள்ளாகியிருப்பது அதிகரித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

பால் மாவின் தீங்கு தொடர்பான விழிப்பூட்டல்களை அரசாங்கம் நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளத் துவங்கியிருக்கிறது.

## பாதுகாப்புக்காக... (01 ஆம் பக்கத் தொடர்)

தொடர்பிலான அறிவைப் பெற்றி ருப்பதன் அவசியம் பற்றி துவால் இதன் போது குறிப்பிட்டார்.

இலங்கையில் புலனாய்வுத் தகவல் களைச் சேகரித்தலிலும், பிராந்திய ஒத் துழைப்பு மையமொன்றை நிறுவுவது தொடர்பிலும் இந்தியா நிதியுதவி வழங்க வுள்ளது.

கடந்த வாரங்களில் சீன, ரஷ்ய வெளி நாட்டமைச்சர்களும், அமெரிக்க ராஜாங் கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர் அலைஸ் வெல்ஸினதும் விஜயங்களை அடுத்தே இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகரின் விஜயம் நிகழ்ந்துள்ளது.

## 2020 பொதுத்... (09 ஆம் பக்கத் தொடர்)

வழிமுறைகளைத் தவிர்த்து, நாட்டு நலன், அபிவிருத்தி, பல்லின அரசியல் சமூகத்தை அங்கீகரிக்கும் பெரும்பான்மை யோடு நாட்டு நலன் கருதிய ஒற்றிணைவை மையப்படுத்திய பிரச்சாரம் முன்னெடுக் கப்பட வேண்டும்.

4. பெரும்பான்மை அரசியல் கட்சி யோடு ஒன்றிணைவதும் அல்லது தனித் துப் போட்டியிடுவதன் பின்னரான அரசி யல் கோரிக்கைகளும் நாட்டு நலன், சமூக நலன் சார்ந்ததாக இருக்க வேண்டும்.

5. புதிய இளைய தலைமுறைக்கு கட்சி இடம் தர வேண்டும்.

குறிப்பாக இனத் துருவமயப்படுத்தும் அசரியல் கலாசாரத்தை வரும் பொதுத் தேர்தலில் முஸ்லிம் அரசியல் கட்சிகள் முற்றாகக் கைவிட வேண்டும்.

இந்த வகையில் நாட்டின் எதிர்கால அரசியல் சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு மாறி வரும் புவி அரசியலை (Geo Politics) அவதானித்தும் முஸ்லிம் சமூகம், சிவில் அமைப்புகள், முஸ்லிம் அரசியல் என்பன ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய காலத்தின் கட்டாயத்தில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இதுவே எமது அடையாளத்தையும் அரசியல் இருப் பையும் தீர்மானிக்கப் போகின்றது. இத்தேர்தலே இலங்கையின் விகிசாதாரத் தேர்தலின் கடைசித் தேர்தலாகவும் அமை யலாம் என்பதே அரசியல் ஆய்வாளர்களின் எதிர்வுகூறலாகக் காணப்படுகின்றது.

## அரசின்... (01 ஆம் பக்கத் தொடர்)

குறைந்த வருமானமுடைய ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு களை பெற்றுக் கொடுத்தலையும் மானிய விலையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்குதலையும் வறுமை ஒழிப்புக்கான நிலையான திட்டமாக ஜனாதிபதி ஐ.நா பிரதிநிதியிடம் எடுத்துக் காட்டினார். இலங்கையில் பரீட்சை மையப்படுத்தப்பட்ட கல்வியே சுதந்திர காலம் முதல் நடைமுறைப்படுத்தப் படுவதாகவும், தற்போது ஏழாம் தரத்தில் இருந்து திறன்விருத்திக் கல்வி அறிமுகப் படுத்தப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி அவர்களிடம் எடுத்துக் காட்டினார்.

தற்போது விஞ்ஞர்ன பாடத்துக்கான வினாப் பத்திரங்கள் மாணவர்களை பெயில் பண்ணுவதற்காகவே தயாரிக்கப் படுகின்றன. இதனை மாற்றியமைத்து மாண வர்கள் தொழில்நுட்பக் கல்வியைத் தொடர்வதற்கு அதிகமான வாய்ப்பு வழங்கப்படும் எனவும் அவர் தெரி வித்தார்.

காலநிலை மாற்றத்துக்கான திட்ட த்தை நடைமுறைப்படுத்துவதில் கிராமப் புற விவசாயிகள் விவசாயத்துக்காக காடுகளை அழிப்பது பெரும் தடையாக இருப்பதாகக் குறிப்பிட்ட அவர், நீரேந்து பகுதிகள் தேயிலைப் பயிர்ச்செய்கைக் காக தயார்படுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றுக்குப் பதிலாக சைப்ரஸ், பைன் மரங்கள் நாட்டப்பட்டுள்ளன. இவற்றுக் கிடையில் புற்தாவரங்கள் வளர்வதில் லை. இதனால் இவை மண்ணரிப்பைத் தடுப்பதில்லை. கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட தவறானதொரு முடிவு இது எனவும் தெரிவித்தார்.

கல்வித்துறை, தகவல் தொழிநுட்ப மேம்பாடு மற்றும் அரச நிறுவனங்களின் டிஜிட்டல் மயமாக்கம் போன்ற செயற் பாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் உதவிகளை பெற்றுக்கொடுப்பதற்கு ஐ.நா பிரதிநிதி இணக்கம் தெரிவித்தார்.

காணாமற்போனோர் தொடர்பான பிரச்சினை பற்றிப் பேசும் போது அவர் கள் உண்மையிலேயே இறந்து விட் டார்கள். அவர்களுக்கு இறப்புச் சாட்சிப் பத்திரம் வெகுவிரைவில் விநியோகிக் கப்படும் எனவும், தமது அரசியல் அபி லாஷைகளுடன் முரண்பட்டுள்ளமை யினால் தமிழ் அரசியல்வாதிகள் அந்த நடவடிக்கைகளை நிராகரித்துள்ள போதி லும், பாதிப்புக்குட்பட்டுள்ள குடும்பங் களின் நலனுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதே அரசாங்கத்தின் எதிர் பார்ப்பாகும் எனவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

## உள்ளூர்... (03 ஆம் பக்கத் தொடர்)

பின் அப்துல்-அஸீஸ் அல்-சவூத் இவருக்கு மன்னர் பைசல் சர்வதேச விருது வழங்கி கௌரவித்தார்.

இப்போது அவர்கள் என்னிடம் ஒரு கேள்வியும் கேட்காமல் என்னைத் தடை செய்துள்ளதால், அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் அன்றி, சட்ட ரீதியாக மட்டுமே பதிலளிப்பதைத் தவிர வேறு வழியில்லை. அவர்களின் நிகழ்ச்சி நிரல் தெளிவானது. எப்படியாவது என்னைச் சிக்க வைக்கத் தான் அவர்கள் முயற்சிக்கிறார்கள். நான் அதற்கெதிராகப் போராடுவேன் என டாக்டர் ஸாகிர் நாயக் கூறுகிறார்.

PEACE TV மீதான தடை இன்றுவரை நடைமுறையில் இருக்கும்போது, இந்தச் சனல் வழங்கும் நிறுவனம் ஒரு தீவிர மான இஸ்ரேலிய சார்பு பிரச்சார சேனலை "God Bless Israel" என்ற பெயரில் சேனல் 94 இல் அறிமுகப்படுத்தியது. இது இஸ் ரேல் எந்த அளவிற்கு தீவின் ஊடகங்களில் ஊடுருவ முடிந்திருக்கிறது என்பதை அம் பலப்படுத்துகிறது. இருப்பினும் இந்த சேனல் தற்போது அகற்றப்பட்டது. இப் போது யூத மதத்தைப் பற்றி Jewish Voice. com என்ற புதிய சேனலை 97 இல் ஆரம் பித்திருக்கிறது.

யூத மதத்தைப் பற்றிய ஒரு சேனலை யாரும் எதிர்க்கப் போவதில்லை. வெளிப் படுத்தப்பட்ட மதங்களில் ஒன்றான இதனை இறைதூதர் ஈசா, இயேசுவைப் போலவே உலகெங்கிலும் உள்ள முஸ் லிம்கள் மதிக்கிறார்கள், இருப்பினும் கவலைக்குரிய விடயம் என்னவென்றால், பாலஸ்தீனியர்களுக்கு எதிரான கொடூர மான குற்றங்களை மறைப்பதற்கு இஸ் ரேல் அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ரஷ்யாவினதும், தங்கள் பிழைப்புக்காக கண்மூடித்தனமாக ஆதரவளிக்கும் அரபு கொடுங்கோலர்களதும் முழுமையான ஆத ரவுடன் இந்த சேனல்களைப் பயன்படுத்து கிறது.

இஸ்ரேலின் முக்கிய இலக்கு இஸ்லா மும் உலகளாவிய முஸ்லிம்களும். அவர் கள் எங்கு சென்றாலும், அவர்களின் முதல் முன்னுரிமை கூலிப்படையினரின் ஒரு குழுவை அமைத்து, முஸ்லிம்கள் மீது வெறுப்பை ஏற்படுத்தவும், வன்முறையை கட்டவிழ்த்து விடவும், சமூகங்களை பிளவுபடுத்தவும் பயன்படுத்துவதாகும்.

இலங்கையில் உள்ள பெரும்பாலான மக்களுக்கு இஸ்ரேலின் குற்றப் பின்னணி பற்றி அதிகம் தெரியாது, ஏனெனில் அதன் கொடுமைகள் உள்ளூர் ஊடகங்களில் ஒருபோதும் முன்னிலைப்படுத்தப்படுவ தில்லை. இவை பொதுவாக உள்ளூர் மற் றும் வெளிநாட்டு சக்திகளுக்கு அவர்களின் சொந்த நிகழ்ச்சி நிரல்களை நடைமுறைப் படுத்தும் கருவியாக மாறியுள்ளன.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு இஸ்ரே லியர்கள் இங்கு ஊடுருவத் தொடங்கிய போது இது இங்கே நடக்கும் என்று நான் கணித்து வெளியிட்டேன். இப்போது அது நடந்து விட்டது. முஸ்லிம்கள் அரக்கர் களாகச் சித்திரிக்கப்படுகிறார்கள். சமூகங் கள் பிளவுபட்டுள்ளன. அவர்களின் அதி கரித்த பிரசன்னம் வரவிருக்கும் தீங்கு களை கட்டியம் கூறுகின்றன. இது ஒட்டு மொத்தமாக தீவுக்குமான தீங்காகவே அமையப் போகிறது.

## அநாகரிகத்தின்... (06 ஆம் பக்கத் தொடர்)

பிரிவி கவுன்சில் வழங்கிய தீர்ப்பின் பின்ன ராவது அரசியலமைப்புக்கு முர ணான அந்த மொழிக் கொள்கைள் மாற் றிக் கொள்ளப்பட வில்லை. அதற்குப் பதிலாக அந்தக் கொள்கை 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் இணைத்துக் கொள்ளப்பட்டது. 1978 யாப்பு உருவாக் கத்தின் போது ஜே.ஆர்.ஜயவர்தன இந்தத் தவறைத் திருத் திக் கொண்டார். ஆனாலும், அந்த யாப்பின் 18, 19 ஆம் பிரிவுகளில் சிங்கள மொழிக்கு மட்டுமன்றி தமிழ் மொழிக்கும் உத்தியோகபூர்வ மொழி அந்தஸ்து வழங்கப்பட்டு அந்த இரண் டுக்கும் தேசிய மொழி அங்கீகாரம் வழங் கப்பட்டது. தமிழ் இளைஞர்கள் ஈழம் அரசுக்காக போராட்டத்தை ஆரம்பித்த பின்புதான் இந்தத் தவறு திருத்திக் கொள்ளப்பட்டது.

சிங்களம் மட்டும் கொள்கையை முன் னெடுத்த சிங்கள மொழிப் பிரியர்கள் யாரும் ஜேஆரின் இந்த மாற்றத்தை எதிர் த்து நிற்கவில்லை. இந்தத் தவறை முன் னரே திருத்தியிருந்தால், பிரச்சினை நீதி மன்றத்துக்கு வந்த பின்னர் நீதிமன்றம் தனது பொறுப்பை சரியாக நிறைவேற்றி யிருந்தால் நீண்ட காலம் நீடித்த தமிழ்ப் போராட்டத்தை தவிர்த்திருக்கலாம்.

### ஜே.ஆர். ஜயவர்தன

அரசியல் யாப்பை மீறும் அடுத்த பாரிய சம்பவம் ஜனாதிபதி ஜயவர்தனவின் காலத்தில் நடந்தது. தனக்கு ஆறில் ஐந்து பெரும்பான்மை நிலவிய பாராளுமன்றின் காலத்தை மேலும் ஆறு வருடங்கள் நீடிப் பதற்காக யாப்புத் திருத்தமொன்றை மேற் கொண்டார். மோசடி நிறைந்த சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டார். யாப்புக்கு முரணான இந்தச் செயற்பாடு நாட்டை வன்முறையில் தள்ளுவதற்கான பிரதான காரணியாக அமைந்தது. யாப்புக்கு உடன் பாடான வகையில் பாராளுமன்றத் தேர் தலொன்றை நடத்தியிருந்தால், பாராளு மன்றத்தில் எதிர்க்கட்சிப் பிரதிநிதித்துவம் பாரிய அளவில் அதிகரிப்பதற்கான வாய்ப் பிருந்ததோடு, ஜேவிபிக்கும் ஏதாவது பாராளுமன்ற அங்கத்துவம் கிடைப்பதன் ஊடாக அவர்கள் கிளர்ச்சியில் தள்ளப் படும் வாய்ப்பையும் குறைத்திருப்பதற்கு இடமிருந்தது. வடக்கிலும் வன்முறைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருந்த இளைஞர் இயக்கங்கள் வடக்கின் ஜனநாயக தமிழ் அரசியல் இயக்கங்களினால் தோல்வி யடைச் செய்யப்படவோ, வன்முறையைத் தெரிவு செய்திருந்த சிலரை பாராளுமன்ற அரசியலில் இணைத்து விடவோ இடமி ருந்தது. அந்த வகையில் 4 வது திருத்தம், தெற்கிலும் வடக்கிலும் பயங்கர கிளர்ச்சி கள் இரண்டைப் பிரசவிக்கக் காரணமாக இருந்தது.

இந்த யாப்புக்கு முரணான யாப்புத் திருத்தங்களுக்கு இடம் கொடுத்த வகையில் உயர்நீதிமன்றமும் இதற்கு வகை சொல்ல வேண்டும். இந்த யாப்புத் திருத்தத்தை ஆராய்ந்த நீதிபதிகள் குழுவில், பிரதம நீதியரசர் உட்பட மூவரடங்கிய நீதிபதிகள் அது யாப்புக்கு முரணான திருத்தம் எனத் தீர்ப்பு வழங்கிய போதிலும், எஞ்சிய நால்வரும் நாட்டை வன்முறைக்குத் தள் ளிய பயங்கரமான அந்தத் திருத்தத்துக்கு இடமளித்தனர். அது யாப்பைப் பாது காப்பதற்கான காவல் தெய்வமே யாப் பைத் துஷ்பிரயோகம் செய்த துர்ப்பாக்கிய நிகழ்வாக அமைந்தது.

### ரணசிங்க பிரேமதாச

ஜனாதிபதி பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தில் அவரது நியமனத்துக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்த தேர்தல் முறைப் பாடு நீதிமன்றத்தில் ஜனாதிபதியின் அக் கறைக்குக் காரணமாகிய பெரியதொரு விடயமாக இருந்தது. பலமான கிளர்ச்சி யில் ஈடுபட்டிருந்த ஜேவிபியினால் இந்த ஜனாதிபதித் தேர்தல் தடை செய்யப்பட்டி ருந்ததால் ஜனாதிபதித் தேர்தல் இரத்தம் தோய்ந்த பயங்கரமானதொரு சூழலி லேயே நடைபெற்றது. தேர்தல் கடமை களில் ஈடுபட முனைந்த சிலர் கொல் லப்பட்டனர். வாக்களிப்பு வீதம் இதனால் பெருமளவு குறைந்து காணப்பட்டது. சில வாக்குச் சாவடிகளில் வாக்களிப்பே நடத்தப்படவில்லை.

கிளர்ச்சியாளர்களின் தடையை மீறி தேர் தல் நடத்தப்பட்டது ஆரோக்கியமானதாக இருந்தாலும், தேர்தல் முறைப்பாட்டை கவனத்தில் எடுக்கும் போது உயர் நீதி மன்றம் வெற்றிபெற்றவரின் இருப்பைப் பாதுகாக்கும் வகையில் செயற்பட்டதே யன்றி, ஜனாதிபதித் தேர்தல் நடந்த பயங்கரச் சூழலிலும் அவ்வாறான சூழ லில் நடந்த தேர்தல் சுதந்திரமானதாகவும் நீதியானதாகவும் இருக்க முடியாது என்ற காரணத்திலும் போதுமான கவனம் செலுத்தவில்லை.

உயர்நீதிமன்றம் வெற்றிபெற்றவரின் இருப்பைப் பாதுகாக்கும் வகையில் செயற் படுவதை விடுத்து, கிளர்ச்சி ஓய்ந்து அமைதியான சூழல் ஏற்பட்ட பின்னர் உள்ள சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு மீண்டும் ஜனாதிபதித் தேர்தலை நடத்து வதற்கு தீர்மானித்திருந்தால் அந்த ஜனாதி பதித் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் நாட்டின் ஜனநாயக் கட்டமைப்பை பலப் படுத்துவதற்கு அது காரணமாக அமைந்தி ருக்கும். அத்தோடு, சிலவேளைகளில் ஜனாதிபதி பிரேமதாசவும் லலித் அதுலத் முதலியும் கொல்லப்படாமலும் இருந்தி ருக்கலாம். இந்த நிலைமையில் ஜனாதி பதியின் மீதான முறைப்பாடொன்றை வெல்வது மிகவும் கடினமானது என்ற முன்மாதிரியையே உயர்நீதிமன்றம் நாட் டுக்குக் காட்டியது.

நீதியரசர் சரத் நந்த சில்வாவின் உத வியைப் பெற்று பாராளுமன்ற அங்கத்து வத்தை இழக்காமலேயே எதிர்க்கட்சியில் இருந்து ஆளுங்கட்சியில் இணைய முடியு மான முறையொன்றை உருவாக்கியமை, ஜனாதிபதி சந்திரிக்காவின் ஆட்சிக் காலத் தில் நடந்த பாரிய யாப்பு மீறலாக அமைந் தது. இந்தச் செயற்பாடு அரசியலமை ப்பை விகாரமாக்கி அதன் அத்திவாரத் தையே முழுமையாகத் தகர்த்தெறிவதாக அமைந்தது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவை பதவியில் இருந்து இறக்குவ தற்காக மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோ தச் செயற்பாடும், அதற்காக நடைபெற் றுக் கொண்டிருந்த பாராளுமன்ற விசார ணைகளை தடுத்து நீதிமன்றம் வழங்கிய ரிட் மனுவை எட்டி எறிந்தமையும், ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத் தில் நடந்த யாப்பு மீறலாகும். இங்கி லாந்தை அரசவம்சம் ஆட்சி செய்த போது, அங்கிருந்த அரசர்களும் கூட ரிட் மனுவுக்கு மதிப்பளித்தார்கள். யாப்புக்கு முரணாக வும், நீதிமன்ற வழிகாட்டல்களுக்கு முரணா கவும் நிறைவேற்றப்பட்ட 19 ஆவது திருத்தம் நல்லாட்சி அரசில் நடந்த பாரிய யாப்பு மீறலாக அமைந்தது. அந்த வேளையில் நல்லாட்சி அரசாங்கம் தேன் தடவிய தோட்டாக்களால் யாப்பைக் கொலை செய்தது.

இந்த வகையில் அடிக்கடி மேற்கொள் ளப்பட்ட யாப்பு மீறல்களுக்கூடாகச் செய் யப்பட்டுள்ள அழிவு பாரியதாக இருந்தா லும், அவ்வாறான தவறுகள் உறைந்து போவதற்கு இடமளிக்கப்பட்டு வருவதே அல்லாமல், நிறைவேற்றதிகாரம், சட்ட வாக்கம், நீதித்துறை என்பன அது தொடர் பில் தேடிப் பார்த்து தவறுகளைத் திருத் திக் கொள்வதற்கு எந்த முயற்சியும் எடுக் கப்படவில்லை. தவறான முன்னுதாரணங் களை வழங்குவதற்குக் காரணமா யமைந்த சட்டவிரோதமானதும் யாப்பு முரணானது மான வழக்குகளை தள்ளுபடி செய்யும் பொறுப்பு உயர்நீதிமன்றத்துக்கு இருந்த போதிலும், எந்த பிரதம நீதியரசருமோ சட்ட மாஅதிபருமோ இது தொடர்பில் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய அழுகலுக்கு நிறைவேற்றதிகாரம், சட்டவாக்கம், நீதி மன்றம் ஆகிய மூன்றுமே சமஅளவில் பொறுப்புக் கூற வேண்டும்.


மீன்பார்வை

**உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | |
|---|---|---|---|
| மீன்பார்வை தனிப் பிரதி - ரூபா 40.00 | இந்தியா | மத்திய கிழக்கு நாடுகள் - 4000.00 | ஐக்கிய இராச்சியம் - 5500.00 |
| 12 இதழ்கள் - ரூபா 600.00 | தனிப் பிரதி - ரூபா 100.00 | மலேசியா - 4000.00 | அமெரிக்கா - 6500.00 |
| 24 இதழ்கள் - ரூபா 1200.00 | ஒரு வருடம் - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் - 4000.00 | அவுஸ்திரேலியா - 4700.00 |
| | | | சீனா - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

Focus Media # 255 H-1/1, Dr. Danister De Silva Mawatha (Baseline Road) Colombo-09, Sri Lanka. Hotline: 0777 581 661

People's Bank A/c: 056100153078164 (Branch: [illegible])


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்பார்வை விளையாட்டு

# மெய்வல்லுனர் அணி பயிற்சியாளராக




இலங்கை மெய்வல்லுநர் அணியின் பயிற்சியாளராக வை.கே. குலரத்னவை நியமிப்பதற்கு இலங்கை மெய்வல்லுநர் சம்மேளனம் தீர்மானித்துள்ளது. இலங்கையின் மெய்வல்லுனர் விளையாட்டுக்கு பல முன்னணி வீரர்களை உருவாக்கிய இவர், 2008, 2009 , 2010 ஆம் ஆண்டுகளில் மெய்வல்லுனர் அணியின் பிரதான பயிற்சியாளராக செயற்பட்டுள்ளார்.

கடந்த டிசம்பரில் முடிவடைந்த 13 ஆவது தெற்காசிய விளையாட்டு விழாவில் இலங்கை மெய்வல்லுனர் அணியின் பிரதான பயிற்சியாளராக இவரே செயற்பட்டார். 1980 ஆம் ஆண்டு விளையாட்டுத்துறை அதிகாரியாக அரச சேவையில் இணைந்து கொண்ட வை.கே குலரத்ன, 2017இல் ஓய்வுபெறும் வரை விளையாட்டுத்துறை அமைச்சின் செயற்றிட்ட அதிகாரியாகக் கடமையாற்றியிருந்தார். இவர் சர்வதேச மெய்வல்லுனர் சம்மேளனத்தின் 5 ஆவது பிரிவு பாடநெறியை வெற்றிகரமாக முடித்தவராவார்.

# இளையோரில் வேகமான பந்தை வீசி மதீஷ சாதனை




தற்பொழுது நடைபெற்று வரும் 19க்குக் கீழ் இளையோரின் உலகக் கிண்ணக் கிரிக்கட் போட்டிகளின் போது இந்தியாவுடனான முதல் போட்டியில் மதீஷ பதிரண வீசிய பந்து வீச்சொன்று உலக சாதனைப் பட்டியலில் சேர்ந்திருக்கிறது. இந்தியாவுடனான போட்டியின் நான்காவது ஓவரில் மதீஷ வீசிய பந்து 175Kph வேகத்தில் பதிவாகியுள்ளது.

இது வரை கிரிக்கட் விளையாட்டின் எந்தவொரு பதிப்பிலும் பதிவு செய்யப்பட்ட ஆகக் கூடிய வேகப் பந்து வீச்சாக இது சாதனை படைத்துள்ளது. இதற்கு முன்னர் வீசப்பட்ட அதிவேகப் பந்தாக ஷுஜப் அக்தரின் 161.3Kph வேகத்திலான பந்து வீச்சு பதியப்பட்டிருந்தது.

மதீஷவினால் வீசப்பட்ட இந்தப் பந்து வீச்சு வைட் போலாகப் பதியப்பட்டதனால் இது சாதனைப் பந்தில் அடங்குமா என்ற கேள்வி எழுந்தாலும், ஐசிசி இதனை மறுக்கவோ அல்லது திருத்தவோ இல்லை என்பதனால் மதீஷவின் பந்து வீச்சே உலகில் வேகமானதாக இதுவரை பதியப்படுகிறது.

## தெற்காசிய நகர்வல ஓட்டப் போட்டிகள் இலங்கையில்




தெற்காசிய ஒலிம்பிக் சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள இரண்டாவது தெற்காசிய நகர்வல ஓட்டப் போட்டிகள் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி விளையாட்டுத்துறை அமைச்சின் பூரண பங்களிப்புடன் இலங்கை மெய்வல்லுனர் சம்மேளனத்தின் மேற்பார்வையின் கீழ் இலங்கையில் நடைபெறவுள்ளது. இம்முறை இரண்டாவது தடவையாக நடக்கும் இந்தப் போட்டிகளை முதற் தடவையாக நடத்துவதற்கு இலங்கைக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இம்முறைய தெற்காசிய நகர்வல ஓட்டப் போட்டியில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், மாலைதீவுகள் மற்றும் பூட்டான் நாடுகளைச் சேர்ந்த சுமார் 28 வீர வீராங்கனைகள் கலந்துகொள்ளவுள்ளனர். 46ஆவது தேசிய விளையாட்டு விழாவின் நகர்வல ஓட்டப் போட்டியும் இந்தத் தொடருடன் நடைபெறவுள்ளது. 2018 இல் பூட்டானில் நடைபெற்ற முதலாவது போட்டியில் இலங்கை அணி நான்கு பதக்கங்களை வெற்றி கொண்டது. தேசிய மட்ட நகர்வல ஓட்டப் போட்டிகள் நடைபெறும் நுவரெலியா கோல்ப் மைதானத்திலேயே இந்தப் போட்டிகளும் நடைபெறும்.

# ஆசிய மெய்வல்லுனர் அணியில் ஏழு இலங்கை வீரர்கள்




நேபாளத்தில் நடந்து முடிந்த தெற்காசிய விளையாட்டு விழா (SAG) மெய்வல்லுனர் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்ற ஏழு வீர, வீராங்கனைகளுக்கு ஆசிய உள்ளக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பில் பங்கேற்பதற்கான வாய்ப்பு கிடைக்கவுள்ளது.

அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 12ஆம், 13ஆம் திகதிகளில் சீனாவின் ஹங்ஸுவில் நடைபெறவுள்ள ஆசிய உள்ளக மெய் வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டித் தொடரில் இந்த ஏழு வீரர் களையும் பங்கேற்கச் செய்ய இலங்கை மெய்வல்லுனர் சம்மேளனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, தெற்காசிய விளையாட்டு விழாவில் ஹெட்ரிக் தங்கப் பதக்கம் வென்ற டில்ஷி குமாரசிங்க (400 மற்றும் 800 மீற்றர்) அருண தர்ஷன (400 மீற்றர்), லக்ஷிகா சுகந்தி (60 மீற்றர், சட்டவேலி ஓட்டம் மற்றும் ஐந்து அம்சப் போட்டி), நிலானி ரத்னாயக்க (1500 மற்றும் 5000 மீற்றர்), இந்துனில் ஹேரத் (800 மீற்றர்) ஆகிய வீரர்கள் சுவட்டு நிகழ்ச்சிகளிலும், ஹசினி ப்ரபோதா பாலசூரிய (முப்பாய்ச்சல்) மற்றும் சாரங்கி சில்வா (நீளம் பாய்தல்) ஆகிய இருவரும் மைதான நிகழ்ச்சிகளிலும் இலங்கை சார்பாக பங்குபற்றவுள்ளனர். இதில் 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குபற்றும் இந்துனில் ஹேரத்தைத் தவிர மற்ற 6 வீரர்களும் முதல்தடவையாக ஆசிய உள்ளக மெய்வல்லுனர் தொடரில் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காட்டுத் தீ பாதிப்புக்கு நிதி திரட்டும் கிரிக்கட் போட்டி

அவுஸ்திரேலியாவில் ஏற்பட்ட காட்டுத் தீ பாதிப்புக்கு நிவாரண நிதி திரட்டுவதற்கான நல நிதி கிரிக்கெட் போட்டியொன்று அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது. இதில் அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர்களான ரிக்கி பொண்டிங், ஷேன் வோர்ன் ஆகியோர் தலைமையில் இரு அணிகள் களமிறங்கவுள்ளன. ரிக்கி பொண்டிங்கின் அணிக்கு மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் தலைவர் கோர்ட்னி வோல்ஷ் பயிற்சியாளராகவும், ஷேன் வோர்ன் தலைமையிலான அணிக்கு சச்சின் டெண்டுல்கர் பயிற்சியாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் பிக் பேஷ் டி20 லீக் தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்பாக எதிர்வரும் பெப்ரவரி 8ஆம் திகதி புஷ்பயர் கிரிக்கெட் பேஷ் என்ற பெயரில் இந்த கண்காட்சி கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது.

காட்டுத் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டு உள்ள தீயணைப்பு வீரர்கள், மீட்பு மற்றும் நிவாரண பணியாளர்கள், தன்னார்வலர்கள், அவசரகால பணியாளர்கள் ஆகியோரை அங்கீகரிக்கும் வகையில் இந்தப் போட்டி நடத்தப்படும். இந்தப் போட்டியின் மூலம் கிடைக்கும் டிக்கெட் கட்டணம் அனைத்தும் காட்டுத் தீயை அணைக்க உதவி வரும் ரெட் க்ரொஸ் அமைப்புக்கு வழங்கப்பட உள்ளது.





மலேசியா பெட்ரொனாஸ் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றிய கலாநிதி மொஹமட் மொஹிடீன் நயீம் அவர்கள் எழுதிய 'இமாம் நவவியின் நாற்பது நபிமொழிகள் விளக்கம்' நூல் வெளியீட்டு விழா, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம். நாஜிம் தலைமையில் கொழும்பில் நடைபெற்றது. பிரதம அதிதியாக ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபாவும், கௌரவ அதிதியாக ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியும் கலந்து கொண்டனர். நூலாய்வினை ஆய்வுகளுக்கான மிஷ்காத் நிறுவனத்தின் பணிப்பாளர் உஸ்தாத் எம்.ஏ.எம். மன்ஸூர் நிகழ்த்தினார்.






நாவலப்பிட்டி பிரதேச மாணவ மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் பரிசளிப்பு மற்றும் கௌரவிப்பு விழா ஒன்றினை நாவலப்பிட்டி முஸ்லிம் மத்திய சபையின் கல்விக் குழு ஏற்பாடு செய்திருந்தது. புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட மாணவ மாணவிகள், புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவ மாணவிகள், க.பொ.த சா/தர பரீட்சையில் 09 A சித்திகளைப் பெற்று சாதனை படைத்தோர், பிரதேசத்தில் வெளியான உலமாக்கள், பல்கலைக்கழகம் தெரிவானோர், சார்க் விளையாட்டுப் போட்டிகளில் வெண்கல பதக்கங்களை பெற்று நாட்டிற்குப் பெருமை தேடித் தந்த நாவலப்பிட்டி பிரதேச விளையாட்டு வீரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and Published by Focus Media (Pvt) Ltd, # 255 H-1/1, Dr. Danister De Silva Mawatha, Colombo-09.

# 25th ANNIVERSARY வெள்ளி விழா

## பாடசாலை விழாக்கள் தொடர்பில் புதிய சுற்று நிருபம்



பாடசாலை மாணவர்களை பொது விழாக்களில் பங்கு கொள்ளச் செய்வது தொடர்பாக முன்னர் வெளியிடப்பட்ட சுற் றறிக்கை இலக்கம் 2004/28 மற்றும் 2014.07.23 ஆம் திகதிய சுற்றறிக்கைகளை ரத்துச்செய்து கல்வியமைச்சு இது தொடர் பிலான புதிய விதிகளை அறிமுகப்படுத்தி, 50/2019 இலக்க சு ற்றறிக்கையை வெளி யிட்டுள்ளது.

இதன்படி, விளையாட்டு விழாக்கள், பரிசளிப்பு விழாக்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளிலும் ஆற்றப்படும் சொற் பொழிவுகள் மட்டுப்படுத்தப்பட்டவையாக அமைய வேண்டும். அதிபரின் உரை, விஷேட அதிதியின் உரை, மாணவர் தலைவரின் நன்றியுரை என்பன பிரதான மானவையாக அமைவதோடு மாணவர் தலைவருக்கு பிரதான மேடையில் வீற்றி ருப்பதற்கு இடம்கொடுக்கப்படவும் வேண் டும். நிகழ்ச்சிகளின் துவக்கம் தேசிய கீதத்துடன் அமைவதோடு நிகழ்ச்சிகள் பாடசாலை கீதத்துடன் முடிவடைய வேண் டும்.

பரிசு வழங்கல் மற்றும் விளையாட்டு விழாக்கள் தவிர்ந்த பாடசாலையில் நடத் தப்படும் ஏனைய விழாக்கள் ஒரு மணித் தியாலத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த விழாக்கள் மாணவர்களின் திறனை விருத்தி அடையச் செய்யும் வகையில் மாணவர் களால் வழிநடத்தப்படுவதற்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.

பிரதேசத்தில் பல்வேறு அமைப்புக்களி னால் வழிநடத்தப்படும் நிறு வனங்கள் மற்றும் சங்கங்க ளினால் பாடசாலை மாணவர் களை ஈடுபடுத்தி மேற்கொள் ளப்படும் கல்விக்குப் பொருந் தாத வதிவிட அல்லது வதிவிட அல்லாத நிகழ்ச்சித் திட்டங் களில் மாணவர்கள் பங்குபெறச் செய்வது தவிர்க்கப்பட வேண் டும். இதற்கு மேலதிகமாக பல்வேறுபட்ட நபர்களை வர வேற்பதற்காக மாணவர்களை பாதையின் இருமருங்கிலும் வரிசையாக நிற்க வைத்தல், நிதி சேகரித்தல் அல்லது வேறு பிரச்சார நட வடிக்கைகளுக்காக மாணவர்களை பங்கு பெறச் செய்வது தவிர்க்கப்பட வேண்டும்.

பாடசாலையின் இசைக் குழுவைப் பயன்படுத்துவது பாடசாலை நிகழ்ச்சிகளுக்கும், கல்வி அமைச்சினால் அங்கீ கரிக்கப்பட்ட சுதந்திர தின விழா மற்றும் கலாச்ச ார விழாக்கள் உள்ளிட்ட நிகழ்வு களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

காலைக் கூட்டங்கள் சமய நிகழ்ச்சிகளை மேற்கொண்டு நடத்தப்பட வேண் டும். சமய நிகழ்ச்சி களுக்குப் பின்னர் பாட சாலைக் கீதம் இசைக்கப்பட்டு அதிபர் அல்லது ஆசிரியர் ஒருவரினால் அறி வுறுத்தல் சொற்பொழிவொன்று நிகழ்த்தப் பட வேண்டும். செ வ்வாய், வியாழன், வெள்ளிக் கிழமைகளில் மாணவர்களுக் கான 10 நிமிட உடற்பயிற்சித் தொடர் ஒன்று நடத்தப்பட வேண்டும். காலைக் கூட்டம் மற்றும் உடற்பயிற்சிக்காக ஒதுக் கப்பட வேண்டிய ஆகக் கூடிய நேரம் 15 நிமிடங்களாகும்.

நாள் முடிவில் மாணவர்கள் பாடசா லையை விட்டு வெளியேறும் போது கடைசிப் பாடவேளையில் கற்பித்தலில் ஈடுபட்டுள்ள ஆசிரியரினால் தமது வகுப் பறையின் மாணவர்கள் மத வழிபாடு களுக்குப் பின்னர் கண்ணியமாக வகுப் பறையைவிட்டு வெளியேறுகிறார்களா என்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

## தாய்மார்தான் தீர்மானிக்கிறார்கள்



இலங்கையில் கட்டட நிர்மாணத் துறை சார்ந்தவர் களுக்கு அதிகமான கேள்வி இருக்கிறது. இலங்கையில் தகுதி வாய்ந்தவர்கள் குறைவு எனும் காரணத்தினால் ஒப்பந்தக்காரர்கள் வியட்நாம், சீனா, பாகிஸ்தான், பங்க ளாதேஷ் நாடுகளிலிருந்து தொழி லாளர்களைத் தருவிக்கின்றார்கள் என தொழிற்பயிற்சி அதிகார சபையின் தொழில் வழிகாட்டல், தொழில் வழங் கல் பிரிவின் பணிப்பாளர் ஸமன் குலசூரிய தெரிவித்தார்.

இந்தத் துறையில் நாங்கள் மாணவர்களை ஊக்கப் படுத்த வேண்டும். ஆசிய நாடுகளில் குறிப்பாக இலங் கையில் தாய்மாரே தங்களது பிள்ளைகளின் எதிர் காலத் துறையைத் தீர்மானிக்கிறார்கள். இவர்கள் பெரும்பாலும் தங்களது பிள்ளைகளை வைத்தியராக வும் பொறியியலாளராகவுமே வடிவமைக்க நினைக்கி றார்கள். எல்லோரும் வைத்தியராகவும் முடியாது. எல்லோரும் மேசனாகவும் முடியாது. ஒவ்வொரு பிள்ளைக்கும் அவர்களுக்கே உரித் தான இயல்பான ஆற்றல்கள் இருக் கின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

தொழிற்பயிற்சி அதிகார சபையில் நாங்கள் மாணவர்களுக்கு துறையைத் தெரிவு செய்வதற்கான Career Interest Test தேர்வினை வைக்கிறோம். இதன் மூலம் மாணவர்கள் தமது துறையைக் கண்டறிவது இலகுவாக இருக்கும். சிலவேளை இது தாய்மார் தூண்டிய துறையை விட மாறுபட்டதாக அமை யும். சாதாரண தரத்தில் சித்தியெய்தத் தவறுவதனால் வாழ்க்கை முடிவடைந்து விடுவதில்லை. அவர்கள் எம்மிடம் வந்தால் நாங்கள் அவர்களுக்கு வழியைக் காட்டு வோம். NVQ தரம் 4 இலிருந்து பட்டதாரியாகும் வரை எங்களால் அவர்களை வழிநடத்த முடியும். UNIVOTEC பல்கலைக்கழகத்தில் இருவழிகளாலும் (NVQ மற்றும் பாரம்பரிய முறை) வந்த மாணவர்கள் ஒன்றாக தமது பட்டப்படிப்பைத் தொடர்கிறார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜோன் கொத்தலாவல பல்கலையில் முதுமாணிக் கற்கைநெறி

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கற்கை நெறிகள் மார்ச் மாதத்தில் ஆரம்பமாகும். விண்ணப்பிப்பதற்கான இறுதித் தினம் இம்மாதம் 31 ஆம் திகதியாகும்.

| | | |
|---|---|---|
| MPhil/PhD Programs | 3 Years | Rs. 600,000.00 |
| MSc in Management | 2 Years | Rs. 260,000.00 |
| Master of Laws | 2 Years | Rs. 260,000.00 |
| MBA in E-Governance | 2 Years | Rs. 250,000.00 |
| MBA in Logistics Management | 2 Years | Rs. 260,000.00 |
| MSc in Security and Strategic Studies | 2 Years | Rs. 250,000.00 |
| MSc in Civil and Structural Engineering | 2 Years | Rs. 400,000.00 |
| MSc in Electrical Emgineering | 2 Years | Rs. 400,000.00 |
| MSc in Electronic and Telecom Engineering | 2 Years | Rs. 400,000.00 |
| MSc in Disaster Risk Reduction and Development | 2 Years | Rs. 250,000.00 |
| BSc in Management | 2 Years | Rs. 200,000.00 |

மேலதிக விபரங்களுக்கு 0112632133, 0113041447 www.kdu.ac.lk

## பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கான அனுமதி



இலங்கையின் பல்கலைக்கழகக் கல்லூரிகளில் கற்கை நெறிகளைத் தொடர்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தொடர்புடைய துறையில் உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி அல்லது NVQ தரம் 4 தகுதி உடையவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவுத் திகதி ஜனவரி 31. NVQ தரம் 05 தொழில்நுட்பத்தில் தேசிய டிப்ளோமா, NVQ தரம் 06 தொழில்நுட்பத்தில் உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகளை இங்கு பூர்த்தி செய்யலாம். கற்கை நெறி மூன்று வருடங்கள் முழு நேர மானது. இதில் 06 மாத கால பௌன்டேஷன் கற்கையும் ஒரு வருட கால தொழிற்பயிற்சியும் அடங்கும்.

## தாய்மொழி தின கட்டுரைப் போட்டி

பெப்ரவரி 21 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள சர்வதேச தாய்மொழி தினத்தை முன்னிட்டு பங்களாதேஷ் தூதரகம் இலங்கை கல்வி அமைச்சுடன் இணைந்து நடத்தவுள்ள கவிதை, கட்டுரை மற்றும் அழகியல் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தரம் 06 முதல் 12 வரையான முதலாவது பிரிவுக்கான படைப்புக் கலைப் போட்டிகளில் முதல் பரிசாக ரூபா.10,000 மும், இரண்டாம் பரிசாக ரூபா. 7,000 மும், மூன்றாம் பரிசாக ரூபா. 5,000 மும் வழங்கப்படும்.

தரம் 09 முதல் 11 வரையான இரண்டாம் பிரிவுக்கான கட்டுரைப் போட்டிகளில் முதல் பரிசாக ரூபா. 12,000 மும், இரண்டாம் பரிசாக ரூபா. 10,000 மும், மூன்றாம் பரிசாக ரூபா. 8,000 மும் வழங்கப்படும். கட்டுரைகள் 500 சொற்களைக் கொண்டதாக அமைதல் வேண்டும்.

மூன்றாம் பிரிவில் தரம் 12,13 மாணவர்கள் உள்ளடக்கப்படுவதோடு, இவர்களுக்கான கவிதைப் போட்டிகளில் முதலாமிடம் பெறுபவருக்கு 20,000 ரூபாவும், இரண்டாமிடம் பெறுப வருக்கு 15,000 ரூபாவும், மூன்றாமிடம் பெறுபவருக்கு 12,000 ரூபாவும் வழங்கப்படும். கவிதை களுக்கான சொற்களில் வரையறை கிடையாது.

ஒற்றுமைக்கான மொழி எனும் தலைப்பில் மும்மொழிகளிலும் படைப்புக்களைச் சமர்ப்பிக்க லாம். மாணவனினதும் பாடசாலையினதும் பெயர், தரம், தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் (முகவரி, தொலைபேசி...) என்பனவற்றுடன் ஆக்கங்கள் பாடசாலை அதிபரினால் அல்லது வகுப்பாசிரியரினால் உறுதிப்படுத்தப்பட்டு பெப்ரவரி 10 ஆம் திகதிக்கு முன்னர் guagefortunity @gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

## கலைமாணிப் பட்டப் படிப்புக்கான விண்ணப்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தி னால் நடத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த கலைமாணிக் கற்கைநெறி க்கு புதிய மாணவர்களை அனுமதிப் பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் 2017 அல்லது அதற்கு முன்னர், க.பொ.த. உயர்தரப் பரீட்சை யில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தி அடைந்திருப்ப துடன் பொது அறிவுப் பரீட்சையில் ஆகக் குறைந்தது 30 வீதமான புள்ளிகளைப் பெற்று பல்கலைக் கழக அனுமதிக்கு தகுதி பெற்றிருக்க வேண்டும் அல்லது தேசிய கல்வியியல் கல்லூரியில் கற்பித்தலில் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் அல்லது ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்றப்பட்ட அரசாங்கப் பாடசாலை யின் ஆசிரியராக இருக்க வேண்டும் அல்லது பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய மேற்குறித்த தகைமைகளுக்குத் தொடர்புடைய அல்லது சம மானது எனக் கருதக் கூடிய தகைமைகளைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை 500 ரூபா கட்டணம் செலுத்திப் பெற்று யாழ் பல்கலைக்கழகத் தில் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ, பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி 14.02.2020.**

**மேலதிக தொடர்புகளுக்கு 021 222 3612**

## கற்கைத் துறையை எவ்வாறு தெரிவு செய்வது?

சாதாரண தரப் பரீட்சையில் போல ஒன்பது பாடங்கள் உயர்தரப் பரீட்சையில் இல்லாவிட்டாலும் அந்த மூன்று பாடங் களையும் கற்றுத் தேர்வதற்கு கடினமாக உழைக்க வேண்டியிருக்கிறது.

இலங்கையின் கல்வி முறையில் உயர் தரப் பரீட்சைக்குத் தெரிவு செய்வதற்கு விஞ்ஞானம், தொழில்நுட்பம், கலை, வர்த்தகம் என நான்கு துறைகள் இருக் கின்றன. ஒவ்வொரு துறைக்கும் என ஒதுக்கப்பட்ட பாடங்களில் இருந்து மாண வர்கள் தமக்குரிய மூன்று பாடங்களைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும். கலைத் துறையில் ஆங்கில இலக்கியத்தைத் தெரிவு செய்யும் ஒருவர், தனக்கு விருப்பமானதாக இருந்தாலும் விஞ்ஞானத் துறைக்குரிய பௌதிகவியல் பாடத்தைத் தெரிவு செய்ய முடியாது. அந்த வகையில் உயர் தரத்துக் கான பாடங்கள் மட்டுப்படுத்தப்பட்ட வையாகும். இது கல்வி முறையில் உள்ள ஒரு குறைபாடாகும்.

### திறனாய்வு

திறன் என்பது ஒரு விடயத்தை ஒரு அளவில் செய்வதற்கு உங்களுக்குள் இருக் [illegible] மான துறைகளில் உங்களது பலம், பல வீனம், திறமை, அறிவு எப்படி இருக்கிறது என்பதனை திறனாய்வு செய்து கொள்ள வேண்டும். இதற்கென பல திறனாய்வுத் தேர்வுகள் இருக்கின்றன. இந்தத் திற னாய்வுத் தேர்வுகள் நீங்கள் யார் என்ப தனைக் காட்டித் தரும். கூகிளில் போய் Personality Test என்று டைப் செய்து அந்தப் பயிற்சிகளைச் செய்வதனூடாக வும் உங்களது திறனையும் துறையையும் தெரிந்து கொள்ள முடியும்.

### தனிப்பட்ட அக்கறை

தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் இருக் கின்ற ஈடுபாடும் அக்கறையும் துறையைத் தெரிவு செய்வதில் மிக முக்கியமானது. ஏனெனில் நீங்கள் வாழ்க்கையின் சந்தோ ஷத்துக்கும் மனமார்ந்த திருப்திக்குமாகவே துறையைத் தெரிவு செய்கிறீர்கள். துறை களை இப்படித் தெரிவுசெய்யும் போது உங்களது வேட்கை உங்களை வழிநடத் தும். இவ்வாறாக நீங்கள் தெரிவு செய்யும் துறை உங்களது ஆளுமையில் பிரதிபலிப் பதோடு நீங்கள் சிறுவயதில் கண்ட கனவு களை நனவாக்கும். நீங்கள் கற்பனையில் கண்ட தொழிலை அது உங்களுக்குப் பெற் றுக் கொடுக்கும். அந்தத் தொழிலில் நீங்கள் அக்கறையுடன் பணிபுரிவீர்கள்.

### அரச பல்கலைக்கழக அனுமதி

நீங்கள் தெரிவு செய்த துறைக் கான பாடங்களைத் தெரிவு செய் யும் போது அரச பல்கலைக்கழக அனுமதிக்குத் தேவையான Z ஸ்கோரைப் பெற்றுக் கொள்ள முடியுமான பாடங் களைத் தெரிவு செய்யுங்கள். இது தொடர் பில் ஆலோச னை பெற்றுக் கொள்ள முடியுமானவர்களை நாடுங்கள்.

### வெளிநாட்டுப் புலமைப் பரிசில்கள்

உங்களது இலக்கை வெளிநாட்டுப் பல் கலைக்கழகங்களில் அடையும் எதிர்பார்ப் புக்கள் இருந்தால் வெளிநாடுகளில் அங்கீ காரம் உள்ள பாடங்களைத் தெரிவு செய் வது உங்களுக்கு வாய்ப்பானதாக அமை யும். இது தொடர்பில் வெளிநாட்டு நிறு வனங்கள் அல்லது கல்வி முகவர்களுடன் கலந்தாலோசியுங்கள்.

இறுதியாக நீங்கள் எப்படிப்பட்டவராக இருக்கப் போகிறீர்கள் என்பதனை இப் போது நீங்கள் தீர்மானிக்கலாம். அதற் கேற்ப உங்களது கற்கைத் துறைகளை தெரிவு செய்யுங்கள். உங்களுக்கு விருப்ப மான, உங்களால் இயலுமான துறையை நீங்கள் தெரிவு செய்து விட்டதில் நீங்கள் உறுதியாக இருந்தால், வெளியார் யாரும் உங்களது தெரிவில் குறுக்கிடாமல் பார்த் துக் கொள்ளுங்கள். உங்களது தெரிவைப் பற்றி உங்களது பெற்றோருக்குத் தெளிவு படுத்துங்கள். சரியான தெரிவு சரியான முடிவுக்கு மிக முக்கியமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை சமுத்திரவியல் பல்கலைக்கழகம்

தேசிய உயர் கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் இந்தப் பல்கலைக் கழகமானது கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு சமுத்திரவியல் சார் துறைகளில் கௌரவ இள மாணிப் பட்டங்களை வழங்கும் பல்கலைக்கழகங்களுள் ஒன்று.

இலங்கையின் மேல் மாகாணத்தில் மட்டக்குளிப் பிரதேசத்தில் இயங்கும் இந்த பல்கலைக்கழகமானது 2017 ஆம் ஆண்டு முதல் மாணவர்களுக்கு முற்றிலும் இலவசமாக தனது கல்விச் சேவையை வழங்கி வருகிறது.

சமுத்திரவியல் துறை என்பது இப்போது மட்டுமல்ல எப்போதும் பிரபல்யம் வாய்ந்த துறையாகவே காணப்படுகிறது. இத்துறையில் வேலைவாய்ப்புகள் பல இடங்களில் பரந்து காணப்படுகின்றன. இந்தப் பல்கலைக்கழகத்தில் உள்ள அனைத்து கற்கைநெறிகளும் சர்வதேச அளவில் பிரபல்யம் வாய்ந்ததாக காணப்படுகிறது.

இந்த பல்கலைக்கழகத்தில் ஐந்து கற்கை நெறிகள் உள்ளன. அவை....

**1. Bsc.in Marine Engineering. (Hons)**

I. Sea Based
II. Shore Based

http://www.ocu.ac.lk/Degrees/MarinEngContent.aspx

பல்கலைக்கழக வெட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் மாணவர் களின் தேர்வு நடைபெறும். உயர் தரப் பரீட்சையில் இணைந்த கணிதப் பாடப்பிரிவில் தோற்றிய மாணவர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் C சித்தி/உயர் தர பொது ஆங்கிலத்தில் S சித்தியை பெற்றிருத்தல் வேண்டும்.

**2. Bsc.in Coastal and Resource Management. (Hons)**

http://www.ocu.ac.lk/Degrees/ICMContent.aspx

உயர் தரப் பரீட்சையில் ஏதேனும் ஒரு துறையில் தோற்றி சி த்தியடைந்திருத்தல் வேண்டும். தேர்வுப் பரீட்சையின் அடிப் படையில் மாணவர்களின் தேர்வு நடை பெறும். சாதாரண தரப் பரீட்சையில் ஆங் கிலத்தில் C சித்தி/உயர் தர பொது ஆங் கிலத்தில் S சித்தியை பெற்றிருத்தல் வேண்டும்.

**3. Bsc.in Maritime Transportation and Logistics.(Hons)**

http://www.ocu.ac.lk/Degrees/LogisticsContent.aspx

உயர் தரப் பரீட்சையில் ஏதேனும் ஒரு துறையில் தோற்றி சித்தி யடைந்திருத்தல் வேண்டும். தேர்வுப் பரீட்சையின் அடிப்படையில் மாணவர்களின் தேர்வு நடை பெறும். சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் C சித்தி/உயர் தர பொது ஆங்கிலத்தில் S சித்தியை பெற்றிருத்தல் வேண்டும்.

**4. Bsc.in Oceanography (Hons)**

பல்கலைக்கழக வெட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் மாணவர் களின் தேர்வு நடைபெறும். உயர் தரப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம் /இணைந்த கணிதம் ஆகிய பாடப் பிரிவுகளில் ஏதேனும் பாடப் பிரிவில் தோற்றிய மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும். சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் C சித்தி/உயர் தர பொது ஆங்கிலத்தில் S சித்தியை பெற்றிருத்தல் வேண்டும்.

இப்பல்கலைக்கழகம் ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் புதிய மாணவர் உள்ளெடுப்பிற்கான விண்ணப்பங்களைக் கோரும். இவ் விண்ணப்பங்கள் யாவும் இணையத்தின் மூலமாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (Online apply)

உங்கள் விண்ணப்பங்களை பின்வரும் இணையத்தளத்தின் வாயி லாக சமர்ப்பிக்க முடியும். http://www.ocu.ac.lk/News/Intake.aspx

(ஒரு மாணவர் ஒரு கற்கை நெறிக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.) சமுத்திரவியல் பல்கலைக்கழக உத்தியோகபூர்வ வலைத்தள முகவரி.... http://www.ocu.ac.lk/home.aspx

# பல்கலைக்கழகக் கல்லூரிகளும் காணப்படும் துறைகளும்

- Aquaculture and Aquatic resources Technology (Anuradapura),
- Automobile Technology (Kuliyapitiya, Matara),
- Building Services Technology (Anuradapura, Kuliyapitiya, Matara, Jaffna),
- Construction Technology (Kuliyapitiya, Jaffna, Batangala),
- Cosmetology (Kuliyapitiya, Ratmalana, Matara, Jaffna),
- Drafting Technology (Kuliyapitiya),
- Electrical Technology (Anuradapura, Ratmalana),
- Electronic Technology (Anuradapura),
- Event Management ( Ratmalana, Matara, Batangala),
- Farm Machinery Technology (Kuliyapitiya, Batangala, Jaffna),
- Fashion designing Technology (Ratmalana),
- Food Technology (Ratmalana, Matara, Jaffna),
- Hospitality Management (Anuradapura, Matara, Jaffna, Batangala),
- Maritime and Logistics Mangement (Ratmalana),
- Mechatronics Technology (Jaffna),
- Post-Harvest Technology (Anuradapura),
- Production Technology (Jaffna),
- Quantity Surveying (Anuradapura, Kuliyapitiya, Matara, Batangala),
- Refrigiration and Air conditioning Technology (Kuliyapitiya, Matara),
- Telecommunication Technology (Ratmalana),
- Travel and Tour Management (Anuradapura, Kuliyapitiya, Ratmalana, Matara, Batangala),
- Television Program Production Technology (Ratmalana),
- Television Post Production Technology (Ratmalana)

தொடர்புகளுக்கு

| | |
|---|---|
| www.uca.ac.lk | (Anuradapura 0252222010), |
| www.uck.ac.lk | (Kuliyapitiya 0372059576), |
| www.ucm.ac.lk | (Matara 0412222962/7) |
| www.ucr.ac.lk | (Ratmalana 0112626297/8), |
| www.ucj.ac.lk | (Jaffna 0212217791), |
| www.ucbatangala.lk | (Batangala 0362235572) |

# தகவல் தொழில்நுட்ப இளமாணி (வெளிவாரி) பட்டம்

## Bachelor of Information Technology (BIT) External Degree Programme

இலங்கையில் கொழும்பு,மொறட்டுவை என்ற இரு பல்கலைக்கழ கங்களில் வழங்கப்படுகின்றது. இதில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கொழும்பு பல்கலைக்கழக கணிணிக் கல்லூரியினால் (UCSC) இனால் வழங்கப்படும் BIT பற்றிய தெளிவை இப்பதிவு வழங்குகின்றது..

அதில் அதிக தொழில்வாய்ப்புக் கொண்ட குறுகிய காலத்தில் (3 வருடங்கள்), ஒப்பீட்டளவில் குறைந்த பணத்துடன் (75,300 அளவில்) முடிக்கக் கூடிய ஒரு பட்டப் பாடநெறியாக இருப்பினும் கடினம் என்ற கருத்தியல், போதிய விளக்கமின்மை என்பதால் குறைந்தளவு மாணவர்களே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள் கின்றார்கள்.

குறிப்பாக வெளிவராத உயர்தரப் பெறுபேறுகளுடனும் இப்பட் டப்படிப் பின் பதிவிற்கு விண்ணப்பிக்கலாம். ஆனால் இப்போது உயர் தரப் பரீட்சை முடிவுகளும் வெளிவந்துள்ளமையால் அதை பற்றி யோசிக்காமலேயே அனைவரும் பதிவிற்கு விண்ணப்பிக்க முடியும். அத்துடன் எந்த ஒரு உள்வாரி மாணவனும் எந்த பிரச்சினை யும் இல்லாமல் இப்பட்டப் படிப்பை எப்போதும் தொடர முடியும்.

இதற்கு வேண்டிய அடிப்படைத் தகைமை க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்தி. குறைந்தது 3 திறமைச் சித்திகளுடன் அவற்றில் இரண்டு கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும் என்பது மாத்திரமே. அத்துடன் நீங்கள் க.பொ.த உயர்தர சித்தி 3 பாடங்களி லும் எந்த துறையில் இருந்தாலும் நீங்கள் நேரடியாகப் பதிவிற்கு விண்ணப்பிக்க முடியும். நீங்கள் க.பொ.த உயர்தரத்தில் எந்த துறை யிலும் சித்தியடையவில்லை என்றால் கூட முதல் Fundamentals of Information Technology (FIT) என்ற ஒரு பரீட்சைக்கு தோற்றி அதன் சித்தியோடும் விண்ணப்பிக்க முடியும். உங்களுக்கு க.பொ.த (சா.த) இல் கணிதம், ஆங்கிலத்தில் C இருந்தாலே பட்டக் கனவை நனவாக்க முடியும். இப்போது இல்லையாயினும் க.பொ.த (சா.த) பரீட்சைக்கு மீண்டும் விண்ணப்பித்து இத்தகைமையை பெற்றுக் கொண்டும் எதிர் வரும் வருடங்களில் விண்ணப்பித்து தொடர முடியும்.

**இணைய வழி Virtual Learning Environment மூலம்**

பாடநெறிகள் அனைத்தையும் பாடங்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ள முடியும். பல்கலைக்கழகத்துக்கு சென்று படிக்க வேண்டிய அவசியத்திற்கே இடமில்லையாதலால் வேலை செய்பவர்களும் இக் கற்கைநெறியை தொடரலாம். நீங்கள் சுயகற்றல் மூலமோ பிரத்தியேக வகுப்புக்கள் மூலமோ கல்வி நிறுவனங்கள் மூலமோ கற்க முடியும். பரீட்சையில் தோற்றி சித்தியடைந்தால் போதும்.

முதல் வருட பூர்த்தியுடன் டிப்ளோமா சான்றிதழும் (DIT) இரண்டா வது வருட பூர்த்தியுடன் உயர் டிப்ளோமா சான்றிதழும் (HDIT) மூன் றாவது வருட பூர்த்தியுடன் பட்டச்சான்றிதழும் கிடைக்கும். (BIT)

வருடந்தோறும் இரு நிகழ்வுகள் சான்றிதழ் வழங்கும் விழா, பட்ட மளிப்பு விழா என இரண்டு நடைபெறும். அதில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் DIT, HDIT சான்றிதழ்களும் பட்டமளிப்பில் BIT பட்டச் சான்றிதழும் வழங்கப்படும்.

இதனை வைத்தே இரண்டு வருடத்தில் நீங்கள் Masters Degree யும் செய்ய முடியும்.

**கல்வியாண்டு 2020 இற்கான பதிவிற்கான இறுதி நாள்**
31.01.2020

கண்ணெனத் தகுமான எண்ணையும் எழுத்தையும்
கண்கொண்டு பார்க்கும் மாணவர்களின்
அறிவுக்கு கண்ணைத் திறந்து
அகக் கண்ணுக்கு ஞான விருந்து படைத்து
விண்ணுக்கு உயரச் செய்து
கண் மூடிக் கொண்ட சமூகத்தின்
ஊற்றுக் கண்ணுக்கு



வாழ்க்கையின் நிறைவு இறைவனின்
உள்ளத்தின் நிறைவாக பிரார்த்திக்கிறோம்
மீள்பார்வை

# தொழிற்பயிற்சி அதிகார சபை (VTA)

இது தொழில்புரிய ஆயத்தமாகுபவர்களுக்கு இலவசமாகப் பயிற்சி கொடுக்கும் நிலையமாகும். பல இளைஞர்கள் தொழிலுக்காக நிறுவனங் களுடன் இணைந்து கொண்ட போதிலும் குறித்த வேலையைச் சிறப்பாகச் செய்வதற்கான தொழில்சார் பயிற்சிகளுக்கு அவர்களை உட்படுத்த வேண்டியிருக்கிறது. உதாரணமாக Soft Skills எனப்படும் மென்திறன்கள் அவர்களது தொழில் கற்கைகளினூடாகக் கிடைப்பதில்லை. ஆங்கிலம் தெரிந்திருந்தாலும் அவர்களது பணிச் சூழலில் பயன்படுத்த முடியுமான மொழித்திறனை அவர்கள் பெற்றிருப்பதில்லை. பலருக்கு கம்பியூட்டரை சிறப்பாகப் பயன்படுத்தும் பயிற்சிகள் காணப்படுவதில்லை. இவர்களுக் கெல்லாம் இங்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக சொந்தமாக ஒரு வர்த்தக முயற்சியை ஆரம்பிப்ப தற்கான வழிகாட்டல்களும் வழங்கப்படுகின்றன. இதற்கான பயிற்சிகள் கூட வழங்கப்படுகின்றன. வங்கிக் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கும் உதவிகள் செய்யப்படுகின்றன.

இதில் இணைந்து கொள்வதற்கு வயதெல்லை கிடையாது. ஆனால் வேலை செய்யும் துறைகளுக்கேற்ற கல்வித் தகைமை தேவைப்படும். தேவையேற்படும் பட்சத்தில் குறித்த கல்வித் தகைமையைப் பெற்றுக் கொடுப்பதிலும் கவனம் செலுத்தப்படும்.

சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையாதவர்களும் தொழிற்பயிற்சி அதிகார சபையில் இணைந்து பயிற்சி பெற்று தமது தகைமைகளை அதிகரித்துக் கொள்ள முடியும். இங்கு 84 வகையான தொழிற் கற்கைகள் இருக்கின்றன. சாதாரண தரச் சித்தியுள்ளவர்கள் NVQ தரம் 03 இலிருந்து ஆரம்பிக்க முடியும். NVQ தரம் 06, 07 வரை வளர்ந்தால் அவர் பட்ட தாரியாக மாறலாம்.

இனி யாரும் தமது கல்வித் தரத்தை வைத்து தொழில் தரத்தை இழக்க வேண்டியதில்லை.

# இலங்கை மாணவர்களுக்கான அல்லாமா இக்பால் புலமைப் பரிசில்

இலங்கை பாகிஸ்தான் உயர்கல்வி ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் 1000 இலங்கை மாணவர்களுக்கு மருத்துவம், பொறியியல் விஞ்ஞானம் (Engineering Science), அடிப்படை மற்றும் இயற்கை விஞ்ஞர்னம் (Basic and Natural Science), சமூக விஞ்ஞானம் (Social Science) ஆகிய துறைகளில் புலமைப் பரிசில் வாய்ப்புக்களை பட்டப் படிப்பு (Under Graduate), பட்டப்பின்படிப்பு (Post Graduate), கலாநிதிக் கற்கைகளுக்கு (Doctoral Studies) வழங்குவதற்கு பாகிஸ்தானின் உயர் கல்வி ஆணைக்குழு (HEC) தீர்மானித்துள்ளது.

இலங்கை பாகிஸ்தான் மாணவர்களுக்கிடையே கலாச்சாரத்தையும் பாரம்பரியத்தையும் அறிவையும் பறிமாறிக் கொள்வதை இலக்காகக் கொண்டு இந்தப் புலமைப் பரிசில் வழங்கப்படுகிறது. தெரிவு செய் யப்படும் மாணவர்கள் பாகிஸ்தானின் தரம் வாய்ந்த பல்கலைக்கழ கங்களில் அனுமதி பெறுவதோடு, பாகிஸ்தானின் சமூகங்களையும், பெறுமானங்களையும் கற்றுக் கொள்வதிலும், தலைமைத்துவப் பயிற்சிகளிலும், தமது நாட்டைப் பற்றியும் கலாச்சாரத்தைப் பற்றியும் பாகிஸ்தானியர்களுடன் பகிர்ந்து கொள்வதிலும் ஈடுபடுத்தப்படுவர்.

பட்டப்படிப்பைத் தொடரும் மாணவர்கள் உயர் தரத்தில் 60 - 65 வீதத்துக்கு மேல் புள்ளிகள் பெற்றிருக்க வேண்டும். முதுமாணிக் கற்கைக்கு பட்டப்படிப்பில் 60 வீதத்துக்கு மேல் புள்ளிகள் பெற்றி ருக்க வேண்டும். பெண் விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பது ஊக்கு விக்கப்பட்டுள்ளது. பட்டப்படிப்புக்கான மாணவர்களின் வய தெல்லை 17 - 22 ஆகும். தெரிவு செய்யப்படுபவர்களுக்கான புலமைப் பரிசிலில் முழுமையான டியூசன் கட்டணங்கள், விடுதி அலவன்ஸ், கல்விச் செலவுகள், ஒரு தடவைக்கான விமானக் கட்டம் என்பன அடங்குகின்றன.

பொறியியல் பிரிவில் Telecom, Computer, Electrical, Mechanical என்பனவும், அடிப்படை மற்றும் இயற்கை விஞ்ஞானம் பிரிவில் veterinary, Agriculture, Natural, Biological என்பனவும், சமூக விஞ்ஞானம் பகுதியில் Education, International Relations, Architecture, Mass communication, Management, Gender Studies, Archeology என்பனவும் அடங்குகின்றன.

மேலதிக தகவல்களை <http://hec.gov.pk/site/paksl> என்ற இணையத் தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி பெப்ரவரி 29.

# பாடசாலைகளில் ஆங்கிலமொழி போதனா மொழியாக்கப்பட வேண்டும்

அரசாங்க பாடசாலைகளில் ஆங்கிலக் கல் வியை போதனா மொழியாகக் கற்பிக்க வேண்டு மென இராஜாங்க அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார். இதனால் சகல மதங் களையும் ஆங்கில மொழியிலே கற்பதற்கான வாய்ப்பு கிடைக்குமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



வெலிகம, முஸ்லிம் ஆரம்பப் பாடசாலை யில் தரம் ஒன்று மாணவர்களைச் சேர்க்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். பாடசாலை அதிபர் திருமதி ஸனூலா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்:

பாடசாலைகளில் இன்று சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் கற்பிக்கப்படுகின்றன. எனினும் ஆங்கில மொழியே போதனா மொழியாக அமைவது சிறந்ததாகும். இதன்மூலம் எல்லா மாணவர்களுக்கும் எந்த ஒரு பாடசாலைக்கும் சென்று கல்வி கற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்கும். எமது நாட்டில் இனங் களிடையே நிலவும் வேறுபாடுகளை இல்லாதொழிக்கவும் இது வாய்ப் பாக அமையும். ஒரே பாடசாலையில் பல்வேறு இனத்தவர்கள் கல்வி கற்கக் கூடிய சந்தர்ப்பமும் இதனால் உரு வாகும். மாணவர்களிடையே ஒற்றுமை, அன்னி யோன்யம், சகோதரத்துவம் என்பன உருவாக வும் இந்தக்கல்வி வழிகோலும். எந்த இனத்த வருக்கும் பாதிப்பு ஏற்பட இடமளிக்காது சகல இன மக்களையும் ஒன்றாக மதித்து ஒரே மாதிரியான சேவைகளை பெற்றுக் கொடுக்கவே அரசாங்கம் விரும்புகிறது.

கடந்த காலங்களில் எமது அரசாங்கத்தைப் பற்றி பொய்யான தவறான பிழையான கருத் துக்கள் பிரச்சாரம் செய்யப்பட்டன. எதிர்காலத் திலும் இவ்வாறான கருத்துக்களை பரப்ப சிலர் முயற்சிக்கலாம். இதனை எவரும் நம்பக் கூடாது. இப்பாடசாலையின் குறைபாடுகள் பற்றி பாடசாலை அதிபர் என்னிடம் சுட்டிக் காட்டினார். கூட்ட மண்டபத்துடன் வகுப்பறை களைக் கொண்ட மூன்றுமாடிக் கட்டடம் ஒன்றை நிர்மாணிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இப்பாடசாலை யின் முன்னேற்றத்துக்கு தென் மாகாண முதலமைச்சராக இருந்த காலம் தொட்டு இன்று வரை உதவி வருகிறேன். எதிர்காலத்திலும் இப்பாடசாலை முன்னேற்றத்திற்கு அரசாங்கத்தின் மூலமும் மாகாண சபை மூலமும் உதவுவதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனநலம் 44

# நடிப்பு - ஆளுமை (Hysterical Personality Disorder)



**03. நடிப்பு - ஆளுமை - (Hysterical Personality Disorder)**

நடிப்பு ஆளுமைக் கோளாறு உடையவர்கள் மற்றவர்களின் கவனத்தைப் பெறுவதற்கு பேராவல் கொண்டு அலைவர். பிறருடன் நேர்மையின்றி பாசாங்குடன் பழகும் இவர்கள், அளவுக்கு மீறிய உணர்ச்சி வெளிப்பாடுகளை அடுத்தவர்களிடம் காண்பிப்பார்கள். இவர்கள் பெரும்பாலும் சிறு வயதில் தாயின் பாசத்தையும் கவனிப்பையும் பெறத் தவறியவர்களாக இருப்பர்.

எப்போதும் சுரண்டிப் பிழைக்கும் நோக்குடன் மற்றவர்கள் மீது கண்வைத்துக் கொண்டே இருப்பர். அடுத்தவர்களின் மனதைக் கவர்வதற்காகப் பேசப்படும் இவர்களது பேச்சில் வாய்மையோ உள்ளத்தின் ஆழத்திலிருந்து வரும் உண்மைக் கருத்துக்களோ இருக்காது. இவ்வாறான ஆளுமைக் கோளாறினால் பெண்களும் பாதிக்கப்படுவதாக உளமருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

எனினும், பெண்களில் காணப்படும் வகை 'வித்தியாசமானது' எனக் கருதும் இன்னும் சிலர் அதனை Histrionic Personality Disorder என அழைக்கின்றனர். நடிப்பு ஆளுமை உள்ளவர்கள் மிகையாகச் சார்ந்திருப்பவர்களாக இருப்பர். இத்தகையோர் முன்னர் நாம் ஏனைய வகையறாக்களில் கண்டது போல் மற்றவர்களின் துன்பங்களைப் பற்றி கவலைப்பட மாட்டார்கள். வாழ்க்கையின் மிக எளிய நிகழ்ச்சியை அதிகமான மனவெழுச்சிகளுடன் வெளிப்படுத்துவார்கள். தமது துயரங்களும் துன்பங்களுமே இவர்களுக்குப் பெரும் துயராமாகவும் துன்பமாகவும் தோன்றும். அவ்வாறே அதனைப் பேசுவார்கள். தனது மகிழ்ச்சிகளே மாபெரும் மகிழ்ச்சிகள் எனக் கொள்வார்கள்.

தம்மைப் பற்றிய செய்திகளைக் கூறி மற்றர்களைச் சலிப்படையச் செய்வார்கள். ஏனையோர்களோடு மிக எளிதில் நட்புக் கொள்வார்கள். ஆனால், கடும் சுயநலப் போக்குள்ளவர்களாக இருப்பார்கள். எப்பொழுதும் மற்றவர்களின் கவனம் தம்மைச் சுற்றியே இருக்க வேண்டும் என்று நினைப்பார்கள். அதற்கேற்றவாறு தமது நடத்தைகளை அடிக்கடி மாற்றிக் கொள்வார்கள்.

ஆண்களை விட சிலவேளை பெண்கள் இத்தகைய ஆளுமை உடையவர்களாக இருக்கின்றனர் என உள மருத்துவர்கள் கூறுகின்றனர். இவர்களையே பண்டைக் காலத்தில் உளக் கூறு மாற்ற ஆளுமையினர் Hysterical Personality Disorder எனக் குறிப்பிட்டனர்.

இக்கோளாறுடைய பெண்கள் எப்போதும் மித மிஞ்சிய ஒப்பனைகளுடன் பகட்டாகக் காட்சியளிப்பர். அவர்களுடைய செய்கைகளில் போலித்தனமும் மிகைப்படுத்தலும் சிலவேளைகளில் நாடகத் தன்மையும் காணப்படும். ஏனையவர்களில் தம்மைப் பற்றிய மனப்பதிவை ஏற்படுத்துவதே இத்தகைய காட்சிப்படுத்தலுக்குக் காரணமாகும். இவ்வாறானவர்களின் பேச்சு மேல்வாரியானதாக இருப்பதோடு, மிகைத்துக் கூறும் சொற்கள் நிறைந்ததாகவும் காணப்படும்.

**04. தன்வழிபாட்டு ஆளுமை (Narcissistic Personality Disorder)**

தன்வழிபாட்டு ஆளுமை உள்ளவர்கள் தன்னைப் பற்றி மிகையான, மேன்மை மிக்க கருத்துக்களைக் கொண்டிருப்பர். தம் திறமைகள், வெற்றிகள் ஆகியவற்றைப் பற்றிய கனவிலேயே மிதப்பார்கள். நாசிசு (Narcissus) என்று பண்டைய காலத்தில் அழைக்கப்பட்ட ஒரு கிரேக்க மனிதன், குளமொன்றின் நீரில் தெரிந்த தன்னுடைய உருவத்தைக் கண்டு அதன் மீது காதல் கொண்டான் என்றும், அதனிடமிருந்து தன்னைப் பிரித்துக் கொள்ள முடியாமல் அவன் அதை நோக்கிய படியே பட்டினி கிடந்து இறந்தான் என்றும் சில கிரேக்க வாய்வழிக் கதைகள் கூறுகின்றன.

தன்வழிபாட்டு ஆளுமையினர் நாசிசைப் போன்று தன்வசப்பட்டவர்களாகவும் மற்றவர்கள் தம்மை எப்போதும் புகழ வேண்டும் என்று விரும்புபவர்களாகவும் இருக்கின்றனர். ஏனையோர் தம்மைக் குறை கூறுவதையோ பொருட்படுத்தாமல் இருப்பதையோ இவர்கள் சிறிதும் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். மற்றவர்களின் விருப்பு வெறுப்புக்களையோ உணர்வுகளையோ பற்றி கவலைப்பட மாட்டார்கள்.

---

அன்னை ஆயிஷா (றழி) அவர்களின் வாழ்வியல் – 19

# மு.:.மின்களின் தாய்

### வீட்டு வேலைகள்

ஆயிஷாவுடன் நபிகளார் வாழ்ந்த வீடு ஆடம்பரமும் டாம்பீகமும் நிறைந்த உயர்ந்த மாளிகையல்ல. மாறாக பனீ நஜ்ஜார் வீதியில் அமைந்திருந்த சிறிய அறைகளைக் கொண்ட கற்களாலான ஒரு சிறிய வீடு. மஸ்ஜிதுந் நபிவியோடு இணைந்ததாக அது அமைந்திருந்தது. நபிகளார் அவரும் அவரது உறவினர்களும் வாழ்வதற்கு அதனைக் கட்டியிருந்தார்கள். மிகச் சிறிய வாசலைக் கொண்டிருந்த அவ்வீடு உயர்ந்ததாக இருக்கவில்லை. மஸ்ஜிதுந் நபவிக்குக் கிழக்காக இருந்த அவ்வீட்டின் கதவு மஸ்ஜிதுந் நபவியோடு பிணைந்திருந்தது. மஸ்ஜிதுந் நபவியே அதன் வாசலாக விளங்கியது.

பள்ளிவாயலில் அமர்ந்த வண்ணமே ஆயிஷாவை நோக்கி தனது தலையை சாய்க்கின்றவர்களாக நபிகளார் இருந்தார்கள். அப்போது நபிகளாரின் தலைமுடியை ஆயிஷா வாரிவிடுவார்கள். சிலபோது தனக்கு ஏதும் தேவையாயின் பள்ளியில் இருந்தவாறே கையை வீட்டை நோக்கி நீட்டி, ஆயிஷாவிடம் பெற்றுக்கொள்வார்கள். அவ்வீட்டு அறையின் அகலம் ஆறு அல்லது ஏழு அடிகள் உடையது. களி மண்ணினால் அதன் சுவர்கள் கட்டப்பட்டிருந்தன. அதன் கூரை ஈச்சம் ஓலை களால் மேயப்பட்டிருந்தன. அறையில் யாரும் உயர்ந்து நின்றால் அவரது தலை கூரையில் படுமளவு சுவரின் உயரம் குறைவானது. ஒரேயொரு கதவைக் கொண்டிருந்தது.

அறையின் ஓரத்தில் ஓர் சிறிய கூடாரம் இருந்தது. அதில் நபிகளார் ஈலாவுக்குரிய காலத்தில் முழுமையாக ஒரு மாதம் தங்கியிருந்தார்கள். வீட்டின் தளபாடங்களாக ஒரு கட்டிலும் ஒரு பாயும் இருந்தன. மென்மையான மேலுறையைக் கொண்ட தலையணை ஒன்றும் நீர் ஏந்தும் பாத்திரமொன்றும் தண்ணீர் துருத்தி ஒன்றும் இருந்தன.

நபிகளாரின் உறைவிடம் தெய்வீக ஒளியின் ஊற்றாக விளங்கியது. நுபுவ்வத்தின் விளைநிலமாக இருந்தது. அதில் எந்த சந்தேகமும் இல்லை. எனினும், அங்கு உலகியல் விளக்குகள் இருக்கவில்லை. சட உலகில் மனிதர்கள் ஏந்தும் விளக்குகள் அங்கு ஒளிரவில்லை. நான் நபிகளாருக்குப் பக்கத்தில் உறங்கினேன். எனது இரு கால்களும் அவரது கிப்லாப் புறத்தில் இருந்தன. அவர் ஸஜ்தா செய்கின்றபோது எனது காலைத் தூக்கி தள்ளி வைப்பார்கள். அவர்கள் எழுந்து நிற்கின்றபோது மீண்டும் அதை விரித்து விடுவார்கள். எங்களது வீட்டில் அப்போது விளக்குகள் ஒளிரவில்லை.

நபிகளாரின் வீட்டில் ரஸூல் (ஸல்) அவர்களையும் ஆயிஷாவையும் தவிர வேறு யாரும் இருக்கவில்லை. சிறிது காலத்திற்குப் பின்பே அயல் வீட்டாரான பரீரா எனும் பெண் வந்தார். அவள் நபிகளாரும் ஆயிஷாவும் அவளது நண்பர்களாக இருக்க வேண்டும் என நிபந்தனையிட்டாள். தொடக்கத்தில் ஸவ்தாவும் ஆயிஷாவுமே நபிகளாரின் மனைவிகளாகக் காணப்பட்டனர். நபிகளார் ஒரு நாள் விட்டு ஒரு நாள் ஆயிஷாவின் வீட்டிலேயே தங்கி வந்தார்கள். நபிகளார் ஏனைய பெண்களை மணம் முடித்து ஸவ்தாவும் வயதானதற்குப் பின்னர் ஸவ்தாவின் இரவையும் ஆயிஷாவுடன் கழித்தார்கள். ஆறு நாட்களில் இரண்டு நாட்களை ஆயிஷாவுக்காக ஒதுக்கியிருந்தார்கள். அவை ஆயிஷாவினதும் ஸவ்தாவினதும் நாட்களாகும்.

வீட்டு விவகாரங்களில் பெருமளவு கவனம் இருக்கவில்லை. அதற்கான தேவைகள் அவர்களுக்கு இருக்கவுமில்லை. வீட்டில் சமைப்பதற்கு அடுப்பு மூட்டுவது மிகவும் குறைவாகவே இருந்தது. ஆயிஷாவே இது குறித்து அறிவிக்கின்றார். முஹம்மதின் குடும்பத்தினர் ஒருபோதும் வயிறு புடைக்க உண்டதில்லை. மூன்று நாட்களாக ஒரே ரொட்டியை சாப்பிட்டுக் கொண்டிருந்தோம்.

ஆயிஷா மேலும் அறிவிக்கின்றார்: சிலபோது முஹம்மதின் குடும்பத்தினரது வீட்டில் மாதக் கணக்கில் ரொட்டிகளோ வேறு உணவுகளோ சமைக்கப் படுவதில்லை. மற்றொரு அறிவிப்பில் முஹம்மதின் குடும்பத்தினரது வீட்டில் நெருப்பு எரியவில்லை.அவர்கள் ஈச்சம் பழத்தையும் தண்ணீரையும் கொண்டு காலம் கடத்தி வந்தனர்.

---

கம்பஹா மாவட்ட முஸ்லிம் கல்வி – 13

**கலாநிதிப் பட்டத்திற்காக றவூப் ஸெய்ன் மேற்கொண்ட கம்பஹா மாவட்ட இடைநிலைப் பாடசாலை மாணவர் இடைவிலகல் எனும் தலைப்பிலான ஆய்வின் அறிக்கை முக்கியத்தும் கருதி இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.**

# இடைவிலகிய மாணவர்களின் அனுபவப் பகிர்வு

கம்பஹா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 18 பாடசாலைகளிலிருந்து விலகிச் சென்ற 90 மாணவர்களுடன் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது. அதாவது ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் இடைவிலகிய 05 மாணவர்கள் நேர்காணலுக்கு உள்ளாக்கப்பட்டனர். இவர்களுள் தரம் 06 இலிருந்து உயர் தரம் முதலாம் ஆண்டில் இடைவிலகியோர் வரை உள்ளடங்குகின்றனர். இவர்கள் வழங்கிய தரவுகள் பகுப்பாய்வு செய்து இங்கு முன்வைக்கப்படுகின்றன.

**01. கல்வியின் பெறுமானம் பற்றிய மங்கலான புரிதல்**

தாம் கற்பதால் என்ன நன்மைகள் கிட்டும் அல்லது படிப்பதால் ஆன பயன் என்ன எனும் விடயத்தில் ஒரு தெளிவான புரிதல் இம்மாணவர்களிடையே இல்லை என்பது அவர்களுடனான நேர்காணல் மூலம் அவதானிக்க முடிந்தது. அதாவது கல்வி குறித்த ஒரு தெளிவான வழிகாட்டலும் ஊக்கமும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பது உரையாடல் மூலம் தெளிவானது. 20 சதவீதமான மாணவர்களுக்கு இந்தத் தெளிவு இல்லாமையால் அவர்கள் பாடசாலைக்கு வருவதும் வராததுமான ஒரு நிலைப்பாட்டிலேயே இருந்ததாகக் குறிப்பிட்டனர்.

பொதுவாக கல்விக்கு ஊக்கமளிக்கக் கூடிய வீட்டுச் சூழலோ, சமூக சூழலோ இவர்களுக்கு வாய்க்கவில்லை. அவர்களது குடும்பத்தில் படித்து முன்னேறிய முன்னுதாரணங்களும் இல்லை. கல்வியில் மாணவர் பருவத்திலுள்ளவர்களுக்கு தன்னியல்பான ஆர்வம் ஏற்பட வாய்ப்பில்லை. ஊக்கலும் தூண்டுதலும் இன்றியமையாதவை. ஆனால், அது அவர்களுக்குக் கிடைக்காமையால் நீண்ட நாள் வரவின்மைக்குப் பின்னர் அவர்கள் பாடசாலையிலிருந்து விலகியுள்ளனர்.

**02. நேரத்திற்கு உணவு கிடைக்காமை:**

நேர்காணலில் பங்குகொண்ட மாணவர்களில் 15 சதவீதமானவர்கள் தமக்குத் தகுந்த நேரத்திற்குக் காலை உணவு கிடைப்பதில்லை எனவும் சிலபோது பாடசாலை முடிந்து வந்தால் மதிய உணவு கூட கிடைக்காத சந்தர்ப்பங்களும் இருந்ததாகத் தெரிவித்தனர். பாடசாலை இடைவேளையின் போது ஏனைய மாணவர்கள் உணவகத்தில் அல்லது சிற்றுண்டிச்சாலையில் ஏதேனும் பணம் கொடுத்து வாங்கி உண்ணும் போது தாம் எந்த வசதியுமின்றி பாடசாலை வேளையில் பசித்திருந்ததாக இம்மாணவர்கள் குறிப்பிட்டனர். குடும்பத்தில் நிலவிய வறுமையும் பொறுப்பற்ற தந்தைமாருமே இதற்கான காரணமாகும்.



**03. கற்றல் சாதனங்கள் மற்றும் போதிய வகுப்புக் கட்டணம் இல்லாமை:**

இலவசக் கல்வி வழங்கப்பட்டாலும் மேலதிக பாடப்புத்தகங்கள், குறிப்புப் புத்தகங்கள், பென்சில், பேனை, புத்தகப் பை, உணவுப்பை என பல்வேறு கற்றல் சாதனங்களை ஒரு மாணவன் பணம் கொடுத்துக் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. மேலதிக வகுப்புக்கள் குறித்துக் கல்வியியலாளர்களிடையே நிலவும் வாத விவாதங்களுக்கப்பால் டியூஷன் வகுப்புக்குச் செல்லாமல் பரீட்சைகளில் சித்தியடைய முடியாத ஒரு சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. வறுமைப்பட்ட மாணவர்களுக்கு இதற்கான வாய்ப்புக்கள் முற்றிலும் கிடைக்காமல் போவதால் அவர்கள் முறைசார் கல்வியிலிருந்து விடைபெறும் நிலைக்குத் தள்ளப் படுகின்றனர்.

**04. ஆசிரியர்களின் பிழையான கையாள்கை**

வகுப்பறைகளில் ஆசிரியர்கள் தம்மை அவமானப்படுத்தியதும் ஏனைய மாணவர்கள் மத்தியில் வைத்து இழக்காரமாக நடாத்தியதுமே தாம் பாடசாலையை விட்டு விலகியமைக்கான உடனடிக் காரணம் என சுமார் 04 சதவீதமான மாணவர்கள் தெரிவித்தனர். பிற மாணவர்களுக்கு முன்னால் உடல் தண்டனை [illegible] கற்றவன், [illegible] வார்த்தைப் பிரயோகம், ஊரின் ஒதுக்குப் புறங்களில் வாழும் பிள்ளைகள் மீதான ஓர வஞ்சனை, சமூக ஒதுக்கம் (Social Seg regation), மாணவர்களது தெருமோஸ்தர்கள் (Street Fashion), ஆசிரியர்களால் கையாளப்பட்ட விதம் போன்றன கல்விச் சூழல் இல்லாத குடும்பங்களில் இருந்து வகுப்பறைக்கு வரும் மாணவர்களின் மனோநிலையை எதிர்மறையாகப் பாதித்துள்ளதோடு அவர்களின் கல்வி மீதான ஆர்வத்தை மழுங்கடித்து பாடசாலையிலிருந்து இடைவிலகவும் காரணமாகியுள்ளது. (இது தொடர்பான சில சம்பவக் கற்கைகளை (Case Studies) அதிபர்களும் ஆய்வாளருடன் பகிர்ந்து கொண்டனர்.)

உதாரணமாக, தலைமுடியை சற்று வித்தியாசமாகக் கத்தரித்துச் சென்ற ஒரு மாணவன் ஆசிரியரால் கண்டிக்கப்பட்டதை அடுத்து அவன் பாடசாலையிலிருந்து நின்றுவிட்டான். அவனது குடும்பம் மாட்டிறைச்சிக் கடையுடன் சம்பந்தப்பட்டது.

**05. பெற்றோர் வெளிநாடு செல்லல்:**

குறிப்பாக தாய் வெளிநாட்டு வேலைக்காகச் சென்ற தந்தை மையக் குடும்பங்களில் வளரும் பிள்ளைகள் கல்வியில் பின்னடைந்துள்ளனர் என்பதை ஏலவே இலங்கையில் இடம்பெற்ற சில ஆய்வுகள் நிறுவியுள்ளன. இதனை இலக்கிய மீளாய்வில் ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் மாபோளை, வத்தளை, அக்பர் நகர், வெலேகொட போன்ற பகுதிகளில் தாய்மார் வெளிநாடு சென்ற குடும்பத்தைச் சேர்ந்த 05 சதவீதமான பிள்ளைகள் பாடசாலைக் கல்வியிலிருந்து இடைவிலகியுள்ளதை அவதானிக்க முடிகிறது. பெற்றோர் பிள்ளைகளுடன் எவ்வளவு காலத்தைச் செலவழிக்கின்றார்களோ, எவ்வளவு தூரம் அருகாமையில் இருக்கின்றனரோ (Need of Attachment) அந்தளவுக்கு அவர்களது மனவெழுச்சிகள் ஆரோக்கியமாகவும் கற்றலுக்கு சாதகமாகவும் அமையும். மறுதலையாக, பெண்கள் (தாய்மார்) மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப்பெண்களாகச் செல்வது அவர்களது பிள்ளைகளின் கல்வியை மிக மோசமாகப் பாதிக்கின்றது. இத்தகைய மாணவர்களின் அடைவு மட்டம் குறிப்பிட்ட பாடங்களில் மிகக் குறைவு என்பதோடு சில மாணவர்கள் காலவோட்டத்தில் பாடசாலைக் கல்வியிலிருந்து இடைவிலகிச் செல்கின்றனர்.

தந்தைமார் உழைப்பில் ஈடுபட வெளியே சென்று மாலை வேளையிலேயே வீடு திரும்புவதால் பிள்ளைகளின் கல்வியையோ நடத்தைகளையோ கவனிக்க நேரமில்லை. வீட்டில் பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யவோ கற்பிக்கவோ வாய்ப்பில்லை.

**06. பாதுகாவலர்களால் அல்லது பொறுப்பாளர்களால் சுரண்டப்படல்:**

வெளிநாட்டுப் பணிப்பெண்களாகத் தாய்மார் செல்லும் குடும்பங்களில் விவாகரத்து நடைபெறும்போது அதாவது வெளிநாடு செல்லும் பெண் விவாகரத்துப் பெற்றவளாக இருக்கும்போது அவள் தனது பாடசாலை செல்லும் பிள்ளையைக் குடும்பத்திலுள்ள வேறு எவரிடமாவது ஒப்படைத்து விட்டுச் செல்கிறாள். இவ்வாறு பாதுகாவலராகப் பொறுப்புச் சாட்டப்படுபவர் அப்பிள்ளை களை முறையாக நடாத்துவதில்லை. மாற்றான் தாய் மனப்பான்மையுடன் நடாத்துவதோடு அவரது வேலைகளைக் கவனிக்கும் இச்சிறார்கள் மீது சுமத்துகின்றனர். கடைக்குச் செல்லுதல், விறகு வெட்டுதல், கழிப்பறையைச் சுத்தம் செய்தல் போன்ற வேலைப்பழுக்கள் இச்சிறார்கள் மீது திணிக்கப்படுகின்றன. இத்தகைய மாணவர் கள் இவ்வேலைப்பழுவால் வெறுப்படைந்து கால வோட்டத்தில் பாடசாலைக் கல்வியிலிருந்து இடைவிலகுகின்றனர். மேலே குறிப்பிட்ட பிரதேசங்களில் இது போன்ற சம்பவக் கற்கைகள் பல பதிவாகி யுள்ளன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# குத்ஸ் அணியின் புதிய தலைவராக இஸ்மாஈல் கானி



ஈரான் புரட்சிப் படையின் கிளையான குத்ஸ் அணிக்குத் தலைமை தாங்கிய சுலைமானி அமெரிக்க விமானப் படையினால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து புதிய தலைவராக இஸ்மாஈல் கானி நியமிக்கப்பட்டுள்ளார். சுலைமான் படுகொலைக்கு ஈரான் இன்னும் முறையாகப் பதிலளிக்கவில்லை. அமெரிக்கப் படையினருக்கு ஈரான் உரிய முறையில் பதிலடி வழங்கும் என்று இஸ்மாஈல் கானி சூளுரைத்துள்ளார்.

இஸ்மாஈல் கானியை குத்ஸ் படையின் தலைவராக நியமிக்கும் விழாவில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அமெரிக்கா மிக வஞ்சகமான முறையில் சுலைமானியைக் கொன்றொழித்தது. அதற்கு நாம் சரியான பதிலை வழங்குவோம் என கானி தெரிவித்தார். ஜனவரி 3 இல் பக்தாதின் பசும் சதுக்கத்தில் சுலைமானி படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அன்று முதல் மத்திய கிழக்கிலிருந்து அமெரிக்க இராணுவம் வெளியேற வேண்டும் என ஈரானின் ஆன்மீகத் தலைவர் அலி ஹுஸைன் கொமைனி தெரிவித்து வருகின்றார்.

125,000 படையினரைக் கொண்ட இஸ்லாமியப் புரட்சிப் படையின் ஒரு பிரிவே குத்ஸ் படை என்பது குறிப்பிடத்தக்கது. ஈரான் புரட்சிப் படை அந்நாட்டில் உத்தியோகபூர்வ அரச படைக்கு வெளியில் செயல்படும் ஒரு பாரா துருப்பு என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் கொமைனிக்கு மட்டுமே பொறுப்புக் கூறல் வேண்டும். அதன் கிளையான குத்ஸ் மத்திய கிழக்கில் ஈரானின் வெளிநாட்டுச் செல்வாக்கைப் பெருக்குவதற்குப் பயன்படுத்தப்படும் இராணுவ அணி என்பது குறிப்பிடத்தக்கது.

# 22 செல்வந்தர்களே உலகப் பொருளாதாரத்தை தம் வசம் வைத்துள்ளனர் - ஒக்ஸ்பார்ம்

உலகின் 22 செல்வந்தர்களே பல மில்லியன் கணக்கான மக்களுக்குச் சொந்தமான சொத்துக்களுக்குச் சமமான சொத்தினை வைத்திருப்பதோடு, உலகப் பொருளாதாரத்தில் பெரும் பகுதியை கட்டுப்படுத்துகின்றனர் என ஒக்ஸ்பார்ம் இன்டர்நெஷனல் எனும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாளாந்தம் இருப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்குமான இடைவெளி அதிகரித்துக் கொண்டே செல்கின்றது என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. பெண்கள் இந்த இடைவெளியின் தாக்கத்தை அதிகம் உணர்வதாக ஒக்ஸ்பார்ம் அறிக்கை கூறுகின்றது. ஆபிரிக்காவிலுள்ள 325 மில்லியன் பெண்களிடம் உள்ள சொத்துக்களை விட உலகிலுள்ள 22 செல்வந்த ஆண்கள் அதிகளவு சொத்தினை வைத்துள்ளனர்.




சுவிட்சர்லாந்தில் நடைபெறவுள்ள உலகப் பொருளாதார மாநாட்டுக்கு முன்பதாக ஒக்ஸ்பார்ம் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. இம்முறை உலகப் பொருளாதாரத்தில் பெண்களின் வகிபாகமும் அவர்களது கீழ்நிலையும் ஒக்ஸ்பார்ம் ஆய்வறிக்கையில் பிரதானப்படுத்தப்பட்டுள்ளது. சமத்துவமின்மை, வறுமை போன்றவற்றால் உலகளவில் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது பெண்கள் என இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தரமான கல்வியைப் பெறுபவர்களில் பெண்களின் வீதாசாரம் ஒப்பீட்டு ரீதியில் குறைவாகும். உலகளவில் உள்ள அமைச்சரவையில் பெண்களின் வீதாசாரம் 18 ஆகும். உலகின் பாராளுமன்ற உறுப்பினர்களில் 24 வீதமானவர்களே பெண்கள். உலக வங்கியின் அறிக்கைப் படி உலகப் பெண்களில் அரைவாசிப் பேர் நாளொன்றுக்கு 5.5 டொலருக்கும் குறைவான வருமானத்தையே பெறுகின்றனர். அவர்களால் குறைந்தது மருத்துவசாலைக் கட்டணத்தைக் கூட செலுத்த முடியவில்லை.

460 கோடி மக்களில் 2153 பில்லியனர் உள்ளனர். அவர்களிலும் 22 பேர் உலகத்தின் ஏனைய சனத்தொகையினரிடம் உள்ளதை விடவும் அதிகமான சொத்துக்களைக் கொண்டுள்ளனர்.

## சர்வதேசப் பார்வை

# மியன்மாரில் போஉக் குற்றங்கள் நடந்துள்ளன. ஆனால் இனப்படுகொலை இல்லையாம்



2017 இல் மியன்மாரின் ரெக்கைன் மாநிலத்தில் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்க்கப்பட்ட படுகொலை மற்றும் அடக்குமுறை குறித்து விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக்குழு மியன்மாரில் சில இராணுவ அதிகாரிகள் போர்க் குற்றங்களில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இனப்படுகொலை இடம்பெறவில்லை எனத் தெரிவித்திருப்பது ஐ.நா.வின் நம்பகத் தன்மையில் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சுயாதீன விசாரணைக் குழு என்ற பெயரில் கடந்த மூன்றாண்டுகளாக மியன்மார் விவகாரம் குறித்து விசாரணை நடத்திய ஆணைக்குழுவே இவ்வாறு தனது இறுதி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அறிக்கை வெளிவருவதற்கு சில நாட்களுக்கு முன்னரேயே மியன்மாரில் இடம்பெறும் இனப்படுகொலைகளை நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் நோக்கில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் செயல்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

மியன்மார் படையினர் போர்க் குற்றங்களில் ஈடுபட்டனர். அப்பாவி கிராம மக்களைக் கொலை செய்தனர். மனித உரிமைகளை பெருமளவு மீறினர். அவர்களது வீடுகளை அழித்தனர். ஆனால், அவர்கள் இனப்படுகொலை செய்யவில்லை என்று அறிக்கை வெளியிட்டிருப்பது ஆச்சரியமாக உள்ளது. குறிப்பிட்ட ஒரு சமூகக் குழுமத்தை இன, மொழி மற்றும் மத அடிப்படையில் வேறு பிரித்துக் கொல்வதே இனப்படுகொலையாகும். மியன்மாரில் நடந்தது தெளிவான இனப்படுகொலையே. அவ்வாறிருக்கையில், இடம்பெற்றதெல்லாம் போர்க் குற்றமே என்றும் இனப்படுகொலை இல்லை என்றும் குறிப்பிடுவது வினோதமானது என பூகோள நீதி மையத்தின் தலைவர் அகில ராதா கிருஷ்ணன் விமர்சித்துள்ளார்.

# லிபியாவுக்கான ஆயுதப் பரிமாற்றம் மட்டுப்படுத்தப்படும்



லிபியாவில் இடம்பெற்று வரும் இரத்தக் களரியை உடனடியாக நிறுத்தும் நோக்கில் எதிர்கால ஆயுதப் பரிமாற்றம் மட்டுப்படுத்தப்படும் என பல்வேறு வெளிநாட்டு அரசுகள் உடன்படிக்கை செய்துள்ளன. வெளிநாட்டுத் தலையீடுகளும் குறைக்கப்படும் என அவை தெரிவித்துள்ளன.

ஜேர்மன் தலைவர் அஞ்சலா மார்கலை மேற்கோள் காட்டி ஐ.நா. பாதுகாப்புச் செயலாளர் இத்தகவலை வெளியிட்டுள்ளார். லிபிய சமாதானத்திற்கான ஆரம்ப செயல்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

லிபியாவுக்கான சமாதான பாதை வரைபடத் திட்டத்தில் எதிர்கொள்ளப்படும் அனைத்து விதமான நெருக்கடிகளும் தாண்டிச் செல்லப்படும் என மார்கல் தெரிவித்தார். இதற்காக ஐரோப்பிய மற்றும் மேற்கு நாடுகள் தொடர்ந்தும் ஒத்துழைப்புத் தருவதாக உறுதியளித்துள்ளன என ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஓமானின் புதிய சுல்தான் ஹைதம் முஸன்தம் தீபகற்பத்தைத் தக்கவைப்பாரா?

சுல்தான் காபூஸ் மரணித்தத்தைத் தொடர்ந்து அடுத்த சுல்தானாகப் பதவியேற்றுள்ள ஹைதம், ஓமானுக்குச் சொந்தமான முசன்தம் எனப்படும் தீபகற்பத்தைப் பாதுகாப்பதில் பெரும் சவாலை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. காபூஸின் மரணத்தைத் தொடர்ந்து ஓமானில் ஓர் அரசியல் திரிசங்கு நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.



பிராந்தியத்தில் ஓமானின் ராஜதந்திர பங்களிப்பு அதன் நில ஒருமைப்பாடு, அரசியல் ஸ்திரப்பாடு என்பவை குறித்து புதிய சுல்தான் எவ்வாறான, தீர்க்கமான நிலைப்பாடுகளை எடுக்கப் போகின்றார் என்பது மங்கலாக உள்ளது என்று கூறப்படுகின்றது. ஏனெனில் மரணித்த சுல்தான் காபூஸ் நாட்டை முறையாக நிர்வகிப்பதிலும் எண்ணெய் வளத்தை தேசிய அபிவிருத்திக்குப் பயன்படுத்துவதிலும் வெளிநாட்டு ஊழியர் படையை முகாமை செய்வதிலும் தனித் திறமை பெற்றிருந்தார். ஓமானை ஒரு சிறந்த நவீன தேசமாகக் கட்டியெழுப்புவதில் அவரது பங்கு அளப்பரியது. அதனால் காபூஸின் இழப்பு ஈடுகட்ட முடியாது என்றே பெரும்பாலான ஓமானியர்கள் கருதுகின்றனர்.

ஓமான், ஈரானுடன் புவி சார்ந்த சில பிரச்சினைகளைக் கொண்டுள்ளது. ஹுர்மூஸ் நீரிணைக்குத் தெற்குப்புறமாக உள்ள முசன்தம் தீபகற்பத்தில் காபூஸ் அரசே இதுவரை கட்டுப்படுத்தி வந்தது. தற்போது ஓமானை அண்டியுள்ள தீவுகளைக் கட்டுப்படுத்துவதில் புதிய சுல்தான் ஹைதம் பின் தாரிக் அஸ்ஸைத் எந்தளவு உறுதியான நிலைப்பாட்டுடன் இருப்பார் என்பது சந்தேகத்திற்குரியது.

# செல்வச் செழிப்பு மிக்க கனடாவில் மில்லியன் கணக்கானோர் பட்டினி

## - கனேடிய மருத்துவக் கழகம் அறிக்கை

கனடா ஒரு செல்வச் செழிப்பு மிக்க நாடாக விளங்குகின்றபோதும் பட்டினியால் இறக்கின்ற மக்கள் தொகை அங்கு அதிகரித்து வருவதாக கனேடிய மருத்துவக் கழகம் தெரிவித்துள்ளது. இது குறித்து அந்நிறுவனம் மேற்கொண்ட ஆய்வினை 20-01-2020 இல் அது வெளியிட்டுள்ளது. கென்சரைத் தவிர கனேடியர்களின் இறப்புக் காரணமான பிற நோய்களில் அநேகமானவற்றுக்கு போஷாக்கின்மையும் உணவுப் பாதுகாப்பின்மையுமே பிரதான காரணம் என அவ்வறிக்கை கூறுகின்றது.

தற்கொலை, தொற்றுநோய் என்பன கனடாவில் இரண்டு மடங்கு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. உலகத்தில் தலைசிறந்த பொருளாதாரமாகக் கருதப்படும் கனடாவில் மக்கள் பட்டினியை எதிர்நோக்கியிருப்பது ஆச்சரியமளிக்கின்றது என தோமஸ் ரொய்டர்ஸ் எனும் பல்கலைக்கழகப் பேராசிரியர் கருத்து வெளியிட்டுள்ளார். கனேடிய மருத்துவக் கழகத்[illegible] விதழில் இது தொடர்பான [illegible] வெளிவந்துள்ளன.

4 மில்லியன் கனேடியர்கள் போதுமான அளவு உணவைப் பெறவில்லை என உத்தியோகபூர்வத் தரவுகள் தெரிவிக்கின்றன. தரத்திலும் அளவிலும் இவர்கள் உணவுத் தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது. பொதுமானளவு உணவு கிடைக்கவில்லை [illegible] அழுத்தங்களையும் உடல் ரீதியான நோய்களையும் ஏற்படுத்துகின்றன. 2019 இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தற்போது வெளியாகி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



உலகளவில் 200 கோடி மக்கள் போதுமான, ஆரோக்கியமான உணவு இல்லாமையினால் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். ஐரோப்பாவிலோ வட அமெரிக்காவிலோ 8 வீதமான மக்கள் இத்தகு நிலைமைக்கு ஆட்பட்டுள்ளனர் என்று அந்த அறிக்கை கூறுகின்றது. 5 இலட்சம் கனேடியர்களை அடிப்படையாக வைத்து இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org